
Registered as a News Paper in Sri Lanka දිනමුරසු වාරමලර්

பக்கம் 24
ரூபா: 30.00
நவம்பர் 12 - 18, 2015
முரசு 1143

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY




## மத்தியில் முத்தியது மாகாணத்தில் தீ பத்தியது





## இந்தியாவில் சீனத் தலைவரின் தலையிடி



## வயதான ஆண்களைத் திருமணம் செய்யலாமா?

## அம்பிகைக்கு அணிவிக்க வேண்டிய மலர்கள்

பௌர்ணமி தினங்களில் அம்பிகை வழிபாடு மிகவும் சிறப்பானது என்று சித்தர் பெருமக்கள் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். காட்சிதருவதாக புராணங்களும் சாத்திரங்களும் கூறுகின்றன.

ஒளிமயமான அன்னைதேவி பராசக்தியை, ஒளிமயமான பௌர்ணமி தினத்தில் பூசைகள்செய்து வழிபாடு செய்யும்போது அன்னையின் பரிபூரண அருள் கிடைப்பதோடு விசேஷமான பலன்கள் நமக்கு கிடைக்கிறது. கிரகங்களின் அதிர்வுபெற்ற நாள் பௌர்ணமி நாளாகும்.

ஏழு கிரகங்களிற்குரிய நாட்கள் சேரும்போது (ஞாயிறு திங்கள் என்று எந்த நாளில் பௌர்ணமி வருகிறதோ) அதற்கேற்ப மனிதனின் அறிவு, புத்தி, மனம் மற்றும் சரீரத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பௌர்ணமியில் தேவி 'ஸ்ரீசந்திரிகா' என்ற பெயர் கொண்டு பிரகாசித்து அருள்பாலிக்கிறார். துர்க்காதேவியை பௌர்ணமியில் முறைப்படி வழிபட்டுவந்தால் நாம் விரும்பியதெல்லாம் நிறைவேறும். துர்க்கையென்றால் துக்கங்களை அழிப்பவள் ஆகும்.

## உண்மை வழிபாடு

உண்மையான வழிபாடு என்றால் என்ன? என்பதற்கு, இயேசு சமாரியப்பெண் உடனான இந்த உரையாடலில் நமக்குப் புரிய வைக்கிறார். யூதப்போதகரின் கருத்துப்படி, சமாரியர்கள் மூடநம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். அவர்களின் வழிபாடு பயத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. அன்பின் அடிப்படையில் அல்ல. அவர்கள் வணங்கிய பல தெய்வங்களில் யாவே இறைவனும் இடம்பெற்றிருந்தார். அதுவும் பயத்தின் அடிப்படையில்தான்.

கடவுளை நாம் பயத்தின் அடிப்படையில் வணங்குவது சரியான வழிபாடாக இருக்கமுடியாது. கடவுள் அன்புமிக்கவர். கடவுள் இரக்கமிக்கவர். கடவுள் நம்மை பயமுறுத்துகிறவர் கிடையாது.

மாறாக, நாம் தவறுசெய்தாலும், நம்மை தொடர்ந்து அன்பு செய்கிறவர். நம்மை வழிநடத்துகிறவர். கடவுள் அன்பானவர் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தால்தான், நாம் அவரை சுதந்திரமாக வழிபடமுடியும். இறுக்கம் தளர்ந்து, உண்மையான மனத்தோடு. முழுஆன்மாவோடு அவரை நாம் வழிபடுவோம். பயத்தின் அடிப்படையில் வழிபடுவது உண்மையான வழிபாடாக இருக்கமுடியாது.

## வியாபாரத்தில் வெற்றி!

கடைக்காரரர், வாங்கவருபவரிடம் அன்புடன் நடந்துகொள்ளும் தன்மைய்யை அனுசரித்தே வியாபாரத்தின் வெற்றி அமைந்துள்ளது. அன்புடனும், முக மலர்ச்சியுடனும் நடந்துகொள்ளும் வியாபாரியின் விசயத்தில், அல்லாஹ்வின் அருளுக்கும் அபிவிருத்திக்கும் பெருமானார்(ஸல்) அவர்கள் பிரார்த்தனை புரிந்துள்ளார்கள்.

"பொருட்களை விற்கும்போதும், கொடுத்த கடன்களை கேட்கும்போதும், இனிய முறையில் நடந்துகொள்ளும் மனிதருக்கு இறைவன் அருள்புரிவானாக!" என்ற நபியவர்களின் நல்வாக்கு மிகத் தெளிவாயடைந்துள்ளது.

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

## தேன் கிண்ணம்



### உன்னிடம் ஒரு வேண்டுகோள்

என் அன்பிற்கு உரியவளே!
நீ பிரிந்ததன் காரணம் - நீ
சொல்லவில்லை எனக்கு
ஆனால் ஏன்
என்னை காதலித்தாய்? - நீ
அதையாவது சொல்லிவிடு...

காதல் என்றாலேயே
கருந்தேள் கொட்டியவனாக,
பெண்களைக் கண்டாலே
பிடிக்காதவனாக
என் வழியிலேதானே சென்றேன்...?

நானா உன்பின்னால்
அலைந்தேன்?
நானா உன்னை
காதலிக்க வற்புறுத்தினேன்...?

நீயே வந்தாய்;
நீயே காதலித்தாய்;
நீயே என்னைக் காதலிக்க வைத்தாய்...

இத்தனையும் செய்துவிட்டு
இன்னொருவனை காதலிக்கிறேன்
என்றாயே!

இன்று
துரோகியான உன்னை
மறக்கவும் முடியாமல்...
மன்னிக்கவும் முடியாமல்...
அதுகூட பரவாயில்லை.
உன்னுடைய
இன்றைய காதலனையாவது
- தயவுசெய்து
ஏமாற்றிவிடாதே....

ஏனெனில்
அவனாவது
என்னைப் போல்
புலம்பாமல் இருக்கட்டும்.

**ரேணுசாந்த், கிளிநொச்சி.**



## பிணவாடைகளும் பிரியமற்ற மண்நேசிப்பும்

இடுகாடுகளுக்கு மத்தியில்
எனக்கான
வாழ்வைத் தொடரவேண்டுமென்ற
நிர்ப்பந்தம்
இப்பொழுது எனக்கு.

சகிக்க முடியவில்லை
இந்தப் பிணம் தின்னும்
மண்மீதிருந்து வாழ்வதற்கு.

ஆகமங்கள்... ஆசாரங்கள்...
பண்பாட்டு விழுமியங்கள்...
இந்த மண்மீதான
எஞ்சிய எதிர்கால நேசிப்புக்கள்...
அனைத்தையும்
அழித்துக்கொண்டு செல்கின்றது
பிணவாடைகளைச் சுமந்துவரும்
காற்று.

என் நாசிகள் உள்ளீர்க்கும்
அந்தப் பிண நாற்றத்திலிருந்து
தோற்றம் கொள்கிறது எனக்குள்
என்னை யறியாமலே திகில்!

இடுகாடுகளின்
வெளித்தெரியாத் தோற்றங்களிலிருந்து
முக்கல்கள்... முனகல்கள்...
அழுகைகள்... அலறல்கள்...
திரும்பும் இடமெங்கும் எதிரொலிப்பனவாக
என் மனப் பிரமைக்குள்.

நிதானம் எனைவிட்டு விலகி
நீண்ட நாட்களாகின்றன.
அந்தரப்படும் மனதுக்குள்
ஆனந்தம் கொள்கிறது அச்சம்.

இந்தப் பிணம் தின்னும் மண்மீது
எனக்கிப்போ பிரியமில்லை.
ஏனெனில்,
இப்பொழுதும்
என்னைப் பின் தொடருகிறது
கைவேலி – முள்ளிவாய்க்கால்வரை
கற்றுக்கொண்ட பாடங்கள்
செத்துப்பிழைத்த
எனது கடந்தகால சரிதமொன்றுடன்!

**அலெக்ஸ் பரந்தாமன்**

## அழகிய நட்பு



கழுவுற மீனில்
நழுவுற மீனாய்
இல்லாது அன்பதை
கல்மேல் எழுத்தாய்
கட்டிக்காப்பதே
அழகிய நட்பு!

கள்ளங்கபடமற்ற
வெள்ளை உள்ளத்தின்
மழலைச் சிரிப்பின்
உதிர்ப்பாய் உதிர்த்து
மகிழ்வதே
அழகிய நட்பு!

அப்பழுக்கற்ற புனிதத்துடன்
ஏற்றத்தாழ்வற்ற மனிதத்துடன்
புறப்பட்டுவிட்ட பயணத்தின்
பயன்பாடானதே
அழகிய நட்பு!

சந்தர்ப்பம் சாதகமாக்கப்பட்டு
சத்தியம் நிலைநாட்டப்பட்டு
சம்பவங்கள் சாத்தியமாக்கலே
பண்பாடோங்கியது அழகிய நட்பு!

**அப்ரார் ஏ.அஸீஸ்,**
**யாழ்ப்பாணம்.**

## வாசகர்சாலை

முரசுக்கு ஆயிரம் கோடி வணக்கம்!

முரசுக்கு நான் தீவிரவாசகன். அற்புதன் காலத்தில் தினமுரசை வரிசையில் நின்று வாங்கிப் படித்த கால்த்தில் இருந்து வாங்கிப் படித்துக் கொண்டிருக்கின்றேன். எனது இளமைக் காலத்திலிருந்து எனது முதுமை வரை தினமுரசை வாசித்துவருகின்றேன். முரசில் விறுவிறுப்பு தேவை. மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது. அதை வரவேற்கின்றேன். ஆனால் சில ஆக்கங்களை நிறுத்திவிட்டதே முரசு!?

**எம்.நிஸார்,**
**மருதமுனை.**

### நவம்பர் - 12



"நோயாளியைப் பார்க்க ஒரு மைல் தூரம் செல். இரண்டு பேர்களுக்கு இடையில் சமாதானம் செய்ய இரண்டு மைல் தூரம் செல். ஒரு நண்பனைக் காண மூன்று மைல் தூரம் செல்."

ஆதி சங்கரர்

# அவுஸ்திரேலியாவில் சுமந்திரனுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம்



அவுஸ்திரேலியாவுக்கு விஜயம்செய்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரத்தில் உள்ள மண்டபம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடைய அரசியல் செயற்பாடுகள் தமிழ் மக்களின் தேசிய உணர்வைக் கொச்சைப்படுத்தும்வகையில் அமைவதாக குற்றஞ்சுமத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் அவுஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர் அமைப்புக்களைச் சந்திப்பதற்கும் சுமந்திரன் அங்கு சென்றிருந்தார். இந்த நிலையில் அங்குசென்ற புலம்பெயர் தமிழர்கள் பலர் சுமந்திரனின் செயற்பாடுகள் தொடர்பாக கேள்வியெழுப்பினர்.

ஈழத்தமிழர்களின் போராட்டத்தை காட்டிக்கொடுக்கும் வகையில் செயற்படுவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசுவாசியாகவும் செயற்படுவதாகவும் புலம்பெயர் தமிழர்கள் குற்றஞ்சுமத்தினர்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு சுமந்திரன் பதிலளிக்க முற்பட்டபோது வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன் நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் நிலைமையை சமாளித்ததாக அங்கிருக்கும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## நிலையான மகிழ்ச்சி எல்லோருக்கும் அமைய வேண்டும்



இந்தத் தீபாவளியும் எனக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை. யுத்தம் முடிவுக்கு வந்து ஆறு வருடங்கள் மறைந்தோடிவிட்டபோதும், யுத்த பாதிப்புக்களிலிருந்தும், அதன் வடுக்களிலிருந்தும் எமது மக்கள் முழுமையாக மகிழ்ச்சி கொள்ளமுடியவில்லை. என்று செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது, புதிய ஆட்சி மலர்ந்துள்ளநிலையிலும், தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்தவர்கள் அரசோடு இணக்க அரசியல் நடத்துகின்ற நிலையிலும், இலங்கைச் சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படாததும், இன்னும் அகதி முகாம்களில் துயரப்படும் எமது மக்கள் அவர்களது சொந்த வாழ்விடங்களில் அர்த்த பூர்வமான வகையில் மீளக்குடியேற்றம் செய்யப்படாததும் கவலைக்குரிய விடயங்களாகும்.

ஆனாலும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தீபாவளியை கொண்டாடும் உறவுகளுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். யுத்தமில்லாத எமது தேசத்தில், அகதி வாழ்வும், அபகரிப்புக்களும், நியாய மறுப்புக்களும் இல்லாமல் செய்யப்பட்டு அனைவரும் மகிழ்ச்சியோடு வாழவும், மற்றவரோடு மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளவும் ஏதுவான இயல்பு நிலைமைகள் உருவாக்கப்பட்டு எதிர்காலங்களில் அனைவரிடத்திலும் மகிழ்ச்சி நிரந்தரமாக. கிடைப்பதற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**என்றும் மக்கள் சேவையிலுள்ள**
**டக்ளஸ் தேவானந்தா பா.உ**
**செயலாளர் நாயகம்**
**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி**

## டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இரத்த தானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் நலன் விரும்பிகளினால் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பிறந்த தினத்தை(10) முன்னிட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு கடந்த(09.11.2015)காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.


முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) இரத்ததானம் செய்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும்



நலன்விரும்பிகளால் நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவருமான சி.தவராசா மற்றும் பிரதேச பொறுப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள் நலன்விரும்பிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் பங்குகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

## விக்னேஸ்வரனை நீக்குவேன் சுமந்திரன் உறுதி



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கட்சியிலிருந்து நீக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமது கட்சியிடம் கேட்டிருக்கின்றார். ஆஸ்திரேலியா சென்றிருக்கும் அவர் அந்நாட்டு வானொலி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முதலமைச்சர் விக்னேஸ்வரனை இந்தப் பொறுப்புக்கு அழைத்துவந்தவர்களில் நானும் முக்கியமான ஒருவன். அவருக்கு வடமாகாண சபையை நிர்வகக்கின்ற பொறுப்பை கட்சிகொடுத்து இருந்தது. கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது கட்சிக்கு சார்பாகச் செயற்படாமையே எமக்கும் அவருக்கும் இடைவெளி உருவாக காரணம் தேர்தலுக்காக நிதிதேவை கனடா சென்று அதனை பெற்று வாருங்கள் என்று அவரிடம் கேட்டிருந்தோம்.

ஏனெனில் வடமாகாண சபைத் தேர்தலின்போது நானும் சம்பந்தனும் கனடா சென்று நிதி உதவிகளைப் பெற்றுவந்தோம். இந்தத் தடவை நாங்கள் போகமுடியாது நங்கள் அதனைச் செய்யுங்கள் என்று அவரிடம் நான் கேட்டேன். அதற்கு அவர், நீண்டதூரம் பயணம் செய்ய முடியாது முழங்கால் வலி என்று தெரிவித்தார். அதேகாலகட்டத்தில் அவர் அமெரிக்கா சென்றார் அப்போதும் அமெரிக்கா செல்கிறீர்கள் ஐயா ஒருமணி நேரம் கனடாவுக்கும் சென்று வாருங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் தனக்கு நேரமில்லை என்று சொல்லி தட்டிக்கழித்தார். பின்பு தான் தெரிந்தது தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடமனமில்லாமல் கட்சிக்கு எதிராக அறிக்கை வெளியிட்டிருந்தார். நடுநிலையாக இருக்கப் போகிறேன், ஊமையாக இருக்கப் போகிறேன் என்றார்.

எப்படியானவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்று அடையாளம் காட்டுகின்றபோது தெளிவாகவே மாற்றுக் கட்சியை சுட்டிக்காட்டி அறிக்கைவிட்டிருந்தார். எந்தவொரு கட்சியும் தனது உறுப்பினர் இவ்வாறு செய்வதை அனுமதிக்காது. முதலமைச்சராக இருக்கலாம். இளைப்பாறிய நீதிபதியாக இருக்கலாம். இந்த விடயத்தில் அவரைக் கட்சியிலிருந்து நீக்குமாறு தனிப்பட்ட முறையில் நான் கேட்டிருக்கின்றேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எங்கள் மத்திய குழு உறுப்பினர் இருவர் மக்களை நடுநிலை வகிக்கச் சொன்னார்கள். கட்சியின் மகளிர் அணிச் செயலாளரும், இளைஞர் அணிச் செயலாளரும் அப்படிச் செய்தமைக்காக அவர்களை கட்சியிலிருந்து இடைநிறுத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருந்தோம்.

எமது கட்சி போட்டியிடாத அந்தத தேர்தலில் வேறொருவருக்கு வாக்களிக்குமாறு கட்சி எடுத்த தீர்மானத்துக்கு அவர்கள் நடுநிலை வகிக்கச் சொன்னதற்காக அவர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது எமது கட்சி போட்டியிட்ட பிரதானமான இந்தத் தேர்தலின் போது இவர் இந்த மாதிரியாகச் செயற்பட்டமை கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில்கூட ஒரு நீதியில்லாத செயற்பாடு என்பது எனது நிலைப்பாடு

கட்சியின் இரண்டு செயலாளர்களை நாங்கள் போட்டியிடாத தேர்தலில் நடந்து கொண்ட முறைக்கு எதிராக நடவடிக்கை எடுத்துக்கொண்டு, நாங்கள் போட்டியிட்ட முக்கியமான தேர்தலில் அதைவிட மோசமான முறையில் நடந்துகொண்ட ஒருவருக்கு எதிர்க கட்சி நடவடிக்கை எடுக்காமல் இருப்பது தவறானது என்ற வாதத்தை எவரும் மறுக்கமுடியாது.

நான் அவரிடம் விளக்கம் கோரவேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறேன். அதை இன்னும் கட்சிசெய்யவில்லை. விரைவில் கட்சி அதைச் செய்தே ஆகவேண்டும். என்றார்.

## உதயன் பத்திரிகை நடத்துபவர்கள் றோட்டில் பிச்சை எடுக்கலாம்!

### அன்ரனி ஜெகநாதன் தெரிவிப்பு




யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையை நடாத்துபவர்கள் அதை நடாத்துவதற்குப் பதிலாக தெருவில் நின்று பிச்சை எடுக்கலாம் எனத் வடக்கு மாகாணசபை அமர்வில் தெரிவித்துள்ளார் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்புத் தொடர்பில் தன்னைக் கருத்துக்கேட்ட உதயன் பத்திரிகை ஊடகவியலாளர் அதன்பின்னர் தன்னிடம் ஒரு அறிக்கையைப் பெற்றுவிட்டு அதனைப் பின்னர் மாற்றி செய்திபோட்டிருந்தார்கள்.

இவ்வாறு கேவலமான வேலைகள்செய்து பிழைப்பு நடாத்துவதற்குப் பதிலாக அவர்கள் தெருவில் நின்று பிச்சை எடுக்கலாம் எனவும் அன்ரனி ஜெகநாதன் தெரிவித்தார்.

தினமுரசு
வாரமலர்
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## கல்லறைகளில் கண்மூடித் துயிலும் எம் பிள்ளைகளின் தியாகங்களை கேவலப்படுத்தாதீர்கள்

குழப்பத்தின் துருவமாய் அன்று சிலர் கருணாவைப் பயன் படுத்தினார்கள். இன்று சுமந்திரனைப் பயன்படுத்துகின்றார்கள். ஜே.ஆரின் பரம்பரையில் வந்த பட்டை அரசியல்வாதிகளின் பகுத்தறிவிற்கு தீனிபோட காலத்திற்குக் காலம் தமிழினத்தின் விடுதலையை விற்றுப் பிழைக்கும் வித்தகர்களும் உருவாகி வருகின்றனர். தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் பாரிய முரண்பாடுகள் இன்று முற்றியநிலையில் உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஆராயப்படவேண்டிய மாகாண சபை அமர்வுகளில் தனிப்பட்ட முரண்பாடுகள் விஸ்வரூபம் பெறுகின்றது. இதுதொடர்பாக ஊடகங்களின் சார்பாக மக்கள் கருத்துக் கேட்கும்போது வழுவழுத்த பேச்சுக்களால் வாக்கு மாறுகின்றனர்.

வடமாகாண அமைச்சர்களை மாற்றுதல் மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரை நீக்குதல் ஆகிய விடயங்கள் தற்போது அதிகமாகப் பேசப்பட்டு வருகின்றன. இதுதொடர்பாக மக்களிற்கு தெளிவுபடுத்துங்கள். அவைத்தலைவர் என்கின்றரீதியில் இது உங்களது கடமை எனக் கருத்துக் கேட்டபோது, இந்த இரண்டு விடயங்களிலும் நான் தலையீட்டை மேற்கொள்ளாமல் நடுநிலையாகச் செயற்படுவேன் என வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை நீக்குமாறு கட்சியிடம் கோரியிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அவுஸ்திரேலியாவில் வைத்துக் கூறியுள்ளமை மற்றும் வடமாகாண அமைச்சர்களை மாற்றுமாறு உறுப்பினர்கள் சிலர் கோரியுள்ளமை தொடர்பில் அவைத்தலைவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

"வட மாகாண முதலமைச்சரை நீக்குமாறு கோரும் விடயத்தில் நான் அவருக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ செயற்பட மாட்டேன். அது கட்சியின் நிலைப்பாடு. அமைச்சரவையை மாற்றவேண்டும் என சுமார் 20 பேர் கொண்ட உறுப்பினர்கள் கலந்துரையாடியதாக ஊடகங்களில் செய்திகள் வாயிலாக அறிந்தேன். அந்த விடயத்தில் நான் நடைபெறும் விடயங்களை அவதானிப்பனாக இருப்பேனே தவிர, சரி - பிழை தொடர்பில் கருத்து தெரிவிக்கமாட்டேன். இதுவே எனது பதவிக்குரிய நிலைப்பாடு ஆகும்" என்றார்.

விக்னேஸ்வரனை அகற்றவேண்டும் என்பதில் அதிதீவிரமாக உள்ளவர்கள்தான் வெளிப்படையாக இப்படிப் பூசி மெழுகு கின்றனர் என்பது ஒருபுறமிருக்க, விக்னேஸ்வரனை அகற்றவேண்டும் என்கின்ற தேவை ஏன் தற்போது வலுப்பெற்றுள்ளது என்பதற்கு சுமந்திரன் பல காரணங்கள் சொன்னாலும் உண்மை அதுவல்ல. தக்கதருணத்தில் பலரின் பல சுரண்டல் செயற்பாடுகளிற்கு அவர் தடையாக இருக்கின்றார் என்பதுதான் அடிப்படையாகும்.

சுமந்திரனின் கருத்துத் தொடர்பாக சம்பந்தர் பதிலளிக்கையில் சுமந்திரன் கூறிய கருத்து தவறானது எனக்கூறிய அவர் இது தொடர்பாக தான் விக்னேஸ்வரனுடன் பேச இருப்பதாக கூறினார். எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்று யாழ்ப்பாணம் வந்தபோதும் மக்கள் கேட்ட கேள்விக்கும் இதைத்தான் கூறினார். அப்படியானால் இத்தனை நாழும் பேச நேரம் கிடைக்கவில்லையா...? ஏன் விக்னேஸ்வரன் தேவலோகத்திலா இருக்கிறார்? அங்கு கவரேச் கூட இல்லையா..? முழு முட்டாள்களாக தமிழ் மக்களை பார்க்கின்றீர்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

அன்புக்குரிய வடக்கு மாகாண சபை உறுப்பினர்களே...!

எங்கள்மீது உங்கள் சிலருக்கு பிடிப்பில்லாமல் இருக்கலாம். எனினும் எங்கள் அனைவரதும் நோக்கம் எங்கள் இனம் வாழவேண்டும் என்பதாகும். வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடந்தபோது தமிழ் மக்கள் வாக்களித்த வேகம் கண்டு இந்த உலகமே வியந்தது. தேர்தல் தினத்தன்றும் கூலி வேலைக்குப் போனால்தான் அன்றைய ஜீவனோபாயம் நடக்கும் என்ற நிலைமை இருந்தபோதும்கூட, எத்தனையோ பேர் வாக்களிப்பதை ஒரு விரதமாகக் கருதி அதிகாலையிலேயே விழித்து, நேரத்தோடு வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களித்த அந்த வாக்குகளே உங்களுக்குப் பதவி தந்தன.

உங்கள் பதவியை தீர்மானித்த புள்ளடிகள் ஒவ்வொன்றும் சாதாரணமானவையல்ல. அது வாக்களித்த ஒவ்வொரு தமிழ் மகனதும் எண்ணிறைந்த எண்ணங்களை, கற்பனைகளை, இன உணர்வுகளை தாங்கிக்கொண்டவை. உங்களால் தங்களுக்கு விடிவு கிடைக்கும் என்று நம்பி வாக்களித்த மக்களுக்கு நாம் தீங்கு விழைவித்தால் அது உங்கள் சந்ததியையே சாகடித்து விடும்.

உங்கள் சம்பள விபரம் தொடர்பில் விவாதம் நடந்ததாக அறிந்தோம். மிகவும் கவலையாக இருந்தது. ஒருமுறை ஜப்பானியத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது, எங்களுக்கு வாகனம் தேவை என்று நீங்கள் கேட்டீர்கள். இப்போது உங்கள் சம்பளம் தொடர்பில் விவாதம் நடத்துகிறீர்கள். இவற்றைச் செய்யாதீர்கள் என்று நாம் சொல்லவில்லை.

மாறாக சம்பளத்தை அதிகரிப்பதாக இருந்தால் அதை உங்களுக்குள் கதைத்து உரிய ஒப்புதல்களைப் பெற்று அலுவலை செய்துமுடியுங்கள். அதற்காக சபை நேரத்தில் உங்கள் சம்பள அதிகரிப்புத் தொடர்பில் விவாதம் நடத்தி வில்லங்கப்படாதீர்கள். அது கல்லறைகளில் கண்மூடித்துயிலும் எம்பிள்ளைகளின் தியாகத்தை கேவலப்படுத்திவிடும்.



# மத்தியில் முத்தியது மாகாணத்தில் தீ பத்தியது

## மக்களின் நிலை என்ன ?



மத்திய அரசின் அமைச்சரவைக்குள் முரண்பாடு முத்திய நிலையிலும், வடமாகாண சபைக்குள் தீப்பற்றிய நிலையிலும் இன்றைய அரசியல் கோலங்களெல்லாம் அலங்கோலங்களாக மாறிவருகின்றன.

தமிழ் மக்கள் எதிர்பார்த்தது ஏதோ நடப்பது ஏதோவாக நல்லாட்சி எனும் நாடகம் திரைமறைவில் தீக்கிரையாக்கப்படுகின்றன. வெளிவராத சில உண்மைகளால் வெளிவேசம் வெளுத்திருக்கின்றது. அழுக்கான சில அலங்கோலங்களை அனைவருக்கும் கூறமுடியாத நிலையிலும் உள்ளது. காரணம் முரண்பாட்டை முற்றவைப்பதுதான் ஊடகதர்மமல்ல. சர்வாதிகாரத்தை தூரவைத்து நல்லாட்சியை நம்பிய மக்களை ஏமாற்றாதீர்கள் என்பதைத்தான் இங்கு எம்மால் கூறமுடியும். எழுதுவது, பேசுவது எளிதான காரியம் நடைமுறையில் உள்ள சிக்கல்களை புரிந்துதான் பொறுப்புடன் சிலவற்றை வெளியிட்டு வருகின்றோம் அந்தப் பொறுமையை இழக்க வைக்காதீர்கள்.

வடக்கு மாகாண சபையின் ஓர் அமர்வில் சுன்னாகம் குடிநீர் பிரச்சினை தொடர்பாக பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி தொடர்பில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கேள்வி எழுப்பிய போது அதற்குப் பதிலளிக்கமுடியாத முதலமைச்சர் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளுக்கு பதில் சொல்லவேண்டிய அவசியம் எமக்கு இல்லை என்றார்.

தொடர்ந்து சிவஞானத்தை நோக்கி நீங்களே சொல்லி எழுதிக்கொள்ளுவீர்கள், பின்னர் ஊடகங்களில் இப்படி கூறப்பட்டுள்ளது என்பீர்கள். எனவே ஊடகங்களில் வெளியாகும் செய்திகளுக்கு பதில் சொல்லும் அவசியம் எமக்கு இல்லை என்றார் முதலமைச்சர். ஊடகங்களிற்குப் பதில் சொல்லத் தேவையில்லை உங்களிற்கு வாக்களித்த மக்களிற்குப் பதில்சொல்லுங்கள். என்பதுதான் எமது தற்போதைய வாதம்.

எங்களுக்கு எல்லாவற்றையும் அதிகரிக்க வேண்டும்... இல்லாவிட்டால் ஒன்றும் செய்யமாட்டோம் - வட மாகாணச்சபை உறுப்பினர்கள் வடமாகாண சபை அமைச்சர்கள் உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனம், அதிக சம்பளம் வேண்டும் இல்லையேல் மக்கள் சந்திப்புக்கள் ரத்தாகும் எனக் கோரி வடமாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் சபையில் அடுக்கடுக்காகக் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

ஏனைய மாகாணங்களில் அமைச்சர்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் அனைத்து வசதிகளும் எமக்கும் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினர். இவற்றுக்கெல்லாம் மேலாக வட மாகாண அமைச்சர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்திப்பதைப் குறைக்கவேண்டி ஏற்படும் என்றார் அமைச்சர் டெனீஸ்வரன். வடமாகாண சபையின் 37ஆவது அமர்வு நடைபெறும்போதே இக்கருத்துக்கள் பரிமாறப்பட்டன. தங்களிற்கான வசதிவாய்ப்புக்களைக் கோரும் இந்த மாகாண சபை உறுப்பினர்கள் இதுவரை அந்த மாகாண மக்களிற்கு என்ன செய்தார்கள்...? எதற்காக இவர்கள் வசதி வாய்ப்புக்களைக் கேட்கின்றார்கள்? என்று சிந்தித்தால் அது வெட்கப்படவேண்டிய விடயம்.

யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்கள் கடந்தும் வடமாகாணத்தின் உற்பத்தி பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 வீதம் மாத்திரமே பதிவாகியுள்ளது.

உண்மையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் உரிய முறையில் நல்லிணக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வடமாகாணம் பொருளாதாரீதியில் வலுப்படுத்தப்படும் என்றும் முதலீட்டு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் எனவும் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. அது நிறைவேறவும் இல்லை, சிலரால் நிறைவேற்றப்படவுமில்லை. இதற்கு காரணம் கேட்டால் வடமாகாண சபையின் அதிகாரங்களை மத்திய அரசு மட்டுப்படுத்துகின்றது. என்று முன்பு சொன்னார்கள் அவ்வாறானால் தற்போது உள்ள இணக்கப்பாட்டின் மூலம் என்ன நடந்தது...? வடமாகாணம் விரைவாக அபிவிருத்தி செய்யப்பட்டு தேசிய பொருளாதாரத்தின் அதன் பங்களிப்பை மேலோங்கச் செய்ய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படும் என்ற நம்பிக்கையும் வெளிப்படுத்தப்பட்டது.

(21 ஆம் பக்கம் பார்க்க...)

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# விக்கிலீக்ஸ் வெளியிட்ட இரகசியங்கள்!!

பகுதி -07

அன்பார்ந்த நம் வாசகர்களே! தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சம்பந்தமாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து வெளியுறவு தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணம் ஒன்று மிகவும் சுவாரஷியமான தகவல்களை கொண்டுள்ளது.

இது 2004ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 10ஆம் திகதி எழுதப்பட்டு உள்ளது. அமெரிக்க விசாவுக்கு சம்பந்தர் விண்ணப்பித்து இருக்கின்றார். ஆனால் தலைமைக் காரியாலயத்தால் இவருக்கான விசா நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில் இவருக்காக வக்காளத்து வாங்கியே தூதுவர் இதை எழுதியனுப்பி இருக்கின்றார்.

- தமிழ் அரசியல் ஜாம்பவான்களில் இராஜவரோதயம் சம்பந்தரும் ஒருவர். தமிழ் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மரியாதைக்கு உரிய எம்.பி. வருடம்தோறும் இடம்பெறுகின்ற தமிழர் கலாசார விழா ஒன்றில் பங்கேற்கின்றமைக்காகவும், குடும்ப உறவுகளை சந்திக்கின்றமைக்காகவும் அமெரிக்கா வர விசாவுக்கு நேற்று விண்ணப்பித்து உள்ளார். அத்துடன் இதே பயணத்தில் கனடா செல்கின்றமைக்கும் திட்டமிட்டு இருக்கின்றார்.



### கண்காணிக்கப்படுவோர் பட்டியலில்

இவருக்கு இதற்கு முந்திய பல வருடங்களிலும் அமெரிக்க விசா வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் இம்முறை எமக்கு அதிர்ச்சி நேர்ந்து உள்ளது. ஏனென்றால் இவருக்கு விசா வழங்கமுடியாது என்று தலைமைக் காரியாலயத்தால் அறிவிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து கொன்சியூலர் பிரிவின் தலைமை அலுவலருடன் தொலை பேசியில் விசாரித்தோம். பதிலுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளனர். சம்பந்தர் கண்காணிக்கப்படுபவர்களின் பட்டியலில் உள்ளார் என்று இதில் எச்சரித்துள்ளார்கள்.

இது எமக்கு புதுமையான விடயம் ஆகும். சம்பந்தர் மிக நீண்டகாலமாக எமது தூதரகத்துடன் தொடர்பில் இருந்து வருபவர். அமெரிக்காவில் இருந்து வருகின்ற அரசாங்க உயர்மட்ட பிரதிநிதிகளை வழமையாக சந்திப்பவர்.

ஆனால் ஒரு முக்கியமான விடயம் இருக்கின்றது. என்னவென்றால் விடுதலைப் புலிகள் இயக்க பயங்கரவாதிகளின் அரசியல் இலக்குகளில் சிலவற்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்துகின்றது. அமெரிக்க அரசாங்கத்தால் பட்டியலிடப்பட்டு உள்ள வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களில் புலிகள் இயக்கமும் ஒன்று. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்சி ஆகும்.

இருப்பினும் புலிகள் இயக்கத்துடன் வைத்திருக்கின்ற கூட்டை காரணமாக்கி தமிழ் தேசிய கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினரும் கண்காணிக்கப்படுவோர் பட்டியலில் போடப்படவே கூடாது.



### தகவல் வழங்குனர்

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுடன் இக்கூட்டமைப்பு மிக நெருக்கமான தொடர்புகளை வைத்திருக்கின்றது. புலிகளை தூதரகத்தை சேர்ந்தவர்கள் சந்திக்க முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர். இதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும், சம்பந்தன் போன்ற கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனும் தொடர்புகளை பேணுவதன் மூலம் புலிகளின் உள்வீட்டு விடயங்களை அறிந்து கொள்கின்றோம்.

குறிப்பாக இலங்கை அரசாங்கத்துடனான சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தமாக புலிகளின் நிலைப்பாடுகளை தெரிந்து கொள்ளமுடிகின்றது. புலிகளை வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாக அமெரிக்கா பட்டியல்போட்டு உள்ள காரணங்களை பதிலுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எடுத்துச்சொல்ல எம்மால் முடிகின்றது. இதன்மூலம் பட்டியலில் இருந்து நீக்கப்படுவதற்கான வாய்ப்பு புலிகளுக்கு வழங்கப்படுகின்றது.

சம்பந்தனின் அரசியல் முக்கியத்துவம், தூதரகத்துடனான நீண்டகால தொடர்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இவருடைய விடயத்தை துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இதன்மூலமே இவரின் பயணத்துக்கான ஏற்பாடுகளை நாம் செய்து கொடுக்கமுடியும். ஆனால் இவருக்கு விசா வழங்காமல் விடுவதற்கு அல்லது இவரை கண்காணிக்கப்படுவோர் பட்டியலில் வைத்திருப்பதற்கு ஏதேனும் நியாயமான தகவல் இருப்பின் உடனடியாக எம்முடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**(யாத்திரை தொடரும்)**

### ஊடுருவி

**விடுதலைப் புலிகள் இயக்க பயங்கரவாதிகளின் அரசியல் இலக்குகளில் சிலவற்றை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்துகின்றது. அமெரிக்க அரசாங்கத்தால் பட்டியலிடப்பட்டு உள்ள வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களில் புலிகள் இயக்கமும் ஒன்று. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்சி ஆகும். இருப்பினும் புலிகள் இயக்கத்துடன் வைத்திருக்கின்ற கூட்டை காரணம் ஆக்கி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினரும் கண்காணிக்கப்படுவோர் பட்டியலில் போடப்படவே கூடாது.**




# நிலமெல்லாம் இரத்தம்

178

பா.ராகவன்

அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது உண்மை. ஆனால் தொடர்ந்து நடைபெறும் காரியங்கள் எதுவும் அமைதியை முன்னெடுத்துச் செல்வதாக இல்லை என்று அறிவித்துவிட்டு, அரேபியர்களின் உணர்ச்சியை இஸ்ரேல் மதிக்கத் தவறுவதாகப் பேசினார்.

இது, சூடேறிக்கொண்டிருந்த பலஸ்தீனைப் பற்றியெரியச் செய்யும் விதமான விளைவுகளை உண்டாக்க ஆரம்பித்தது. 1996ஆம் ஆண்டில் மட்டும் இஸ்ரேலில், சுமார் முப்பது குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன. அவற்றுள் டெல் அவிவில் வெடித்த பஸ் வெடிகுண்டு ஒன்று பத்தொன்பது பேர் உயிரைக் குடித்தது, மிக முக்கியமானது.' மார்ச் மாதம் நடந்த இந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியாக, ஏப்ரலில் காஸா பகுதியில் ஒரு தற்கொலைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டு ஆறு யூதர்கள் பலியானார்கள். மீண்டும் மே மாதம் டெல் அவிவில் ஒரு பஸ்ஸில் வெடிகுண்டு வெடித்து, முப்பது பேர் பலி. அந்தச் சம்பவம் நடந்த சில மணி நேரங்களுக்குள்ளாக ஜெருசலேமில், அதே பாணி தற்கொலைத் தாக்குதலுக்கு ஐந்து



பேர் பலி. என்ன நடக்கிறது என்றே புரியாத சூழல் ஏற்பட்டது. நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர, இராணுவ நடவடிக்கை மிகவும் அவசியம் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹூ கருதினார். ஆனால் அரேபியக் குடியிருப்புகளில் ராணுவம் புகுமானால் விளைவு எந்த மாதிரியும் ஆகலாம். ஒரு முழுநீள யுத்தத்துக்கான சாத்தியமே அப்போது தெளிவாகத் தெரிந்ததால் சற்றே நிதானம் காட்டலாம் என்று மொஸாட் சொன்னது.

ஹமாஸ், மிகத் தீவிரமாகச் செயல்பட்ட நேரம் அது. தினசரி குண்டுகள் வெடிப்பது என்பதை ஒரு கடமை போலச் செய்தார்கள். பெரும்பாலும் பேரூந்து நிலையங்கள், மார்க்கெட்டுகள், பாலங்கள், தேவாலயங்கள் ஆகிய இடங்களில் தான் அவர்கள் குண்டுவைத்தார்கள். பத்து அல்லது பன்னிரண்டு சாதாரண குண்டுவெடிப்புகளை நடத்திவிட்டு, ஒரு பெரிய தற்கொலைத் தாக்குதல் நடத்துவது என்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஹமாஸின் இந்தத் தீவிர நடவடிக்கைகள், அரேபியர்கள் மத்தியில் புதிய எழுச்சியை உண்டாக்கியது. ஒரு வேளை தங்களுக்கு விடுதலை வாங்கித் தரப்போவதே ஹமாஸ்தானோ என்று அவர்கள் நினைக்கத் தொடங்கினார்கள். நடப்பது எதுவுமே நல்லதுக்கல்ல என்பது மட்டும் அரபாத்துக்குப் புரிந்தது. பி.எல்.ஓ.வை அவர்கள் முற்றிலுமாக நிராகரித்துவிடுவதற்கு முன்னால், ஏதாவது செய்தால்தான் உண்டு என்று நினைத்தார். மிகவும் யோசித்து, சாதகபாதகங்களை அலசி ஆராய்ந்து, கடைசியில்தான் அந்த முடிவை எடுத்தார். இன்னொரு இண்டி:.பதா.

பலஸ்தீனின் இரண்டாவது மக்கள் எழுச்சி என்று சரித்திரம் வருணிக்கும் இந்த இண்டி:.பதாவுக்கு 'அல் அக்ஸா இண்டி:.பதா' என்று பெயர். அதாவது அல் அக்ஸா மசூதியை மீட்பதற்கான மக்கள் போராட்டம்.

(தொடரும்)




அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா



அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் ஜஸ்டிஸ் மண்டேலாவையும் அழைத்துக்கொண்டு சுரங்க பணியக நிர்வாகத்திற்கு சென்று ஏற்கனவே திட்டமிட்டபடி இருவரும் கபடநாடகமாடினார்கள். இவர்களது நாடகத்தை நிர்வாகமும் உண்மையென நம்பி ஏமாந்துவிட்டது. ஜோங்கிந்தாபா அரசரின் சிபாரிசு என்றால் அந்த தங்கச் சுரங்கத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். அதனால் மண்டேலாவுக்கு உடனே வேலை கிடைத்துவிட்டது. மண்டேலாவை சுரங்கப் பணியகத்தில் பணி உரிமப் பரிசோதகராக நியமித்தார்கள். ஜஸ்டிஸும் மண்டேலாவும் தங்களது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறியதால் சந்தோஷத்தில் திளைத்தார்கள்.

சுரங்கப் பணியகத்தில் பணி உரிமப் பரிசோதகரான மண்டேலா தனது சீருடையை அணிந்துகொண்டு நுழைவாயிலில் விறைப்பாக நின்றுகொண்டு பணிக்கு வரும் தொழிலாளர்கள் பணி உரிமம் பெற்றவர்களா என்பதை பரிசோதிப்பதே அவனின் பொறுப்பாக இருந்தது. அவன் கண்ணும் கருத்துமாக ஆசையுடனும் ஆர்வத்துடனும் தொழிலில் ஈடுபட்டான். தங்குவதற்கு இடம், நல்ல உணவு, மாதாமாதம் சம்பளமும் ஒழுங்காக கொடுத்தார்கள். புதுஊரில் பிழைப்புக்கு வழியின்றி தவித்த இவர்களுக்கு இந்தத் தொழில் ஒரு வரப்பிரசாதமாகவே தெரிந்தது. இருவரும் அரண்மனையில் ஒன்றாகவே வளர்ந்ததுபோல இங்கேயும் ஒன்றாகவே இருந்தார்கள். ஒன்றாகவே உண்டு, ஒன்றாகவே உறங்கி, ஒன்றாகவே வேலைக்கு செல்வார்கள். ஓய்வுநேரங்களில் இருவரும் புதிய ஊரை சுற்றிப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டு இருந்தனர். புது வாழ்க்கை அவர்களுக்கு சுவாரஸ்யத்தையும் புத்துணர்வையும் அளித்தது. சொந்தக் காலில் நின்று சம்பாதிப்பதை மண்டேலா பெருமையாக நினைத்தான்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஜஸ்டிஸ் மண்டேலாவை பார்த்து கிண்டலாக "மண்டேலா நாம் கல்லூரியில் விழுந்து விழுந்து கஷ்டப்பட்டு படித்திருக்காமல் நேரடியாக தங்கச் சுரங்க தொழிலுக்கே வந்திருக்கலாம். தங்கச் சுரங்கம் தங்கச் சுரங்கம்தான்" என்று விளையாட்டாக சொல்ல மண்டேலாவோ "அப்படி சொல்லாதே. நாம் ஜோங்கிந்தாபா அரசரின் வாரிசுகள் என்றபடியால்தான் சுரங்கத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் சலுகைகளும் கைநிறைய சம்பளமும் தருகிறார்கள். ஆனால் நம்மோடு பணியாற்றும் நம்மின மக்களை அப்படியா நடத்துகிறார்கள்? அடிமைகளாக அல்லவா நடத்துகிறார்கள். இதை பார்க்கும்போது என் மனம் படும் வேதனை சொல்லிமாளாது. ஏன்தான் இந்த தங்க சுரங்கத்திற்கு பணியாற்ற வந்தோமென்று மனச்சாட்சி என்னை கொல்லும். ஆனால் உள்மனது பிழைப்புக்கு வேறு வழியில்லை இதுதான் கதி என்று சொல்லி ஆறுதல் சொல்லிவிடும்" என்று விரக்தியுடன் கூறினான்.

மண்டேலாவும் ஜஸ்டிஸும் காலம் போகப் போக இந்த வாழ்க்கை முறையுடன் ஐக்கியமாகிப் போனார்கள். தங்கச் சுரங்க நிர்வாகமும் மண்டேலாவின் சிபாரிசு கடிதம் பற்றி மறந்தே போய்விட்டது. நிலைமை இவ்வாறிருக்க மண்டேலா தங்கச் சுரங்கத்தில் ஒரு நாள் தன் நண்பர்களிடம்தான் ஊரை விட்டு ஓடிவந்த கதை பற்றியும் பயண உரிமை அலுவலகத்தில் நடந்த கூத்தையும் தங்கச் சுரங்கத்தில் பொய் கூறி வேலையில் சேர்ந்ததைப் பற்றியும் பெருமை பேசிக் கொண்டிருந்தான். அப்போது எவனோ ஒருவன் மண்டேலாவின் வீறாப்புப் பேச்சினை காதில் போட்டுக்கொண்டான்.

இது எவ்வாறோ நிர்வாகம்வரை கசிந்தது. தவளை தன் வாயால்தான் கெடும் என்பதைப்போல மண்டேலாவும் நிர்வாகத்திடம்வசமாக மாட்டிக்கொண்டான். உடனே மண்டேலாவின் வேலை பறிபோனது. ஜஸ்டிஸ் செய்வதறியாது திகைத்து போனான். மண்டேலாவை விட்டு பிரிய நேரிடப்போவதை எண்ணி மனம் வருந்திக் கண்கலங்கினான்.

(தொடரும்)

# இந்தியாவில் சீனத் தலைவரின் தலையிடி

இந்தியாவும் சீனாவும் ஆசியாவின் மிகப்பெரும் நிலப்பரப்பையும் மக்கள் தொகையையும் கொண்ட அயல்நாடுகள் ஆகும். மகாத்மாகாந்தியின் வழி நடாத்தலில் இந்தியா, பிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. சீனா ஆயுதப் புரட்சிமூலம் யப்பானிய, அமெரிக்கக் கூட்டுப்படைகளுடனும், சீனாவை ஆட்சிசெய்த சியாங் கை சேக்கின் படைகளிடமிருந்தும் சுதந்திரம் பெற்றது.

சீனாவின் சிற்பி மாஓவின் தலைமைத் துவமே சீனாவின் விடுதலைக்கான பெரும் காரணியாகும். இந்தியா 1947இலும் சீனா 1949இலும் சுதந்திரம் பெற்றன. இந்தியாவில் பிரித்தானிய முறையிலான பாராளுமன்ற ஜனநாயக முறைமையும் சீனாவில் கம்யூனிய முறைமையிலான ஆட்சி முறையும் நிலவின.

இரண்டு, ஆசியாவின் பெரிய நாடு களும் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலையைப் பெற்ற காரணத்தாலும் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் முற்போக்குக் கொள்கைகளாலும் இந்திய - சீன நட்புறவு மிகநெருக்கமாக இருந்தது. இரண்டுமே புதிய நாடுகளா கவும் இளையநாடுகளாகவும் இருந்தன. சீனாவுக்கு ஸ்ராலின் சோவியத் ரஸ்யாவின் அரசியல் பொருளாதார பக்கபலம் நிறையவே இருந்தது.

இளைய பாரதம் சகல நாடுகளுடனும் உறவைப் பேணியது. 1960களில் இந்தியா, சீனா எல்லைப் பிரச்சினை தலையெடுத்தது. அமெரிக்க ஏகாதிபத்தி யம் கண்ணை மூடிக்கொண்டு இருப்பதில்லை. இளைய சீனாவை கம்யூனிச பிடியிலிருந்து விடுவித்து மீண்டும் சியாங்கை சேக் ஆட்சியை கொண்டுவரவேண்டுமென்ற பேர வாவால் உந்தப்பட்டு இந்தியாவை பகடைக்காயாய் பயன்படுத்தியது. இதுவரை காலமும் இராஜதந்திர நகர்வுகளால் பேச்சுவார்த்தை வடிவில் காணப்பட்ட இந்திய - சீன எல்லைப் பிரச்சினை 1962இல் இரு நாடுகளுக்குமிடையில் யுத்தமாக வெடித்தது.

உண்மையில், இந்தியாதான் யுத்தத்தை ஆரம்பித்தது. இதற்கும் பின்னணியில் அமெரிக்காவின் மறைமுகமான கரங்கள் பெருமளவில் காணப்பட்டது. சீனத் தலைவர் மாஓ ஒருபோதும் யுத்தத்தை விரும்ப வில்லை. இந்திய நாட்டின் நிலமற்ற பாமர விவசாயி தொழிலாளிகளிடம் சீனாவைப் போன்று கம்யூனிச புரட்சியில் இணையவேண்டும் என்பதுதான் மாஓவின் சிந்தனையாக இருந்தது.

இந்தியப் படைகள் சீனாவுக்குள் பெருமளவு சீனப் பிரதேசத்தினுள் புகுந்தன. இந்தக் கட்டத்திலும் தலைவர் மாஓ இந்திய அரசாங்கத்துக்கு பல தகவல்களை அனுப்பி படைகளை வாபஸ்பெறுமாறும் எல்லைப் பிரச்சினையை பேசித் தீர்க்கலாம் என்றும் கூறினர். இந்தியா இதனை ஏற்கவில்லை.

நாங்கள் தாக்கப்படுகிறோம். இனிமேல் பொறுமை காக்கமுடியாது என மாஓ அவர்கள் அறைகூவல் விடுத்தார். சீனச் செம்படை (Red Army) எதிர்த் தாக்குதலை ஆரம்பித்தது. மிகக் குறுகிய காலத்துள் சீனப்படைகள் இந்தியப் படைகளை துரத்தியடித்தது. சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதிக்கு அப்பால் இந்தியப் பிரதேசத்துக்குள் புகுந்தது. ஆனால் 24 மணித்தியாலத் துக்குள் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட எல்லைப் பகுதிக்கு திரும்பியது.

வரலாற்றில் இந்த விடயம் மிக முக்கியமானது. ஏனெனில் இன்னொரு நாட்டின் பிரதேசங்களை கைப்பற்றிய நாடுகள் தாமாகவே அவற்றைவிட்டு வெளியேறியது வரலாற்றில் முதல் தடவையாக நிகழ்ந்தது. அதுமட்டுமல்ல, சிறைபிடிக்கப்பட்ட இந்திய படை வீரர்கள் மிகவும் கண்ணியமாக நடாத்தப்பட்டனர். சேதமடைந்த இந்திய யுத்த உபகரணங்களை பழுதுபார்த்து திருத்தி இந்தியப் படைகளிடம் ஒப்ப டைத்தது. இவ்வாறான சீனத்தலைவரின் அணுகுமுறைமை மேற்கத்திய ஊடகங்களிலும் இந்திய ஊடகங்களிலும் வெளிப்படுத்தப்படவில்லை. பாரத செல்வாக்கினுள்ளும் தாய் - சேய் நாட்டு பொய்ப்பிரசாரங்களும் இலங்கை தமிழ் வாசகர்கட்கு இந்திய, சீனப் பிரச்சினையை அதன் உண்மையை அறியமுடியவில்லை. சீனாவை ஆக்கிரமிப்பு நாடாகத்தான் காட்டினார்கள். தமிழ் திரைப்படமான இரத்ததிலகம் தமிழ் ரசிகர்களுக்கு யுத்தத்தின் உண்மைத்தன்மையைக் காட்டவில்லை.



இந்தியா, சீன எல்லைச்சமர் இந்தியாவின் பெரும்பலத்தையும் யுத்த தந்திரங்களையும் கேள்விக் குள்ளாக்கியது மட்டுமல்ல. இந்தியாவின் கீர்த்தியில் உரசல்கள் ஏற்பட்டன. அந்தளவுக்கு இந்தியா படுதோல்வி அடைந்ததே காரணமாகும்.

இதுஇவ்வாறிருக்க, 1967-களில் இந்தியாவில் குறிப்பாக மேற்கு வங்கத்தில் ஒரு சிறிய விவசாயக் கிராமமான நக்சல்பாரியில் மாஓவின் சிந்தனையை பின்பற்றி விவசாயியின் ஆயுதம்கொண்டு பெரும் நிலச்சுவாந்தர் களை கொலைசெய்து அவர்களின் நிலங்களை காணியற்ற விவசாயிகட்கு பகிர்ந்து வழங்கினர். இதன்காரண மாகவே இந்திய புரட்சிவாதிகட்கு நக்சலைட்டுகள் எனவும் மாஓ தீவிர வாதிகள் எனவும் ஊடகங்களால் பெயர்கள் சூட்டப்பட்டது.

யார் இந்த நக்சலைட்டுகள் அவர் களின் இலட்சியம் யாது? அவர்களின் பலம் என்ன? இந்தியாவின் எந்த மாநிலங்களில் இவர்களின் செல்வாக்கு காணப்படுகிறது. இந்திய அரசாங்கங்கள் எவ்வாறு அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கிறது என்பதை பார்ப்போம்.

இந்தியாவில் கம்பியூனிஸ்ட் கட்சி சீன சோவியத் கொள்கை முரண் பாடுகளால் கம்யூனிஸ்ட் கட்சி இரண் டாக பிளவுபட்டது. கம்பியூனிஸ்ட் கட்சி (சீனச் சார்பு) எனவும் பிரிந்தன. பின்னர் இந்திய மார்க்ஸிட் கட்சி (சீனச் சார்பு) இரண்டாக பிளவுபட்டது. பிரிந்தவர்கள் உருவாக்கிய கட்சி இந்திய மார்க்ஸிய லெனினிஸ்ட் கட்சியாகும். இக்கட்சியின் கொள்கை மாஓவின் சிந்தனை வழிப்பட்டதாகும். இக்கட்சிதான் நக்சலைட் தாக்குதல்கள் மேற்கொண்டது. இவர்களின் இலட்சியம் சீனப்புரட்சி பாணியில் இந்தியாவில் விவசாயி தொழிலாளர்களின் புரட்சியை முன்னெடுப்பதாகும். சீனாவில் நடைபெற்றதைப் போன்று கிராமங் களில் தாக்குதல்களை தொடுத்து நகரங்களை நோக்கி முன்னேற வைப்பதாகும். மாஓ தீவிரவாதிகளின் அல்லது நக்சலைட்டுகள் பல மாநிலங்களில் பலமாக இருந்தனர்.

சத்திகார், ஒரிசா, ஆந்திரா பிரதேசம் போன்ற பிரதேசங்களில் கிராமப்புறங் களில் பலமான நிலையில் இருந்தனர். தமிழ் நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலும் கேரளாவில் சில மாவட்டங்களிலும் பலமாக இருந்தனர். ஆயினும் கொள்கை முரண்பாடுகளால் இந்திய மார்க்சிஸ், லெனின்ஸ்ட் கட்சி பல பிளவுகளை எதிர்நோக்கியது. சகல பிரிவினரும் மாஓ கொள்கைகள்தான் தமது கொள்கைகள் என கூறுகின்றனர். இந்திய படைகளின், பொலிஸ் விசேட படையணிகளின் மூர்க்கத்தனமான எதிர்த்தாக்குதல்களால் நக்சலைட்டுகள் பின்னடைவு அடைந்துள்ளனர்.


இந்திராகாந்தி அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் நக்சலைட்கட்கு எதிரான தாக்குதல்கள் ஆரம்பமாகின. அதன்பின்பு வந்த அரசுகளும் நக்சலைட்டை எதிர்ப்பதில் மும்மூரமாக இருந்தனர். தற்போதும் நக்சலைட்டு களுக்கு எதிரான இராணுவ பொலிஸ் படைகளின் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளனர். கொள்கை வகுப்பாளர்கள் இராணுவரீதியில் நக்சலைட்டை ஒழிக்கமுடியாது என நம்புகிறார்கள். வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்ற வேண்டும். காணியற்றோருக்கு காணி வழங்கவேண்டும். தாழ்ந்த சாதி மக்கட்கும் பயனளிக்கத்தக்க திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் நக்சல்பாரி இயக்கத்துக்கு இளைஞர்கள் செல்வதை தடுக்கமுடியும் என கருது கிறார்கள். இதன்பிரகாரம் பலவித மான அபிவிருத்தித் திட்டங்கள் வெளிநாட்டு உதவிகளுடன் முன்னெடுக் கப்படுகின்றன. வறுமை ஒழிப்பு பிரதான இடம்பெற்றுள்ளது. ஆனால் இந்தியாவில் தலைவிரித்தாடும் உயர்மட்ட ஊழல் எதிர்பார்த்த பலனை தருமா என்பது கேள்வியாகவே உள்ளது.




"இந்திராகாந்தி அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் நக்சலைட்கட்கு எதிரான தாக்குதல்கள் ஆரம்பமாகின. அதன்பின்பு வந்த அரசுகளும் நக்சலைட்டை எதிர்ப்பதில் மும்மூரமாக இருந்தனர். தற்போதும் நக்சலைட்டுகளுக்கு எதிரான இராணுவப் பொலிஸ் படைகளின் நடவழக்கைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளனர். கொள்கை வகுப்பாளர்கள் இராணுவரீதியில் நக்சலைட்டை ஒழிக்கமுழயாது என நம்புகிறார்கள். வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றவேண்டும். காணியற்றோருக்கு காணி வழங்கவேண்டும். தாழ்ந்த சாதி மக்கட்கும் பயனளிக்கத்தக்க திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் நக்சல்பாரி இயக்கத்துக்கு இளைஞர்கள் செல்வதை தடுக்கமுழயும் எனக் கருதுகிறார்கள்."

இந்தியாவின் கொள்கை வகுப்பில் மாஓ தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இன்றும் பிரதான இடத்தை எடுத்துள்ளது. இன்றும் 61 அல்லது 62களில் இந்திய, சீன யுத்தம் நிறைவடைந்து நான்கு, ஐந்து வருடங்களில் அதே சீனத் தலைவரின் கொள்கையை பின்பற்ற வேண்டும் என இந்திய மார்க்சிஸ், லெனின்ஸ்ட் கட்சி தீர்மானம் மேற்கொண்டமை இந்திய அரசியல் வரலாற்றில் முக்கியமானதாகும். அதுமட்டுமல்ல, இந்திய ஊடகங்களில் மூளைச்சலவை என்கிற பதம் அறிமுகப்படுத்தப்பட்டது. என்னவெனில், சீனச் சிறைகளில் அடைக்கப்பட்டு விடுதலையடைந்த இந்தியப் படைவீரர்கள் சீனாவில் மூளைச்சலவை செய்யப்பட்டதால் மாஓவின் கொள்கையை பரப்பினர் என்பதே இதன் விளக்கமாகும். இந்தியாவின் மிகச்சிறந்த அறிவுஜீவிகளை கொண்ட மேற்கு வங்கத்தால்தான் நக்சலைட்டுகள் இயக்கம் ஆரம்பித்தது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

—தேவ தர்மா—



# ஜெனீவாத் தீர்மானங்களை அமுலாக்குவதற்காக சிவில் சமூகத்திற்கு அறிவூட்டல்

நடந்த அநீதி பற்றித் தெரிந்து கொள்வதற்கான உரிமை பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உண்டு என நிலை மாற்று நீதிக்கான சர்வதேச நிலையத்தைச் சேர்ந்த எடுவார்டோ கொன்ஸாலெஸ் (EDUARDO GOZALEZ) International Center for Transitional Justice தெரிவித்தார்.

இலங்கை அரசு ஏற்று அங்கீகரித்த ஜெனீவாத் தீர்மானங்களை அமுலாக் குவதற்காக நாட்டிலுள்ள சிவில் சமூகங் களுக்கு அறிவூட்டும் செயலமர்வுகள் வடக்கு, கிழக்கு மற்றும் தென்னிலங்கை யிலும் நடந்துவருகின்றன.

இன ஆய்வுக்கான சர்வதேச மையம் (International Center for Ethnic Studies), சிவில் சமூக உதவு நிறுவனங்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் இந்த விழிப்பூட்டல் செயலமர்வு களில் சமூக அரச சார்பற்ற உதவு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், துறைசார்ந்த செயற்பாட்டாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்வில் அமெரிக்காவில் தலைமையகத்தைக் கொண்டுள்ள நிலைமாற்று நீதிக்கான சர்வதேச நிலையத்தைச் சேர்ந்த எடுவார்டோ கொன்ஸாலெஸ் (EDUARDO GOZALEZ) International Center for Transitional Justice பிரதான வளவாளராக கலந்து கொண்டுள்ளார்.

பிரதான வளவாளருடன் இணைந்ததாக இனஆய்வுக்கான சர்வதேச மையத்தின் (International Center for Ethnic Studies) வளவாளராக பி.கௌதமன் மற்றும் இலங்கை அபிவிருத்திக்கான உதவு ஊக்கமையத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ஏ.சொர்ணலிங்கம் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

கடந்த ஆயுத வன்முறைக் காலகட் டத்தில் நடந்த விடயங்களைப் பற்றிய உண்மையைக் கண்டறிதல், அச்சம்பவங் களால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வழி செய்தல், மற்றும் பரிகாரம் என்பனவற்றை உள்ளடக்கியதாக இந்தப் பொறி முறை அமையவிருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்குள்ள உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெறுமனே அரசியல் காரணங்களுக்காக மட்டுமல்ல அதற்கப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயமும் இந்தப் பொறிமுறையில் தங்கியுள்ளது அது பற்றி நாம் மகிழ்ச்சியடையலாம்.

சர்வதேச சட்டம் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உண்மை, நீதி, பரிகாரம் ஆகிய மூன்று உரிமைகள் உண்டென்பதை அங்கீகரித்துள்ளது. அதனடிப்படையிலேயே இந்தப் பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.

தமக்கு நடந்த அநீதி பற்றித் தெரிந்து கொள்வதற்கான உரிமை பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உண்டு. உண்மையைக் கண்டறிதல் என்பது ஒவ்வொரு சமூகத்துக்கும் உள்ள உரிமை.

அத்துடன் பாதிக்கப்பட்டவர் அலசி ஆராய்வதற்கு குடிசார் மற்றும் அரசியல் சமூகங்களுக்குத் தேவையான தளவெளியை வழங்குவதற்கென நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இனஆய்வுக்கான சர்வதேச மையம் (International Center for Ethnic Studies) தொடர் உரையாடல்களை நடாத்தவுள்ளது.

இந்த முன்னெடுப்பின் நீண்டகால நோக்கு எதுவெனில் இலங்கையில் பொருத்தமானதும் உயிரோட்டமுள்ளதுமான நிலைமாற்றுக்கால நீதியின் ஒரு தலைமுறைக்கு உரிய பங்களிப்பைச் செய்வதாகும். இதற்கென இந்த



பாதிக்கப்பட முன்னர் வாழ்ந்த நிலைமை யில் தன்னைப் புனரமைத்துக் கொள்வதற் கான உரிமையையும் கொண்டிருக்கின்றார்.

ஆயுத முரண்பாடுகள் இடம்பெறுகின்ற இடங்களில் ஆயிரக்கணக்கான மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றிருக்க வாய்ப்புண்டு. ஆகையினால் அவ்வாறான தொரு பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்து பரிகாரம் காண்பதற்கு பொருத்தமானதொரு பொறிமுறை தேவை.

இனஆய்வுக்கான சர்வதேச மையம் (International Center for Ethnic Studies) தற்போதைய இடம்பெற்றுவரும் விழிப்பூட்டல் செயலமர்வுகள் பற்றி விவரித்துள்ள குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் முடிவடைந்து தற்போது நிலவும் சிக்கலானதும் ஸ்திரத் தன்மையற்றதுமான பின்புலத்தில் நீதியைத் தொடர்வதிலுள்ள சிக்கல்களைப் பற்றி முன்னெடுப்பானது பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பிரதான தீர்மானம் மேற்கொள்வோர் களுக்கிடையே உரையாடல்களுக்கும் விவாதங்களுக்கும் வேண்டியதான தளவெளிகளை வழங்கி, இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்துக்கு தனித்துவமான உணர்வீக அம்சங்களை நிலைமாற்றுக்கால நீதியின் செயன்முறைகளுக்கென ஒழுங்கு படுத்தும்படியாகச் செயற்படுகின்றது.

கடந்த காலக் கோரிக்கைகளுக்குப் பதிலீடு கொடுக்கும்படியாக இந்தக் கலந்துரையாடல்கள் பரந்துபட்டதான

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

பொருத்தப்பாடுள்ள, நிலைமாற்றுக்கால நீதிப் பொறிமுறைகளிலே நோக்கக் குவியம் செலுத்தும் நிலைமாற்றுக்கால நீதி நிபுணர்களும் கடந்தகால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களும் இந்த உரையாடல் களைத் தூண்டும் பிரதான வளவாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயன்முறைகளின் பிரதான நோக்குகளில் ஒன்று பிரதான தீர்மானம் மேற்கொள்வோர்களிடையே அங்கே உள்ளதான பரந்துபட்ட நிலை மாற்றுக் கால நீதிப் பொறிமுறைகளைப் பற்றிய அறிவூட்டல்களையும் புத்திக் கூர்மியப் புரிந்தறிவினையும் மேம்படுத்துவதாகும்.

ஜனவரி, 2015 ஜனாதிபதித் தேர்தலின் பிறகு கணிசமான உருமாற்றமடைந்துள்ள அரசியல் சூழ்நிலைகளிலே இந்த உரை யாடல்கள் இடம்பெறுகிறது.

இலங்கையிலே நிலைமாற்றுக்கால நீதியைப் பற்றிய பாரதூரமானதும் திடமானதும் செம்மையானதுமான கலந்துரையாடலுக்கான தளவெளி தற்போது உருவாகியுள்ளது.

நிலைமாற்றுக்கால நீதி பற்றிய தளவெளி விவாதங்களை வழிநடாத்தி இலங்கைக்குப் பொருத்தமான நிலைமாற்றுக் கால நீதியை அமுல்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கும் மற்றும் இதர செயற்பாட்டாளர்களுக்கும் வேண்டியதான புத்திக்கூர்மிய ஆதரவு மற்றும் இதர ஆதரவுகளை வழங்குவதற்கான காலம் தற்போது கனிந்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மே மாதம் திருகோணமலை யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் கலந்துரையாடல்கள் ஏற்கெனவே நடத்தப்பட்டிருந்தன. காலி, நுவரெலியா, கொழும்பு, மட்டக்களப்பிலும் செயலமர்வுகள் இடம்பெற்றுவிட்டன.

இதில் முக்கிய அம்சமாகக் கொள்ளப்படவேண்டியது கடந்த கால யுத்தத்தினால் பாதிப்புற்றவர்கள் இன மத மொழி பேதங்களுக்கப்பால் பாதிக்கப்பட்டவர்கள் என்றரீதியில் பொதுவில் எவ்வாறு இணைந்து கொள்ளலாம் என்பதேயாகும்.

தற்போதைய அரசின் செயற்பாடுகளில் கடந்த கால அநியாயங்களுக்கு நீதியை நிலை நாட்டுவோம் என்கின்ற ஒரு தோற்றப்பாடும் இருக்கிறது. இதை ஒரு கொள்கையாகவும் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற் காகவே சிவில் சமூகத்திற்கு அறிவூட்டலும் இடம்பெறுகின்றது.

எனவே, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எல்லாப் பிரதேச அனைத்து சமூக மக்களும் நம்பிக்கை வைக்கக்கூடிய ஏற்பாடுகள் இந்த புதிய நிகழ்ச்சி நிரலில் கட்டாயம் இருக்கவேண்டும்.

ஆனால் இந்த மாதிரியான கலந்துரை யாடல்களை அரசு தென்பகுதியில் நடாத்துகின்ற பொழுது புதிய அரசு தங்களைப் பழிவாங்கப்போகின்றதோ என்கின்ற அச்சம் தென்பகுதி பெரும்பான்மைச் சமூகமக்களிடம் உண்டு.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இது முற்றிலுமாக ஒரு உள்ளகப் பொறி முறையாகத்தான் இருக்கும் என்று அரசு கூடச் சொன்னது. ஆனால், இப்பொழுது அரசும் ஒருபடி கீழிறங்கி வந்து சர்வதேசப் பங்குபற்றுதலுடனான பொறிமுறையை தாங்களும் அங்கீகரிப்பதாக ஏற்றுக் கொண்டுவிட்டது.


நீதிபதிகளின் நம்பகத்தன்மை பற்றிய சந்தேகங்களை அரசும் ஏற்றுக்கொண்ட மாதிரித்தான் உள்ளது. ஆகவே, அரசின் பொறிமுறைகளில் சிவில் சமூகத்திற்கு இன்னமும் நம்பிக்கைவரவேண்டுமென்றால் அரசாங்கம் இன்னமும் என்னென்ன விடயங்களைக் கையாளவேண்டும் என்பதை பாதிக்கப்பட்ட சமூகங்கள் ஆலோசனைகளாக முன்வைக்கவேண்டும்.

நீதிக்கான உரிமை என்பது எல்லோருக் கும் கிடைக்கவேண்டியது. அது பொது வானது. ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நடந்த விடயங்களின் பொதுவான உண்மை தெரியவராவிட்டால் அந்த சமூகத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய கதைகளைத்தான், இதுதான் உண்மை என்று சொல்லி வாதிட்டுக் கொண்டிருப்பார்கள்.

அவர்களைப் பொறுத்தவரை அதுதான் உண்மையாகவும் இருக்கும். ஆனால், இந்த நிலைமை ஒருபோதும் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்காது. ஆகவே இது இறுதியில் வழமையாக, முரண்பாட்டுக் காலத்தில் நடந்ததைப்போல ஒரு சமூகம் அடுத்த சமூகத்தைக் குறைசொல்லி குற்றஞ்சாட்டிக்கொண்டே இருக்க வழிவகுக்கும். அப்படி ஒரு நிலைமை தொடர்ந்தால் அது எதிர்காலத்தில் மேலும் மேலும் வன்முறைகளுக்கும் தூபமிடலாம்.

(21 ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கையில் தமிழ் இலக்கியக்கல்வி எதிர்கொள்ளும் சவால்கள்




**பா.பாலகணேசன்,**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி


துரதிஷ்டவசமாக தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் இலக்கியத்தை எவ்வித சுவையுணர்வும் இல்லாது விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களை கற்பிக்கும்போது பின்பற்றப் படுகின்ற அறிவியல்ரீதியான கற்பித்தல் முறைகளையே பின்பற்றுகின்றனர்.

கலை உணர்வு, நகைச்சுவை உணர்வு போன்ற பல்வேறு சுவைகளுடன் கற்பிக்க வேண்டிய இலக்கியக்கல்வி அவ்வாறு கற்பிக்கப்படாததால் அதன் பயனை முழுமையாகத் தருவது இல்லை. இலக்கியப் பாடத்தை அறிவியல் பாடங்களை கற்பிப்பது போன்ற சுவையற்றுக் கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் செய்யுள் பகுதியில் இரசனை நயக்கும் திறனைபெறுவது குறைவு. மாணவரிடையே ஒழுக்கவிழுமியங்களை வளர்க்கும் இத்தகைய இலக்கியக் கல்வி இரசனை, நயத்தல் ஆகியவற்றுடன் கற்பிக்கப்படாததால் மாணவர்கள் ஒழுக்க விழுமியங்களை பேணுவது அரிதாகி வருகின்றது. இதனால் ஒழுக்கச்சீர்கேடு மிக்க சமுதாயம் ஒன்றுதோன்ற இவ்விலக்கியக் கல்வி காரணமாய் அமைந்துவிடுகின்றது. இந்த நிலையில் மலினமான இரசனைப் போக்குமிக்க சினிமாவின்பால் மாணவர் களின் ஆர்வம்தூண்டப்பட்டு அது சமுதாய சீர்கேட்டுக்கு வழிவகுத்துக்கொண்டிருப்பதும் சமகாலச் சூழலில் மறுக்கமுடியாத உண்மை.

### செய்யுளை நயக்கும் திறனும் அதற்கான கற்பித்தல் முறைகளும்

தமிழ் இலக்கிய பாடத்தை அல்லது செய்யுள் பகுதியை கற்பிப்பதற்கு விசேட கற்பித்தல் முறைகளை இலக்கிய ஆசிரியர்கள் கையாளவேண்டும். அவ்வாறு கையாளவிட்டால் அவ்விலக்கிய கல்வி யால் கிடைக்கவேண்டிய பயன் கிடைக்காமல் போய்விடும். இன்றைய தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அறிவுசார் பாடங்களைக் கற்பிக்கும், கற்பித்தல் உத்திகளை பயன்படுத்திவருவதால் அதனால் விளையும் பயன் பூச்சியமே. இலக்கிய பாடத்தை இரசனை நயத்தல் அம்சங்களுடன் கற்பிக்கும்போதுதான் அதன்மூலம் மாணவர்களுக்கும் அவர்களின் மூலம் சமூகத்திற்கும் உரிய பயன் கிடைக்கும். அந்த அடிப்படையில் தமிழ் இலக்கியப்பாடத்தை அல்லது செய்யுளை கற்பிக்கும் முறைகளை பின்வருமாறு எடுத்துக் கூறுவார்கள் கல்வியியலாளர்கள்.

**01.** தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி அதாவது உண்மையிலேயே நல்ல இலக்கிய இரசனை யுடையதாக இருத்தல்வேண்டும். அப்படி இல்லாததை மாணவர்களுக்கு கற்பிக்க தேர்ந்தெடுக்கக் கூடாது.

**02.** ஆசிரியன் அப்பகுதியை மிகமிக ஆழமாகப் படித்து அதில் உள்ள அம்சங்களை நன்கு தெரிந்திருக்கவேண்டும். வகுப்பில் சமாளிக்கலாம் என்ற உணர்வோடு மாணவர்களுக்கு கற்பித்தலுக்காக போகக்கூடாது.

**03.** அவ்விலக்கிய அல்லது செய்யுள் பகுதி மாணவன் அனுபவத்திற்கு உட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**04.** நயத்த்லுக்கான பயிற்சியிலுள்ள முக்கியம் என்னவென்றால் இத்தகைய அம்சங்கள் இல்லையென்றால், அது நல்ல இலக்கிய பகுதி ஆகமாட்டாது என்பர் அறிஞர்கள்.

**05.** நயத்தல் விமர்சனத்திற்கு இட்டு செல்லவேண்டும். தீர்ப்பு எல்லா அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்யப்படவேண்டும். இங்கு குணம் குற்றம் இரண்டையும் நாடுதல்வேண்டும். அவற்றுள் மிக்கதை மாத்திரம் எடுக்கவேண்டும்.

**06.** வாசித்தல் தமிழ் இலக்கியத்தில் ஒரு சிக்கலை எதிர்கொள்கின்றது. நவீன காலத்திற்கு முற்பட்ட இலக்கியங்களைக் கொண்டு கூட்டிவாசிக்கவேண்டும். இதில் சொல், சொல் ஒழுங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

**07.** பின்பாடத்தின் ஒழுங்கு அமைப்பு புரியப்படல்வேண்டும். அத்துடன் அவற்றின் பலம், பலவீனம் நன்கு புரியப்பட்டிருந்தால் பாடத்தின் பொருள் எவ்வாறு உருவாக்கப்பட்டு ள்ளது என்பது தெரியவரும்.

**08.** செய்யுளை முதன் முதலாக அறிமுகப்படுத்தும்போது சில படிகளைப் பின்பற்றுதல் நன்று. செய்யுளைக் கற்பிக்கும்போது ஆர்வமூட்டல், இசையுடன் படித்தல், அபிநயப்படுத்தல், வழங்கு தகவலுரைத்தல், உணர்ந்து பொருள்கூறச் செய்தல், மொழித்திறன் வளர்த்தல் என அப்படிநிலைகள் அமையும்.

**09.** அப்பாடம் பற்றிய ஒரு மனப்படம் தோன்றும். மகிழ்வு அளிக்கின்றதா, அறிவுத்தெளிவினை ஏற்படுத்துகின்றதா என்பதெல்லாம் கவனிக்கப்படவேண்டும்.

**10.** இலக்கியக் கல்வியை போதிக்கும் ஆசிரியர்கள் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். முதலாவது பொருளாதாரக்காரணி (குறைந்த சம்பளம், வறிய குடும்ப நிலை, மாணவர்களின் வறுமை, பாடசாலைகளின் வளம்மின்மை போன்றன) இரண்டாவது அரசியல் காரணி (யுத்தம் அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் போன்றன) சமூகக்காரணி, உளவியல் காரணிகள், இவற்றுடன் பயிற்சிகளின் தரமின்மை, நூலக வசதியின்மை போன்ற முனைப்பாக நிற்கின்றன. அவை எல்லாம் முழுமையாக பூர்த்திசெய்வது எமது பிரதேசத்தில் முடியாத பெரிய காரியம். ஆயினும் தற்கால தமிழ் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இலக்கியக்கல்வி தொடர்பாக அவ்வாசிரியர்கள் மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். அத்துடன் கீழ்வரும் தேவை-களையும் கற்பித்தல் தொடர்பான நுட்பங் களையும், கற்பிக்கும் முறைகளையும் அறிந்து கொண்டிருக்கவேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் சில நுட்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### இரசனை நயத்தல் ஆகியவற்றுடன் கற்பித்தலை மேம்படுத்த...

இலக்கியங்களை இரசனை நயத்தலுடன் கற்பிக்க பின்வரும் முறைகளை தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் முன்வைப்பார்கள்.

"இவற்றிற்குப் பதிலாக செய்யுள் கருத்துணர்தல் உணர்ச்சியில்- ஒன்றுபடுதல் நயம் உணர்ந்து போற்றுதல், பாடிப்பாடி இன்பமடைதல் ஆகிய நோக்கங்கள் நிறை வேறும் வண்ணம் கற்பித்தல்வேண்டும்" (கணபதி வி.சந்திரிகா ராஜமோகன்)

"பேராசிரியர் ஹாடேவின் கருத்துப்படி கவிதை கற்பித்தல் காதல் புரிதலை ஒத்தது. காதல் புரிவதில் முறையொன்று இருக்கமுடியுமா? என்ற கேள்விக்கு என்ன விடையோ அதைத்தான் கவிதை கற்பித்தலுக்கு விளக்கம் தருவதற்கு வைத்துக் கொள்ளமுடியும்" (சுப்புரெட்டியார். ந.1980)

"செய்யுள் கற்பிக்கும் நோக்கங்கள் செவ்வனே நிறைவேறவேண்டுமாயின் கற்பிக்கும் ஆசிரியர்களை கவிதையின்பம் தூண்டுவதாக இருத்தல்வேண்டும்... பெரும்பாலானவர்களுக்கு இது இயலாது" (சுப்புரெட்டியர். ந.1980) "முதற்கண் கவிதை பற்றிய அறிவும் தெளிவும் ஆசிரியருக்கு இன்றியமையாதது கவிதை கற்பித்தலின் பிறிதொரு நோக்கம் வினைத்திறனமிக்க தொடர்பாடல் ஆற்றலையும், தொடர்பாடலுக்கு உரிய வளமான மொழித்திறன்களையும் வளர்த்தெடுத்தலாகும்" (ஜெயராசா.சபா 2009) இத்தகைய கவிதை இன்பம்தூய்க்கும் ஆசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள் எத்தனை பேர்? கவிதை ஆற்றல் உள்ளவர்கள் எத்தனை பேர்? இவர்கள் கற்பிக்கும் மாணவர்களுக்கு உரிய பயன் கிடைக்கின்றதா? என்பதெல்லாம் ஆய்வுக்குரியன.

"பெருமைக்குரிய தமிழ் மொழியை கற்று, இலக்கிய செல்வங்களை நுகர்ந்து கழித்தோருக்கு, அதனைப் பிறருக்குக் கற்பிக்கும் வாய்ப்பு நேரும்போது, எவ்வுணர்வில் தீந்தமிழைக்கின்றனரோ, அவ்வுணர்வைக் கற்பவருக்கும் ஊட்டக் கடமைப்பட்டவர்... பிற ஆசிரியர்கள் பாடப்பொருளை கற்பிக்க மொழியை ஊடகமாகக் கொள்கின்றனர். தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் அவ் ஊடகத்துள் ஊடுருவி அதன் அருமை பெருமைகளை எடுத்துக்கூறுவதோடு, அதனைக் கையாளும் திறனையும் வளர்த்துக்கொண்டே செல்கின்றனர்." (கணபதி.வி. 1989) இலக்கிய ஆசிரியர்கள் நல்ல இலக்கியங்களில் உயிரான சிறந்த பகுதிகள், நல்ல வருணனைகள், புலவர் களின் சீவியத்தில் நூதனமான பகுதிகள் தொகுத்து வைத்திருக்கவேண்டும். நாட்டுப் பாடல்கள், பள்ளு முதலியவற்றையும் பிற்கால பிரபந்த வகைகளையும், உயர்ந்த இலக்கிய வகைகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுப்பதோடு அவற்றுள் சந்தவின்பம், சொற்சித்திரம், சீவிய இயற்கை, சாதாரண அழகு பொதிந்தவை, அவற்றில் ஒழுக்கக் கேட்டை விளையாத பாடல்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். இக்காலத்தில் இசைத்தட்டுக்களிலும் சினிமாக்களிலும் சாதாரண கீழ்த்தர உணர்ச்சிகளைக் கிளர்ச்சிசெய்யும் பாடல்கள், சம்பாசனைகள், வெளிவருகின்றன. அப்படிப்பட்டவைகள் ஆசிரியர் படிப்பியாமலே பிள்ளைகளை அணுகிவிடுகின்றன. அவற்றிற்கு பிள்ளை களுக்கு அவர்களையறியாமலே ஈடுபாடு உண்டாகிவிடுகின்றது. அவை முன்பின் பாராமல் பரவிவிடுகின்றது. அவற்றின் தீமைகளை சமூகத்திற்கு உணர்த்தவேண்டும். ஆசிரியரின் தெரிவுகள், அவருக்கு படிப்பினைகள் ஆக அமைந்தவை, அவை-கள் எல்லாம் பிள்ளைகளுக்குப் பிடிப்பிக்க பொருத்தமானதா? பிள்ளைகளின் வயசு அனுபவம், விவேகம், சுவை இவைகளுக்கு இயைய பிறகு ஒரு தெரிவை ஆசிரியர் நடத்த வேண்டும். பாலர் சந்த இன்பம், சொற்சித்திரம் இவற்றில் ஆர்வம் உடையவர்கள், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டனவாய் திருத்தமானவையாய், வெளிப்படையானவையாய், எளியனவாய், கருத்து தெளிவானவையாய் இருக்க வேண்டும். தாளக்கட்டும் அபிநயமும் கருத்தை வெளிப்படுத்தவேண்டும். கருத்தாழமும், கருகல், கடினசொல் உள்ளவை விலக்கப்படவேண்டும். பாட்டும் சொல்லும், பொருளும், ஓசையும் ஒத்து முடிகின்ற கனிந்த புலவர்களின் பாடலாய் இருத்தல்வேண்டும். மேலும் இவை மாணவர்களுக்கு ஏற்றவையா? என்பதை ஆசிரியர்கள் தெரிந்திருத்தல் வேண்டும்.


ஆசிரியர்கள் இலக்கியங்களை நன்கு படித்து மாணவர்கள் முன்னிலையில் அப்படியே கொட்டாது, கண்ணப்பர்போல அவைகளை மென்றுதின்று சுவைத்து செவிக்கும், மனசுக்கும், நாவிற்கும் இனிமையானவைகளைத் தெரிந்து படிப்பிக்கவேண்டும். மேல் வகுப்புக்களுக்கு பொருள் ஆழமாகலாம். உயர்ந்த பாத்திரங்களின் குணவிஷேசங்களாய் இருக்கலாம். மனதில் பதித்து சிந்தனைக் கிளர்ச்சி செய்வனவாக இருத்தல்வேண்டும். கீழ்த்தர பாடல்களின் நின்றும் வேறுபட்ட உயர்தர சாதியைச் சேர்ந்த உத்தமரத்தினங்கள் என்ற உணர்ச்சியைத் தருதல் வேண்டும். அத்துடன் புலவர் களையும் பாடல்களையும் இலக்கியங்களை யும் தாரதம்மியங்கள் தெரிந்து நிற்கும் தராசுகள் ஆகவேண்டும்.

மயக்கம்தெளியாத பூரணகுடிகாரனோடு இலக்கிய ஆசிரியனை ஒப்பிடலாம். இவனுடைய இலக்கிய குடி எந்த புஷ்பத்தில் இருந்து சிறிது மது என்னும் சேர்க்கலாமென்று தேடி அலையும் வண்டையும் அல்லது தேனியையும் போல இருப்பான். அவனுடைய கீதம் இலக்கிய கீதம் அவனுடைய களி இலக்கியக் களி அவன் நாயாய் இரான், காக்கையாய் இருப்பான் காக்கை காகா என்று கரைந்துண்ணும் (கணபதிப்பிள்ளை.சி 1994)

பாட்டில் உயிர் துடிக்குமிடத்தை சுட்டிக்காட்டதக்கவன் பாட்டுக்கேற்ற ஓசை தாளத்திற்கேற்ற ஆட்டங் கைவந்தவன் தரமான வாசிப்பைக் கேட்பதனால் அது முன்னும்பின்னும் அவதானிக்கப்பட்டு, அது சம்பந்தமாக உள்ளத்தில் ஒரு கரு உருவாகும்.


(தொடரும்)


> **"ஆசிரியர்கள் இலக்கியங்களை நன்கு படித்து மாணவர்கள் முன்னிலையில் அப்படியே கொட்டாது. கண்ணப்பர்போல அவைகளை மென்றுதின்று சுவைத்து செவிக்கும், மனசுக்கும், நாவிற்கும் இனிமையானவை களைத் தெரிந்து படிப்பிக்கவேண்டும். மேல் வகுப்புக்களுக்கு பொருள் ஆழமாகலாம். உயர்ந்த பாத்திரங்களின் குணவிஷேசங்களாய் இருக்கலாம். மனதில் பதித்து சிந்தனைக் கிளர்ச்சி செய்வனவாக இருத்தல்வேண்டும். கீழ்த்தர பாடல்களின் நின்றும் வேறுபட்ட உயர்தர சாதியைச் சேர்ந்த உத்தமரத்தினங்கள் என்ற உணர்ச்சியைத் தருதல் வேண்டும்."**



# இது ஒரு காதலின் கதை

இந்த வார சிறுகதை

ப.உதயகுமார்

அவளை வீதியிலே கண்டநேரம் முதல் என் மனம் எதையோ பறிகொடுத்தவன் போல அவளுக்காக என் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

ஆறு ஆண்டுகள் அவளுடன் பழகிய அந்த நாட்களெல்லாம் சுமையாக இதயத்தைத் தாக்கி காயப்படுத்துமாப் போலிருந்தது. பத்து வருடங்களுக்கு மேலாக அவளை நான் காணவேயில்லை. இவ்வளவு காலமும் எங்கேயிருந்தாள், சுகி உன்னை எண்ணி, உனக்காக ஏங்கிய நாட்களை நீ அறிவியா? உன்னோடு வாழமுடியாமல்போன அந்த துரதிஸ்ட சம்பவத்தை நீ அறிவியா? சத்தியமா நான் உன்னை ஏமாத்தேல்லை சுகி, நீ இதை நம்புவியா? இப்ப எப்படி இருக்கிறாய்? கணவன், பிள்ளைகள்? ஆயிரமாயிரம் கேள்விகள் என்மனதிலே தோன்றிமறைகின்றது.

அவளிடம் எப்படிப் பேசிறது? பேசினால் ஏற்பாளா? மனம் விடைதெரியாமல் பதறிக் கொண்டிருந்தது! ஏன் தனியே வந்து போகின்றாள். அதுவும் நடந்துபோகின்றாள்? அவள் இப்போது எங்கேயிருக்கின்றாள்? மனம் தேடியலைந்தது!

வீதியிலே சடுதியாக அவளும் நானும் எதிர் எதிராக சந்தித்துக் கொண்டபோது ஆயிரம் வாட்ஸ் அலகுகொண்ட மின்சாரத்தினால் தாக்கப்பட்டது போன்ற அதிர்ச்சியினால் உறைந்துபோயிருந்தேன்.

அவள் அந்த வீதியிலே சென்று மறையும்வரை அதிர்ச்சி அலையிலிருந்து மீளவில்லை. நான், இரண்டு தடவைகள் என்னைத் திரும்பிப் பார்த்தது மட்டும் தெரிந்தது. அவளின் பின்னால்போய் அவளுடன் பேசும் தைரியம் எனக்கு இருக்கவில்லை. ஏனென்றால், நான் இப்போது இன்னொருத்தியின் கணவன், அவளும் மாற்றான் தோட்டத்து மல்லிகையாகியிருப்பாள்.

மனம் அவளின் நினைவுகளைத் தேடி அலைய நேராக வீட்டிற்குச் சென்றேன். மனைவியும் மகளும் கோயிலுக்குப் போனது நல்லதாகிவிட்டது. என் அறையினைத் திறந்துபூட்டியிருந்த சூட்கேசைத் திறப்புப் போட்டுத் திறந்தேன். உள்ளேயிருந்த கறுப்பு நிற டெனிம் ஜீன்சும் நீலக்கோடு போட்ட சேட்டையும் வெளியே எடுத்தேன்.

சுகி இது எனக்கு பிறந்தநாளுக்கு வாங்கித்தந்த கடைசி உடுப்பு. இந்த உடைக்குள்தான் என் வாழ்க்கையின் அத்தியாயமே மறைந்துகிடந்தது. என்னை அறியாமலே கண்ணீர ஜீன்சிலும் சேட்டிலும் விழுகின்றது. சேட்டையும் ஜீன்சையும் அணைத்துக்கொண்டு அழுகையின் ஊடாக அந்தப் பழைய் நாட்களைத் தேடி ஓடியது என் மனம்.

எங்கே திரும்பிப் பார்த்தாலும் பச்சைப் பசேலென்று பசுமையாக இருக்கும் அளவெட்டி எனும் கிராமமே என் பிறப்பிடம்.

சகல வகையான வளங்களும் அள்ளிக் கொழிக்கும் அளவெட்டியிலுள்ள பிரபல பாடசாலையொன்றிலே நான் உயர்தரம் படித்துக்கொண்டிருந்தேன். மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்திலே பிறந்த நான் கல்விமூலமே என் குடும்பத்தின் வறுமையினைப் போக்கிக் கொள்ளமுடியும் என்பதனை மனதிலே நிறுத்தி படித்தமையால் வகுப்பிலே முதல்நிலை மாணவன் நான்தான்.

படிப்பிலே கெட்டிக்காரன் என்பதுடன் படிக்கும் காலத்திலேயே நான் ஒரு எழுத்தாளனாகிவிட்டேன். கவிதை, கட்டுரை, சிறுகதை என்று என் எழுத்து வட்டம் விரிந்துகொண்டது. பத்திரிகைகளிலும், இலங்கை வானொலியிலும் எனது ஆக்கங்கள் வெளியாகியது.

வறுமையிலே வாடியதால் வறுமையும் இளமைத்துடிப்பும் இருந்தமையினால் காதலும் என் கதைகளுக்கு கருப்பொருளாகி வறுமையும் இளமைத்துடிப்பும் இருந்தமை யினால் காதலும் என் கதைகளுக்கு கருப்பொருளாகியது.

யுத்த மேகங்கள் கருக்கட்டியிருந்தமை யினால் பலாலி, மயிலிட்டி, தையிட்டிப் பகுதி மக்கள் வெளியேறியிருந்த காலம். அப்படி வெளியேறிய பெரும்பாலான குடும்பங்கள் எங்கள் ஊரிலே வந்து தங்கியிருந்தனர். அவ்வாறு வந்துசேர்ந்த குடும்பங்களில் ஒன்றுதான் சுகியின் குடும்பமும்.

சுகியும் உயர்தர வகுப்பு மாணவியாக என்னுடைய வகுப்பிலேயே வந்துசேர்ந்து கொண்டாள். அவள் படிப்பிலே மிகவும் கெட்டிக்காரியாக; எனக்குப் போட்டியாக பாடங்களிலே புள்ளிகளை எடுக்கத் தொடங்கினாள்.

சுகி எல்லோருடனும் சகஜமாகப் பழகும் சுபாவம் கொண்டவள். கலகலப்பாகப் பேசுவாள். வந்த கொஞ்சநாட்களிலேயே எல்லோர் மனங்களிலும் நல்லதொரு நட்பு வட்டத்தை உருவாக்கிக்கொண்டாள். அத்துடன் நிறைய கதைகளையும், பத்திரிகைகளையும் படிக்கும் ஆர்வம் அவளிடம் இருந்தது. என்னுடைய கவிதை களையும், கதைகளையும், தொடர்ந்து படிப்பதுடன் நான்தான் அந்த எழுத்தாளன் என்பதை எப்பிடியோ அறிந்துகொண்டாள்.

"என்ன குமார் உங்கடை கதையள் எல்லாம் ஒரே சோகமாகக் கிடக்குது. நீங்கள் தான் சோக எழுத்துக்களுக்குச் சொந்தக் காரனெண்டு இப்படி கொஞ்சநேரத்துக்கு முதல்தான் தெரிஞ்சுகொண்டேன்" என்றவள் "வாழ்த்துக்கள் குமார்" என்றவாறு கையை நீட்டினாள். நானும் கை குலுக்கி நண்பர் களானோம். அன்று முதல் சுகி என்மீது பிரியமானாள்.

பாடசாலை நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என்றெல்லாம் அவள் என்னுடன் சேர்ந்து பணியாற்றினாள். எந்தவேளையும், அவளுடன் கதைக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. இறுதிப் பரீட்சைக்கு கொஞ்சக்காலமே இருந்தது.

ஒரு நாள் "குமார் நீங்கள் ரியூசன் ஒண்டுக்கும் போறதில்லையே" வினா தொடுத்தாள் சுகி.

"இல்லை சுகி, பாடசாலையில கவனமெடுத்துப் படிச்சால் பிறகேன் ரியூசன்" மழுப்பினேன் நான்.

"நீங்கள் பொய் சொல்லுறியள், வறுமையை மறைக்க பொய் சொல்லுறியள்" உண்மைதான் சுகி. ரியூசனிலை வந்து படிக்கிற அளவுக்கு என்னட்டப் பணவசதி இல்லை. அதுதான்.

"நான் ஒண்டு கேட்டால் கோவிக்க மாட்டியளே" நான் கோவிக்கமாட்டன். சுகி சொல்லுங்கோ, "நான் உங்கடை காசைக் கட்டுறன் நீங்கள் நான் படிக்கிற ரியூசனுக்கு வருவியளா?"

சுகி இப்படிக் கேட்பாள் என்று நான் கனவில்கூட எண்ணவில்லை. பதில் ஏதும் சொல்லாமல் நான் அதை, இதைச் சொல்லி மழுப்பினேன். ஆனாலும் அவள் என்னை விடுவதாக இல்லை.

"நீங்கள் என்னட்டை உதவி வேண்டக் கூடாது எண்டு நினைக்கிறியள். பரவாயில்லை விடுங்கோ. நீங்கள் வராத ரியூசனுக்கு இனிமேல் நானும் போகமாட்டன்" தனது முடிவையும் சொன்னாள்.

"எனக்காக நீங்கள் ஏன் உங்கள் கல்வியை இழக்க விரும்புறியள்"

"எனக்கு நீங்கள் வேணும், உங்கடை அன்புவேணும், நீங்கள் இல்லாத கல்வி எனக்கும் தேவையில்லை" சொல்லிவிட்டு துவிச்சக்கர வண்டியினை கோபமாய் மிதித்துக்கொண்டு போனாள்.

மறுநாள் பாடசாலையில் என்னைக் கண்டும் கதைக்கவில்லை. திரும்பியே பார்க்க மறுத்தாள். அது எனக்கு பெரும் தவிப்பாக இருந்தது. ஒரு வாரமாக இருவருக்குமிடையே போராட்டம் நீடித்தது.

ஒரு வெள்ளிக்கிழமையன்று சுகி கும்பளாவளைப் பிள்ளையார் கோயிலுக்கு போய்த் திரும்பிக்கொண்டிருந்தாள். அவளை இடைமறித்து "என்னை சுகி என்னோடை பேசமாட்டியளா? என்னாலை படிக்கக்கூட முடியாமல் கிடக்கு. ப்ளீஸ் பேசுங்க"

உங்களுக்கு மட்டுமில்லை எனக்கும்தான் படிக்கமுடியாமல் இருக்கு, ரியூசனுக்கு வாங்கோ குமார்" கண்ணீர மல்கக்கேட்டாள். நீண்டநேரப் போராட்டத்தின்பின் அவளின் தூயஅன்புக்கு அடிபணிந்தேன்.

பாடசாலைப் படிப்புடன் ரியூசன் கல்வியும் இணைந்து சிறப்பாக இறுதிப்பரீட்சையும் எழுதிவிட்டோம். பெறுபேறுகள் வரும்வரை சும்மா இருக்காமல் ஊரில் உள்ள வசதிகுறைந்த மாணவர்களை ஒன்றுதிரட்டி சுகியின் வீட்டிலே இலவச ரியூசன் வகுப்புக்களை நடாத்தினோம். ஒருபுறம் வகுப்பு, மறுபுறம் அவளை சந்திக்கும் வாய்ப்பு... இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டே இருந்தது.

எங்கே போவது என்றாலும் நான் இல்லாமல் போகமாட்டாள். இருவரும் சேர்ந்து போகும்போது எங்களைப் பார்த்துக் காதலர்கள் என்றே எல்லோரும் கருதினார்கள். கதைத்தார்கள். யாருடைய பேச்சினையும் நாங்கள் கேட்கவில்லை.

"குமார் வாற சனிக்கிழமை உங்கட பிறந்தநாள் ஞாபகம் இருக்குதோ... நாங்கள் இரண்டுபேரும் யாழ்ப்பாணம் போறம். லிங்கம் கூல் பாரிலை ஐஸ்கிறீம் சாப்பிடுறம். படம் பார்க்கிறம், சனிக்கிழமை முழுவதும் என்னோடை இருக்கவேணும்" அன்புக் கட்டளையிட்டாள். என்னுடைய பிறந்த நாளுக்கு முதல்நாளான வெள்ளிக்கிழமை, கோயிலால் திரும்பிவரும்போது தன்னைச் சந்திக்கும்படி சொன்னது நினைவுக்குவர சென்றேன்.

"உடுப்பு பை ஒன்றை நீட்டினாள்." இந்தாங்கோ குமார் பிறந்தநாளுக்கு புது உடுப்பு ஜீன்ஸ்சும் சேட்டும். என்ரை தெரிவு பிடிக்குமோ? கேள்விக்கணை தொடுத்தாள்.

"நீங்கள் அன்போடை தெரிவு செய்திருக்கிறியள்... பிடிக்காமலா போகும்"

"குமார் ஒரு விசயம். வீட்டை போய் ஜீன்ஸ் பொக்கட்டை ஒருக்கா பாருங்கோ" சிரித்துவிட்டு சிட்டெனப் பறந்துவிட்டாள்.

வீட்டுவாசலை அண்மித்தபோது பேரதிர்ச்சி காத்திருந்தது. நிறையச் சனக்கூட்டம். அம்மா பேச்சு மூச்சின்றிய நிலையிலேயே படுத்திருந்தா. உடனே ஆட்டோவை வரவழைத்து தனியார் வைத்தியசாலையில் மருந்தெடுத்து திரும்பிவர இரவு பத்து மணியாகிவிட்டது.

வீட்டுக்குவந்த சற்றுவேளையில் கீரிமலைப் பகுதியில் இருபகுதிக்கும் சண்டைதொடங்கியது. எறிகணைகள் எங்கும் விழுந்து வெடிக்கின்றது. அந்தப் பகுதி மக்களும் வெளியேறிவந்த வண்ணமிருந்தனர். கீரிமலைப் பகுதியிலே நிலை கொண்டிருந்தவர்கள் முன்னேறி வந்துகொண்டிருப்பதாக தகவல் கிடைத்து எல்லோரும் நடுராத்திரியே வெளியேறிய வண்ணமிருந்தனர். நாங்களும் கையில் கிடைத்தவைகளை எடுத்துக்கொண்டு வெளியேறினோம்.

சண்டை ஓயவில்லை. நாங்கள் குடியிருந்த பகுதியிலே சண்டை நடந்தது. முன்னேறி விட்டனர்... எமது அகதிப் பயணமும் தென்மராட்சியை நோக்கி நகர்ந்தது.

ஆலயம், பாடசாலைகள் எங்குமே மக்கள் நிரம்பிக் காணப்பட்டனர். சுகியை ஒவ்வொரு இடமாகத் தேடினேன். எங்குமே காணமுடியவில்லை. சுகியும் குடும்பத்தினரும் வன்னி சென்றுவிட்டதாக அறிந்தேன். அவளின் பிரிவு என்னை வாட்டி வதைத்தது.

நாட்களும் ஒவ்வொன்றாகக் க்ரைந்து வருடமொன்றினைத் தாண்டியது.

"குமார் எனக்கும் வயது போட்டுது. பேசிவந்த கல்யாணங்களை வேண்டாம் எண்டு நிக்கிறாய் - நான் கண் மூடுறதுக்குள்ளை உன்ரை கலியாணத்தைப் பாக்கவேணும், இல்லாட்டி என்ரை உசிரும் சாத்தியடையாது" சொல்லிவிட்டு அம்மா அழுதாள்.

சுகியின் தொடர்புகளும் இல்லை. அம்மாவின் ஆசைக்கு இணங்கினேன். தடல்புடல் என்று தொடங்கி சம்பந்தக் கலப்புவரை வந்து விட்டது. விடிந்தால் சம்பந்தக் கலப்பு, உறவினர்களும் வந்துவிட்டனர். சுகி இல்லாவிட்டாலும் அவள் எனக்கு வாங்கிக் கொடுத்த பிறந்தநாள் உடுப்பையே அணிய விரும்பினேன்.

அன்றிரவுதான் உடுப்பு பார்சலை திறந்தேன். ஜீன்ஸ் பொக்கட்டுக்குள் கடிதம் ஒன்று இருந்தது. கடவுளே இது என்ன! கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

என்றும் அன்புடன் குமார், நேரிலே சொல்லும் தைரியம் இல்லை. அதனால் இதை எழுதுகிறேன். உங்களை உயிருக்கு உயிராக காதலிக்கிறேன். நீங்கள் இல்லாமல் என்னால் வாழமுடியாது. நீங்கள் எனக்கு வேணும். உங்கள்மீது பைத்தியமாய் உள்ளேன். நீங்கள்தான் என் வாழ்க்கைத் துணை என்று முடிவெடுத்துவிட்டேன். நான் விரும்புறன். உங்கள் விருப்பம் எனக்குத் தெரியாது. நீங்கள் என்னை விரும்புறீங்களா??? என்னை விரும்பினால் இன்று மாலை என் வீட்டை வாங்கோ. உங்களுக்காக நான் எதிர்பார்த்திருப்பேன். நீங்கள் வரவில்லை என்றால் நீங்கள் என்னை விரும்பவில்லை என்று நான் கருதுவேன். முடிவு உங்களிடமே இருக்கின்றது.

**இப்படிக்கு உங்களுடன் வாழத்துடிக்கும், சுகி.**

கடிதம் படித்து முடிய கத்திக் குளறினேன். இருவரும் காதலை எடுத்துச்சொல்லாமல் மறைத்தமையால் வந்த வினையை எண்ணி அழுதேன். சுகி என்னை மன்னித்துவிடு, இன்றுதான் கடிதம் பார்த்தேன். பைத்தியம் பிடிக்கும்போல இருந்தது எனக்கு. அம்மாவுக்காக பேசிய பெண்ணை ஏமாற்றாமல் கழுத்தை நீட்டினேன். ஒரு பிள்ளைக்கும் அப்பாவாகிவிட்டேன்.

படலை திறந்து என் மனைவிவரும் ஓசை என் செவிப்பறையைத் தாக்கியதால் மனத்திரையிலே ஓடிய பழைய காதல் கதை ஓடி மறைந்துகொண்டது.

எதுவந்தாலும் வரட்டும் என்று சுகியை தேடுவது என்ற முடிவுடன் அவளைக் கண்ட வீதிக்குப் போனேன். றோட்டிலே காத்துநின்றேன். மோட்டார் சைக்கிள் ஒன்று என்னருகில் வந்துநின்றது. என்னுடன் படித்த சிவா. இருவரும் கருத்துக்களைப் பரிமாறினோம். இடப்பெயர்வுடன் வன்னிக்குப் போய் வெளிநாட்டுக்குப் போய் கடந்தவாரமே வந்ததாகவும் சொன்னான்.

சுகியைப் பற்றி அவனிடம் கேட்டேன். "நீ ஏனடா அவளை ஏமாந்தினனி. உனக்காக அவள் ஏங்கித் தவிச்சாளடா? கடைசியிலை தாய், தகப்பன் கட்டாயப்படுத்தி ஒருத்தனுக்கு கட்டிவைச்சினம். ஒரு பிள்ளையும் இருக்கடா? ஆனால் சுகி இப்ப விதவையடா? எங்கையோ மிக்சர் கொம்பனியிலை வேலை செய்யிறதாக அறிஞ்சனான். சரி யான கஸ்டமடா? அவளுக்கு" சிவா சொன்னதைக் கேட்டு உண்மைகளை எடுத்துச்சொல்லி அழுதேன்.

சுகிக்கு உதவி செய்ய வேண்டும் என்று ஐயாயிரம் ரூபா காசையும் எடுத்துக்கொண்டு அவள் வரும் பாதையை நோக்கி போனேன்.

தூரத்திலே சுகி நடந்துவருவது தெரிகிறது. கடந்தகால நிகழ்வுகளைச் சொல்லி கத்திக்குளறவேண்டும் என்னும் எண்ணத்துடன் அவளுக்காக நான் காத்துநிற்கிறேன். சுகி எனக்கு அருகே வந்துகொண்டிருக்கிறாள்...

வாரமொரு வாழ்வியற் சிந்தனை

# கற்றல் தோல்விக்கு அடிப்படைக்காரணம் என்ன?

இன்று மாணவர்கள் மத்தியில் இருக்கும் பாரிய பிரச்சினை "பல மணி நேரம் முழித்திருந்து கற்றும்கூட பரீட்சையில் எதுவும் எழுத முடியவில்லையே...! புள்ளிகளில் மாற்றம் இல்லையே! என்பதுதான். பக்கம் பக்கமாக வாசித்துக்கொண்டு போவதால் எந்தப் பயனும் இல்லை என்பதை மாணவர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். நினைவு மீள் எண்ணக்கரு இவ்வாறு கற்றலின்மூலம் வெளிப்படாது. அப்படியானால் எப்படித்தான் கற்பது என்கிறீர்களா...?

முதலில் ஒரு பந்தியை வாசியுங்கள். பின்னர் புத்தகத்தை மூடிவிட்டு அந்தப் பந்தியில் சொல்லப்பட்ட விடயம் என்ன என சொல்லிப் பாருங்கள். முடியவில்லை யானால். மீண்டும் அதே பந்தியை வாசியுங்கள். மீண்டும் புத்தகத்தை மூடிவிட்டு சொல்லிப்பாருங்கள். சொல்ல முடிந்தால் அடுத்த பந்தியை வாசித்து அதையும் இவ்வாறு சொல்லிப் பாருங்கள். பின்னர் இவ்விரண்டு பந்தியையும் சேர்த்து சொல்லிப்பாருங்கள். இவ்வாறு தொடர்ந்து செய்யும்போது இரண்டு அலகுகள் முன்னர் படித்த உங்களிற்கு இரண்டு பந்தி மாத்திரமே தற்போது படிக்கமுடியும். கனமாக இருக்கும் நிறுத்துங்கள். இடைவிட்டு பின்னர் படியுங்கள் இவ்வாறு செய்யும்போது அந்த இரண்டு பந்தியும் என்றுமே உங்களிற்கு மறக்காது. இவ்வாறு சிறிதுசிறிதாக முயற்சி செய்யுங்கள். கற்றவை பரீட்சைக்கு உதவி செய்யும். பரீட்சைப் புள்ளிகளில் மாற்றம் வரும்.

### படிக்கும்போது மனஅழுத்தம் ஏற்படுகிறதா?

படிப்பு என்றாலே சிலருக்கு கசக்கும். அவர்களுக்குத்தான் படிப்பு மன அழுத்தத்தை தரும் என்பது இல்லை. படிக்கும் ஒவ்வொரு மாணவரும் மனஅழுத்தத்தை எதிர்கொள்ளலாம். அதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. தீர்வுகளும் இருக்கின்றன. படிக்கும்போது மனஅழுத்தம் எந்த வழிகளில் வருகிறது? அதற்கு தீர்வு என்ன என்பதை இங்கே அறிவோம்...


கல்விசார்ந்த மனஅழுத்தம் முக்கியமான மூன்று காரணங்களால் ஏற்படுகிறது அவை: 1. சோர்வு. 2. இழிவை சந்தித்தல். 3. தயார் செய்யாமை. இந்த நிலை ஏற்படக் காரணம் என்ன? அவற்றுக்கான தீர்வுகளையும் பார்ப்போம்.

### சோர்வு:

பெரும்பாலான மாணவர்கள் சோர்வினால்தான் மனஅழுத்தத்தை எதிர்கொள்கிறார்கள். நன்றாகப் படிக்கும் மாணவர்களும் படிப்பதால் சோர்வடையக்கூடும்.

படித்ததை எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளமுடியாத மாணவர்கள் சீக்கிரமே சோர்வடைந்துவிடலாம். அதிகமான பாடங்கள் படிக்கவேண்டி இருப்பதால் நீண்டநேரம் படிக்க வேண்டியது அவசியமாகிவிடுகிறது. இதனால் அனைவருமே சோர்வை சந்திக்கிறார்கள். அது படிப்பில் ஆர்வமின்மையையும், பாடங்களில் தேக்கத்தையும் உருவாக்கிவிடுகிறது. அதன் தொடர்ச்சியாக பயம் ஏற்பட்டு மன அழுத்தமும் தொற்றிக்கொள்கிறது.

படிக்கும்போது சோர்வு ஏற்படாமல் இருக்க ஒரு மணிநேரத்திற்கு ஒரு முறை 10 நிமிட ஓய்வு அல்லது இடைவெளி விட்டு படிக்கலாம். அந்த நேரத்தில் நண்பர்களுடன் வேடிக்கையாக பேசுவது, நகைச்சுவைகளை ரசிப்பது என்று மனதை லேசாகிக் கொள்வது மனஅழுத்தத்தை தடுக்கும். படித்ததை எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளமுடியாதவர்கள் நண்பர்களுடன் கூட்டாக சேர்ந்து படித்து ஒருவருக்கொருவர் படித்ததை கூறி மனதில் ஏற்றிக் கொள்ளலாம்.



கேட்பதாலும், பாடங்களை படங்கள், செயல் விளக்கங்கள்மூலம் எளிதில் பார்த்து தெரிந்துகொள்வதால் எளிதில் நினைவில் ஏற்றிக் கொள்ளமுடியும். பெற்றோர், ஆசிரியர், பயிற்சியாளர், நண்பர்கள் உதவியுடன் படித்தால் பாடம் புரியவில்லையே என்ற கவலையும், மன அழுத்தமும் ஒழியும்.

### இழிவை சந்தித்தல்:

'இதுகூடத் தெரியாதா?' 'உனக்கு எவ்வளவு சொன்னாலும் புரியாது' என்று ஆசிரியர்களால் அவமானப்படுத்தப்படுவது, 'அவன் கொஞ்சம் மக்கு' என்று சக மாணவர்கள் கேலிசெய்வது போன்ற இழிவுகளை சந்திப்பதால் பலருக்கு மனஅழுத்தம் தொற்றிக்கொள்ளும். பெரும்பாலும் சராசரி மற்றும் பின்தங்கிய மாணவர்களே இத்தகைய நிலையை எதிர்கொள்கிறார்கள்.

**தீர்வு:**

தன்னை கேலி செய்பவர்களின் வாயடைக்கும்விதமாக தொடர் பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்திக்கொள்வதே சிறந்த வழி. மேற்சொன்னதுபோல ஆசிரியர், பயிற்சியாளர், நண்பரின் உதவியை நாடலாம். பெற்றோரும் இதுபோன்ற சராசரி மாணவர்களை ஊக்குவித்து தெம்பூட்டவேண்டும்.

### தயார் செய்யாத நிலை :

பாடங்களை அவ்வப்போது படிக்காமல், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சேர்த்து வைப்பவர்கள் அதிக மனஅழுத்தத்தை எதிர்கொள்வார்கள். குறிப்பாக தேர்வு நெருங்கும்வேளையிலும், ஆசிரியர் கேள்விகேட்டு சோதிக்கும் வேளையிலும் இவர்களின் இதயத்துடிப்பு பயத்தால் எகிறி விடும். தொடர்ந்து அதுபோன்ற சூழலை சந்திக்கநேர்ந்தால் நிச்சயம் மனஅழுத்தம் தொற்றிக்கொண்டு படிப்பில் சலிப்பு ஏற்படும்.

**தீர்வு :** தவறை உணர்ந்து சீராக படித்து தயார்ப்படுத்திக் கொள்வது மன அழுத்தத்தை தடுப்பதுடன், அதிக மதிப்பெண் பெறவும் உதவும்.

மனஅழுத்தம் தொற்றிக் கொள்ளாமல் தவிர்க்க சில பொதுவான பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம். அவை...

### உடலை கவனித்தல்:

இடையறாத பணிகளால் உடல் வேகமாக சோர்வடையும். அதுவும் படிப்பானது, மூளைக்கு அதிகமாக வேலைகொடுப்பதால் அது எளிதில் சோர்வடைந்து, உடலையும் பாதிக்கிறது. எனவே உடலை சில பயிற்சிகள் செய்து புத்துணர்ச்சியுடன் வைத்துக் கொள்வது கல்வி எளிதில் மனதில் பதிய உதவும். இதற்காக கழுத்து, கை, கால், பின்புறம் போன்ற மூட்டு இணைப்புகளுக்கு பயிற்சி கொடுக்கவேண்டும். ஏராளமான பயிற்சி முறைகள் இணையதளத்தில் விளக்கத்துடன் கிடைக்கின்றன. அவற்றில் சில எளிதான பயிற்சிகளை, படிக்க அமரும் முன்பு சுமார் 15 நிமிடங்கள்வரை செய்து பழக்கப்படுத்தலாம். கண்களை மூடித் திறப்பது, விரித்துப் பார்ப்பது, பக்கவாட்டில் பார்ப்பது போன்றவை புத்தகத்தையே கூர்ந்து நோக்கும் கண்களுக்கு சிறந்த பயிற்சியாகும். நீண்டநேரம் படிக்கும்போது இடையில் கண்களுக்கு இந்த பயிற்சியை கொடுக்க வேண்டும். உடம்பை

**ஆர்.கே.மேனன்**

வெதுவெதுப்பான நீரால் கழுவுவது, அவ்வப்போது மசாஜ் செய்து உடலை புத்துணர்ச்சி செய்து கொள்வது நல்லது.

### மனதை புத்துணர்ச்சிப்படுத்துதல் :

அழுத்தத்தால் மனம் சோர்ந்து விட்டால் எதிர்மறை எண்ணங்கள் அலைமோத ஆரம்பிக்கும். கவனமும் திசை திரும்பி கல்வியில் மனம் லயிக்காது. எனவே மனதை புத்துணர்ச்சியாக வைத்துக்கொள்வது படிப்பதற்கு ரொம்ப அவசியம். அவ்வப்போது வெளியே சென்றுவருவதால் மனம் லேசாகும். மரங்கள் அடர்ந்த சோலை, பூங்காக்களுக்கு சென்று தூய காற்றை சுவாசித்து திரும்பலாம். வீட்டில் அமர்ந்த படியே தியானம், மூச்சுப்பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம்.

### மகிழ்ச்சிக்கு நேரம் செலவிடுதல் :

மனஅழுத்தம் தொற்றிக் கொள்ளாமல் தடுப்பதற்கான எளிய வழி இதுதான். மனம் விட்டு சிரித்துப் பேசுவதற்கும், விளையாடுவதற்கும், வேடிக்கையாக பொழுது போக்குவதற்கும் சிறிது நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். படிப்பிற்கு இடையிலும் சில நிமிடங்கள் இப்படி மனதை மகிழ்ச்சிப்படுத்தலாம். சிரிக்கும்போது 'என்டார்பின்' எனும் இரசாயனம் உடலில் சுரந்து மூளையை சுறுசுறுப்பாக்குகிறது. மகிழ்ச்சியாக உணர வைக்கிறது.

படிப்பை சிதைக்கும் மன அழுத்தத்தை விரட்டி வெற்றி பெறுங்கள்!

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 650

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 648 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ச | 2 தோ | 3 ஷி | 4 ஒ | 5 மு | 6 ரா |
| 7 து | 8 ய | 9 ரி. | | 11 க | 12 தே |
| 13 ர் | 14 தி | | 16 மி | 17 நி | 18 ர் |
| 19 க் | | 21 மா | 22 ன் | 23 வா | |
| 25 க | 26 டி | 27 ண் | 28 க | 29 சி | 30 ம் |
| 31 தி | 32 ரி | 33 பு | | 35 னி | 36 ஆ |

**மேலிருந்து கீழ்**

1. மூர்க்கத்தனமாக. (இரண்டாம் எழுத்து இடம் மாறியுள்ளது)
2. எகிப்திலே உள்ள தீபகற்பப் பகுதி.
3. சமர்த்தன், திறமுடையவன். (குழம்பியுள்ளது)
5. பொன்னாலான ஆடை.
6. வேதத்தின் உட்பொருள்.
26. இரங்கு ; நெகிழ்.(திரும்பியுள்ளது)

**இடமிருந்து வலம்**

01. செய்திப் பத்திரிகையின் இதயம் எனப்படுவது (கடைசி எழுத்து விடப்பட்டுள்ளது)
07. ஓரிராகம்.
11. கொத்துமல்லி ; வாசஸ்தானம்.
13. எகிப்து நாட்டின் தலைநகர் (திரும்பியுள்ளது)
17. ஒரு வகை கருவி (திரும்பியுள்ளது)
21. இரண்டு. (குழம்பியுள்ளது)
25. அழகு : பெருமை. (குழம்பியுள்ளது)
31. கேடகம். ஒருவித ஆயுதம்.(குழம்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 23.11.2015 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 650
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.647 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எம்.ரவிவர்மன், கல்லடி, மட்டக்களப்பு.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. க.நிருஜன், பிரதான வீதி, மருதானை.
02. எஸ்.திகாம்பரம், மட்டுவில், சாவகச்சேரி.
03. சு.திவாகர், பேராதனை, கண்டி.
04. ம.சத்தியா, ரெட்பானா, விசுவமடு.
05. டி.றொனால்ட், பேசாலை, மன்னார்.
06. ஆர்.அருந்ததி, கோப்பாய், யாழ்ப்பாணம்.
07. ச.அனித்தா, திருநாவற்குளம், வவுனியா.
08. ந.செவ்வந்தி, பிரதான வீதி, மந்திகை.
09. என்.வண்ணன், பூநகரி, கிளிநொச்சி.
10. எம்.எம்.அஸ்வர், நல்லூர், யாழ்ப்பாணம்.




# நாசரின் சர்ச்சையான பேச்சு

நடிகர் சங்க தலைவராகி நாசர் பல அதிரடி முடிவுகளை எடுத்துவருகிறார். இந்நிலையில் இவர் சமீபத்தில் கா கா கா என்ற படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டார். இதில் பேசிய நாசர் "பேப்பரை பார்த்தால் ஒரு நாளைக்கு 60 படங்களுக்கு மேல் விளம்பரம் உள்ளது. இத்தனை படம் வந்தால் ரசிகர்கள் எதை பார்ப்பது என்று குழம்புவார்கள்" எனக் கூறினார். நடிகர் சங்கத் தலைவராக இருந்து படத்தின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும் என இவர் மறைமுகமாக பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.




# வேதாளமா? தூங்காவனமா?

தீபாவளியை முன்னிட்டு வேதாளம், தூங்காவனம் ஆகிய படங்கள் திரைக்கு வந்துவிட்டது. இந்நிலையில் தமிழகத்தை பொறுத்தவரை வேதாளத்திற்கே அதிக திரையரங்குகள் கிடைத்து உள்ளது. அமெரிக்காவில் தூங்காவனத்திற்கு அதிக திரையரங்குகள் கிடைக்க, மலேசியாவில் அஜித் வென்றுள்ளார்.

மலேசியாவில் லிங்காவிற்கு பிறகு அதிக திரையரங்குகளில் வரும் படம் வேதாளம்தானாம், கிட்டத்தட்ட 101 திரையரங்குகளை பிடித்துள்ளது.

# பாகுபலி-2 அதிர்ச்சி தகவல்

பிரமாண்ட இயக்குனர் ராஜமௌலி இயக் கத்தில் இந்த வருடம் வெளிவந்து மெகா ஹிட் ஆன படம் பாகுபலி. இப்படம் பல சாதனைகளை செய்துமுடிக்க, தற்போது இப்படத்தின் இரண்டாம் பாகத்திற்கு அனைவரும் வெயிட்டிங். இந்நிலையில் இப்படம் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் திரைக்குவருவதாக இருந்தது. ஆனால், சமீபத்தில் வந்த தகவல் ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. பாகுபலி-2 படப்பிடிப்பு பாதி முடிந்தாலும், இன்னும் பிரமாண்டமாக இருக்கவேண்டும் என்பதற்காக படக்குழு கடுமையாக உழைத்துவருகிறதாம். இதனால், படம் 2017ஆம் ஆண்டுதான் திரைக்கு வரவாய்ப்புள்ளது எனக் கூறப்படுகிறது.

# விஜயைப் புகழும் எமி

இளையதளபதி விஜய் எப்போதும் எல்லோரிடத்திலும் அன்பாக பழகக்கூடியவர். அந்தவகையில் அட்லீ இயக்கத்தில் இவர் நடித்துவரும் படத்தில் சமந்தா, எமி ஜாக்ஸன் ஜோடியாக நடித்து வருகின்றனர். இந்நிலையில் சமீபத்தில் படப்பிடிப்பில் கலந்துகொண்ட எமி, விஜய்யுடம் பேச கொஞ்சம் தயங்கினாராம். ஆனால், விஜய் மிக எளிமையாக அவரிடம் பழகினாராம். மேலும், மிகவும் அன்பாகவும் நடந்துகொண்டாராம். தற்போது விஜய் புராணம்தான் செல்லும் இடத்தில் எல்லாம் பாடுகிறாராம் எமி.

# ஹொலிவூட்டில் முருகத

முருகதாஸ் இயக்கத்தில் நடித்தா
ஹீரோவின் திரைப்பயணம் அடுத்தகட்ட
எட்டும். அந்த வகையில் அஜித், விஜ
என அனைவரின் திரைப்பயணத்தில்
படங்களை கொடுத்தவர் இவர்.
இவர் இயக்கத்தில் வெளி
படத்தில் வில்லனாக நடி
நீல் நிதின் முகேஷ்.
இவர் பொலிவூட்டில்



## ...ருகதாஸின் வில்லன்

...இயக்கத்தில் நடித்தாலே அந்த
...ரைப்பயணம் அடுத்தகட்டத்தை
...வகையில் அஜித், விஜய், சூர்யா
...ின் திரைப்பயணத்தில் முக்கியமாக
...ா கொடுத்தவர் இவர்.
...வர் இயக்கத்தில் வெளிவந்த கத்தி
...டத்தில் வில்லனாக நடித்தவர்
நீல் நிதின் முகேஷ்.
இவர் பொலிவூட்டில்

பிரபல ஹீரோ என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் ஹொலிவூட்டில் தயாராகிவரும் கேம் ஒப் த்ரோசன்ஸ் என்ற சீரியலில் முக்கியமான ரோலில் நீல் நிதின் நடிக்க இருக்கின்றாராம்.



என்னுள் ஆயிரம்



...டி கட்டிப்பிடிடா...

## குழந்தை நட்சத்திரமாக விஜய் படத்தில் மீனா மகள் அறிமுகம்


விஜய் நடித்துவரும் அவரது 59ஆவது படம் வேகமாக வளர்ந்து வருகிறது. அட்லீ இயக்கும் இந்த படத்தில் சமந்தா, எமிஜாக்சன், சத்யராஜ், மகேந்திரன், சுனைனா, பிரபு, ராதிகா, கே.எஸ். ரவிக்குமார் ஆகியோரும் நடித்துவருகிறார்கள்.

கிரைம் கலந்த அக்ஷன், திரில்லர் படமாக இது உருவாகிறது நடிகை மீனாவின் மகள் நைனிகாவும் இந்த படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகிறாள். விஜய் பொலிஸ் அதிகாரியாக வேடம் ஏற்றுள்ள இந்த படத்துக்கு காக்கி, சந்திரியன், வெற்றி என்று பல பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார்.

இந்த படத்தின் பஸ்ட்லுக், டீசர் ஆகியவை தயாராகிவருகின்றன. இவற்றை தீபாவளி தினத்தில் வெளியிடவேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்களுடைய ஆவலை நிறைவேற்றும்வகையில் ஏற்பாடுகளை செய்யும்படி இயக்குனர் அட்லீ மற்றும் படக்குழுவினரிடம் விஜய் கேட்டுக்கொண்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## 24 படத்தின் பர்ஸ்ட் லுக்

சூர்யா நடிப்பில் அடுத்த ஆண்டு பொங்கலுக்கு 24 படம் திரைக்கு வரவிருந்தது. இந்நிலையில் இப்படத்தின் போ... கூட இன்னும் ...ளிவரவில்லை. படக்குழு தரப்பில் தெரிவித்த தகவலின்படி இப்படத்தின் பர்ஸ்ட்லுக் நவம்பர் 24ம்திகதி வெளிவரும் என கூறப்பட்டுள்ளது. இப்படத்தில் சூர்யா 3 வேடங்களில் நடிக்கின்றார் என ஒரு தகவலும் கசிந்துள்ளது.



நான் பேய் பேசுறேன்

## நகைகள் அணிவதில் ஆர்வம் வந்துள்ளது: அனுஷ்கா

நடிகை அனுஷ்கா பாகுபலி, ருத்ரமாதேவி படங்களில் ராணி வேடங்களில் நடித்தார். இந்த படங்கள் தமிழ், தெலுங்கு மொழிகளில் சமீபத்தில் வெளியானது. ஆர்யா ஜோடியாக நடித்த இஞ்சி இடுப்பழகி படமும் விரைவில் வெளிவர இருக்கிறது. பாகுபலி இரண்டாம் பாகத்திலும் நடித்துக்கொண்டு இருக்கிறார்.

மேலும் 3 படங்கள் கைவசம் உள்ளன. நகைகள் அணிய திடீர் ஆர்வம் ஏற்பட்டுள்ளதாக அனுஷ்ககூறினார். இது குறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:-

ருத்ரமாதேவி படத்தில் நடிப்பதற்கு முன்புவரை எனக்கு நகைகள் அணியப்பிடிக்காது. கழுத்தில் எதுவும் அணியமாட்டேன். காதிலும் தோடுகள் அணிவதில்லை. கழுத்தில் நகைகள் அணிந்துசெல்லும் பெண்களை வேடிக்கையாக பார்ப்பேன். ஆனால் இப்போது மாறிவிட்டேன். ருத்ரமாதேவி படத்தில் நடித்தபிறகு நகைகள்மீது ஆர்வம்வந்துள்ளது.

அந்த படத்தில் ராணி வேடத்தில் வந்தேன். கதாபாத்திரத்துக்காக நிறைய நகைகள் அணியவேண்டி இருந்தது. பிரத்தியேகமாக செய்யப்பட்ட அசல் தங்கநகைகளை அணிந்து நடித்தேன். அந்த கதாபாத்திரம் எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்போது எனக்கு நகைகள் அணிவதில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. பெண்கள் நகைகள் அணிந்துபோனால் அவற்றை உற்றுப்பார்க்கிறேன். நகைக்கடைகளிலும் ஏறி இறங்குகிறேன். பெண்களுக்கு நகைகள் அழகுசேர்க்கிறது என்பதை புரிந்து கொண்டுவிட்டேன், இவ்வாறு அனுஷ்கா கூறினார்.






# கிராமங்களை நோக்கி...

1960-களின் நடுப்பகுதி...! இக்காலப்பகுதியில் தீண்டாமைக்கெதிரான போராட்டங்கள் கிராமப்புறங்களிலே மிகத் தீவிரமாக நடைபெறத் தொடங்கியிருந்தது...! மனித சமூகத்தையே வெட்கித்தலைகுனிய வைக்கும் “தீண்டாமை” என்னும் மிகமோசமான நடைமுறை மன்னர் காலத்திலிருந்து யாழ்.மண்ணில் தொடர்ந்து கொண்டே இருந்தது. உண்மையிலேயே இந்தத் “தீண்டாமை” என்னும் கொடுமை பற்றியும், அதன் அருவருக்கத்தக்க நடைமுறை பற்றியும் இன்றைய சந்ததியினருக்கு எதுவுமே தெரியாது. மன்னர் காலத்திலிருந்து 1970-கள் வரை யாழ். மண்ணில் தொடர்ந்துகொண்டிருந்த இந்தத் தீண்டாமைக் கொடுமை பற்றியும்... கிராமப்புற மக்கள் இந்தத் தீண்டாமைக் கொடுமையால் எதிர்கொண்ட மனித உரிமைசார்ந்த பிரச்சினைகளைப் பற்றியும் இன்றைய சந்ததியினர் தெரிந்து கொள்ளும்போதுதான் யாழ்ப்பாணத்து மேட்டுக்குடித் தலைமையின் மிகக் கொடூரமான மனித உரிமைமீறல் சிந்தனை பற்றியும் அதன் நடைமுறைகள் பற்றியும் எமது இளம்சமூகத்தினரால் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளமுடியும்.

தீண்டாமைக் கொடுமையால் கடந்த காலங்களில் யாழ். மண்ணில் நடைபெற்று வந்த மனித உரிமை மீறல் செயற்பாடு என்பது சாதாரணமான ஒன்றல்ல. அது சர்வதேச ரீதியாகக்கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்படவேண்டிய பாரதூரமான கிரிமினல் குற்றங்கள் என்பதற்குப் பல்லாயிரக்கணக்கான சம்பவங்கள் உதாரணமாய் இருந்தபோதும்... நான் நேரில்கண்டு அனுபவித்த ஓர் துயரச் சம்பவத்தை மட்டும் இங்கு குறிப்பிடலாமென எண்ணுகின்றேன்! ஏனெனில் அப்போதுதான் இந்தத் தீண்டாமை என்னும் மிகக் கொடூரமான மனித உரிமை மீறல் குற்றங்களைப் பற்றி எமது இன்றைய இளம்சமூகத்தினரால் உணர்ச்சிபூர்வமாக உணரமுடியும்.

யாழ்ப்பாண நகரத்திலிந்து 5 கி.மீ தூரத்தில் உள்ள ஓர் சிறிய கிராமம். அந்தக் கிராமத்தில் நெசவுத் தொழிலை குடிசைக் கைத்தொழிலாய் செய்துவந்த ஓர் குடிமைச்சமூகத்தை சேர்ந்த ஓர் இளைஞனுக்கும் மேட்டுக்குடி சமூகத்தை சேர்ந்த ஒரு கனவானின் வீட்டில் சமையல் வேலைக்காரனாய் நின்ற ஒருவரின் மகளுக்கும் இடையே காதல் தொடர்பு ஏற்பட்டது. சாதி, மதம் என எதையுமே “காதல்” பார்ப்பதில்லை என்பதற்கிணங்க அவர்களது காதல் ஆழமாக வளர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் அந்தப் பெண்ணுடைய வீட்டாருக்கு எதிர்பாராதவிதமாக இவர்களது காதல் விவகாரம் தெரிய வந்துவிட்டது. அதனால் அவர்கள் இருவரும் உடனடியாகவே வீட்டைவிட்டு வெளியேறவேண்டிய சமூகச் சூழல் உருவானது. அதனால் எந்தவிதமான முன் ஆயத்தமுமின்றி தனது காதலியை தன்னுடன் கூட்டிக்கொண்டு அவன் வீட்டைவிட்டு வெளியேறினான். இவ்வாறு வெளியேறிய அந்த இளைஞனுக்குத் தாம் எங்கு போவது? எப்படித் தம்மைப் பாதுகாத்துக்கொள்வது என எந்த ஒரு திட்டமிடலும் இருக்கவில்லை. ஜாதி மாறித் திருமணம் செய்வதால் பெரும் ஆபத்தை தாம் எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதை அந்த இளைஞன் உணர்ந்திருந்த போதும் அந்த இக்கட்டான சூழலில் அவனால் எதுவுமே செய்யமுடியாமல் போய்விட்டது. எது வந்தாலும் எதிர்கொள்ள வேண்டியதுதான் என்ற மனஉறுதியுடன் தனக்குத் தெரிந்த ஒருவரின் வீட்டிற்குத் தன் காதலியுடன் சென்றான்.

மறுநாள் விடிந்தது. விஷயத்தை அறிந்துகொண்ட அந்தப் பெண்ணின் பெற்றோர்... தமது மேட்டுக்குடி எசமான்களுக்கு நடந்த சம்பவத்தை உடனடியாக அறிவித்தனர். அந்த மேட்டுக்குடி எசமான்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொலிசாரின் உதவியுடன் அப்பெண்ணை அவனிடமிருந்து பிரித்தனர். அந்த இருவரினதும் இன்பக்கனவுகளை கலைத்ததோடு மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை. தீண்டத்தகாத ஒருவனுடன் ஒரேயொரு நாள் அந்தப் பெண் வாழ்ந்துவிட்டாள் என்பதற்காக அவளை உயிரோடு மண்ணெண்ணெய் ஊற்றிக் கோரத்தனமாகத் தீமூட்டி துடிக்கத்துடிக்க அந்த பதினெட்டு வயதுப் பருவப் பெண்ணைக் கொன்றனர். அந்தப் பருவப் பெண்ணின் அவலக்குரல் ஆதிக்க வெறிகொண்ட மேட்டுக்குடியினரின் மனங்களில் எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அந்தக் கொடூரமான கொலைபற்றிய எந்த ஒரு விசாரணையும் இடம்பெறவில்லை.

இவ்வாறு யாழ்ப்பாணத்து தமிழ் மேட்டுக்குடித் தலைமையின் தொடர் வரலாற்றை நாம் பார்ப்போமெனில், அவர்கள் கிராமப்புறத்து அப்பாவி உழைக்கும் மக்களைக்கொன்று குவித்து அவர்களது பிணங்களின் மேல்தான் தங்களது ஆளும் அதிகாரத்துவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி வருகின்றனர் என்ற தெளிவான உண்மையை நாம் காணலாம். அது மட்டுமல்ல. ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், யாழ்ப்பாணத்து மேட்டுக்குடிக் குடும்பங்களினது ஆடம்பரமான வாழ்க்கைக்காகவும் அன்று கடுமையாக உழைத்த ஒரு சமூகத்தை யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி மேலாதிக்கத் தலைமை தீண்டத்தகாதவர்களென ஒதுக்கவைத்து... அவர்களது மனித உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு அவர்களது வாழ்வியல் முன்னேற்றங்களை தடுத்ததோடு அவர்களைப் பெரும் அவமதிப்பிற்கும் உள்ளாக்கிவந்தனர்.

மனிதர்களால் பிறந்த அவர்களிற்கு முதலாளித்துவ ஜனநாயகத்தால் வழங்கப்பட்ட உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டன. 1940களிலிருந்து 1950களின் நடுப்பகுதிவரை அவர்களிற்கு (BUS) பேரூந்தில் பிரயாணம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டது. தனியார் பாடசாலைகளில் படிப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, பொதுக்கிணறுகளில் அவர்கள் நீர் எடுக்கக்கூடாது. தேனீர் கடைகளிற்குள் அவர்கள் உட்பிரவேசித்து அங்குள்ள ஆசனங்களில் அமர்ந்து அவர்கள் தேனீர் அருந்தமுடியாது. தேனீர் கடைகளில் அவர்களிற்கென்று கறள்கட்டிய மூக்குப் பேணிகள் வெளியே வைக்கப்பட்டிருக்கும். கடைக்கு வெளியே நிலத்தில் அமர்ந்தவாறு அக்கறள் கட்டிய மூக்குப் பேணிகளில் அவர்கள் தேனீர் அருந்தி சிற்றுண்டிகளைச் சாப்பிடவேண்டும்.



அத்தோடு ஆலயங்களிற்குள் அவர்கள் உட்பிரவேசிக்கக்கூடாது. சலூன்களில் அவர்கள் முடிவெட்டமுடியாது. பொது நூலகங்களில் கதிரையில் அமர்ந்து அவர்கள் பத்திரிகை படிக்கக்கூடாதெனப் பெரும் மனித உரிமை மீறல் செயற்பாடுகளை யாழ்ப்பாணத்து மேட்டுக்குடியினர் அவர்கள்மீது திணித்து அவர்களை அடக்கி ஒடுக்கிவந்தனர்.

இந்த மோசமான ஒடுக்குமுறைகள் பற்றி இலங்கை அரசாங்கமோ, சர்வதேசமோ எந்தவிதத்திலும் அக்கறைப்படவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்து முற்போக்கான இளைஞர்கள் பலர் இணைந்து மேற்படி ஒடுக்குமுறைகளிற்கு எதிரான போராட்டங்களை ஆங்காங்கு நடாத்தியபோதும் ஓர் சரியான ஸ்தாபனப் பலமில்லாததால் அவர்களால் அப்போராட்டங்களில் வெற்றிபெற முடியவில்லை.

1960-களில் இந்தத் தீண்டத்தகாத மக்கள் மத்தியில் தமது அரசியல்பணியை மேற்கொண்ட திரு.சண்முகதாஸன் அவர்களது தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி இந்த மோசமான தீண்டாமைக் கொடுமையை மிகத்தீவிரமாக எதிர்க்க வேண்டுமென முடிவுசெய்தது. அந்த முடிவின் அடிப்படையில் “தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்” என்ற பெயரில் ஓர் மக்கள் அமைப்பை சுண்ணாகத்தைச் சேர்ந்த திரு.என்.ரி.என். நாகரட்ணம் அவர்களது தலைமையில் உருவாக்கி தீண்டாமைக்கெதிரான போராட்டத்தை உடனடியாக ஆரம்பித்தது. ஸ்தாபனரீதியாகத் திட்டமிட்டு மிகுந்த கட்டுக்கோப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டமானது...

அச்சுவேலி, கரவெட்டி, சங்கானை, மாவிட்டபுரம், மட்டுவில், கைதடி, மந்துவில், சுண்ணாகம் எனப் பல இடங்களிலும் மிகத் தீவிரமாக நடைபெறத் தொடங்கியது. இவ்வாறு தீண்டாமைக்கெதிராக பல்வேறு இடங்களிலும் மிகத்தீவிரமாக நடைபெற்ற இப்போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதற்கு யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடித்தலைமையானது மிகத்தீவிரமாக முயன்றது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் நடைபெற்ற ஆலயப் பிரவேசத்திற்கான முயற்சி பெரும் மக்கள் போராட்டமாக மாறியபோது முழுத்தமிழர் சமூகத்தினதும் ஏகதலைவனாக விளங்கிய தந்தை செல்வநாயகம் அவர்கள்தான் ஒரு கிறிஸ்தவன் எனக்கூறி தந்திரமாக ஒதுங்கிக் கொண்டார். ஆனால் தமிழர்களிற்கு ஒரு தனிநாடு வேண்டுமென முதல் முதல் முழங்கிய யாழ்ப்பாணத்து மேட்டுக்குடி தலைவர்களில் ஒருவரான அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் அவர்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வாசலில் நின்று ஆலயப் பிரவேசம் செய்ய முயன்ற மக்களை மிகத் தீவிரமாகத் தடுத்துக் கொண்டிருந்தார். அப்போதும் தந்தை செல்வா மௌனம் காத்தார்.

பணபலமும் அதிகார பலமும் கொண்ட அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தால் தீண்டாமைக்கெதிரான போராட்டத்தை தடுத்துநிறுத்த முடியவில்லை. மேலும் தீவிரங்கொண்ட இப்போராட்டங்களால் கிராமப்புறங்களில் வாழ்ந்த முற்போக்கு சிந்தனைகொண்ட இளைஞர்கள் மிகவும் உற்சாகமடைந்தனர். இதனால் மேலும் பல கிராமங்களில் தீண்டாமைக்கெதிரான குரல்கள் வீறுகொண்டெழுந்தன. [illegible] போராட்டத் தலைமை மிகுந்த [illegible] கொண்டது. யாழ்ப்பாணத்து மே[illegible] தலைமையாய் விளங்கிய தமிழ[illegible] [illegible] அவர்கள் “யாழ்ப்பாணத்தில் சின்ன [illegible] [illegible] போராட்டங்களை அடக்க இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென” இலங்கை பாராளுமன்றத்தில் உரத்துக் குரல் கொடுத்தமைவுக்கு தீண்டாமைக்கெதிரான போராட்டங்கள் யாழ். மண்ணில் மிகவும் தீவிரம் பெற்றுக்கொண்டிருந்தன.

இவ்வாறான ஒரு சூழலில் இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதி இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலிலே யாழ்ப்பாணத்து நிலப்பிரபுத்துவ கனவானான திரு.சி.கதிரவேற்பிள்ளை அவர்கள் கோப்பாய் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். இந்தத் தேர்தலை கோப்பாயில் நிலவி வரும் தீண்டாமைக் கொடுமைக்கெதிராகப் பயன்படுத்துவதென கோப்பாய் பகுதியில் வாழ்ந்த முற்போக்குச் சிந்தனைகொண்ட இளைஞர்கள் தீர்மானித்து அப்பகுதியில் வாழும் மேலும் பல இளைஞர்களைத் தம்முடன் இணைத்துக்கொண்டு கோப்பாய் தொகுதியில் போட்டியிட்ட திரு.சி.கதிரவேற்பிள்ளை அவர்களது வீட்டைநோக்கிப் புறப்பட்டனர்.

தங்கன்




# வடக்கின் கல்வி அமைச்சினால் சீரழியும் கல்விப்புலம்

**அளவெட்டி ப. உதயகுமார்**

உரிமை இழந்தோம், உறவை இழந்தோம்: உணர்வை இழக்கலாமா, என்ற பாடல் வரிகள் எங்கேயோ, எப்பவோ கேட்டது என் நினைவுக்கு வந்து இரைமீட்டிச் செல்கின்றது. ஒரு மனித இனம் இன்னொரு இனத்துடன் முட்டிமோதி உரிமையைக் கேட்டும் கிடைக்காத நிலையில் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். உணர்வை இழக்கலாமா? உணர்வு தன் இனத்தின்மீது வரவேண்டும்" எனும் உண்மைகளை உணர்த்துகின்றது அந்த புரட்சிப் பாடல்.

இப்பாடல் வரிக்கு உதாரணமாகவே தமிழ் மக்களுடைய வாழ்க்கை நிலையும் அமைந்துவருகின்றது. பெரும்பான்மை இனத்துடன் மோதி, இருந்த நிலம், குடியிருந்த வீடு, சேர்த்து வைத்த சொத்துக்கள், கூடியிருந்த உறவுகள், விலைமதிப்பற்ற உயிர்கள் எல்லாம் இழந்து, முட்கம்பி வேலிக்குள் முடங்கியிருந்தபோதும், நாம் இழக்காமல் எம்முடன் இருந்த சொத்துக் கல்விதான்.

1995ஆம் ஆண்டு குடாநாட்டினைவிட்டு புறப்படச்சொல்லி அறிவிக்கப்பட்டதும் வீட்டைவிட்டுக் கிளம்பியபோது எல்லோருமே விடாமல் கொண்டு சென்றது கல்வியுடன் கூடிய சொத்துக்களையே, ஒவ்வொரு இடம் இடமாக மாறிமாறி இருந்தபோதிலும் பெரும்பான்மை அரசின் விமானங்கள் குண்டுமழை பொழிந்தபோதும் பாடசாலைகள் காலை, மாலை என்று நடைபெற்றே வந்தது. அந்தளவில்கூட சிதையாமலும், சிறுபின்னவுடைகள் மட்டுமே தமிழர்களின் கல்வியில் அன்று காணப்பட்டது.

ஆனாலும் எவ்வளவு கொடுமைகளையும் அநியாயங்களையும் எம்மக்களுக்கு அரசு செய்தபோதிலும், தமிழனின் கல்வியில் மட்டும் பெரும் குறைகளைவிடவில்லை. இலவசப் பாடநூல்களை, சீருடைகளை கப்பல்மூலம் அனுப்பியது. பாடசாகைக்கு தேவையான வளங்களை குறைந்தளவிலேனும் அரசு வழங்கியது அன்று.

எனவே இப்படியெல்லாம் கையேந்தி வாழாமல் எமக்கென்ற பூமியிலே நாமே ஆளவேண்டும் என்று கேட்டவர்களிடம் குரங்கின் கைப்பூமாலையாக, போய்ச் சேர்ந்தது வடக்கு மாகாண சபை. இந்தச் சபையிலே ஒரு கல்வி மந்திரி, அவருக்கு செயலாளர் இருக்கின்றார். இந்த இருவரும் எம்மினம் இதுவரை சேர்த்துவைத்த கல்விச் செல்வத்தை சீரழிக்கவென்று அவதாரம் எடுத்துள்ளனர் என்று பேசிக் கொள்கிறது கல்விச்சமூகம்.

எனவே என்னுடைய இவ்வாரக் கட்டுரை வடக்கு மாணவர்களின் கல்விப்புலம் பற்றியே ஆராய்கின்றது. நான் சேகரித்த தரவுகளின்படி எம்மக்களின் கல்விச் செல்வத்திலே பாரிய பின்னடைவு உண்டாகப் போகின்றது என்பதான அபாயத்தை இக்கட்டுரை உங்களுடன் பேசுகின்றது.

எதை, எதையெல்லாம் இழந்தாலும் தமிழ் மக்கள் கல்வியை மட்டும் இழந்து கொள்ள முன்வரமாட்டார்கள். அப்படியான பெறுமதிமிக்க கல்வியானது இன்று வடக்கு கல்வி அமைச்சாலும் அவரின் செயலாளரினாலும் சீரழிவை சந்திக்கப்போகின்றது என்பது நிதர்சனமாகும்.

பாடசாலைகளின் நிர்வாக விடயங்களை கல்வி மந்திரி கவனிப்பதில்லை என்றும் அவருக்கு ஏற்றாற்போல அவரது செயலாளரும் ஒத்து ஊதுகின்றனர் என்ற குற்றச்சாட்டினை முன்வைத்திருக்கின்றது கல்விச்சமூகம்.

இதேவேளை மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் இருக்கின்றது. கல்விச் சமூகத்தின் கண்ணீர்க்கதை கட்டுக் கடங்காது நீண்டுசெல்கின்றது. மக்களுக்கு சேவையாற்றவேண்டிய மந்திரி பதவி மக்களுக்குச் சேவைசெய்வதாக தெரியவில்லை. கல்வி அமைச்சர் முன்பு கல்விப் பணிப்பாளராக இருந்தவர். D.சீமான் அன்றைய காலகட்டத்திலே ஆடாத ஆட்டமா? சூப்பர் ஸ்ரார் ரஜனி வேசம் போட்ட மனிசன் இப்ப கல்வித்துறைக்கு மந்திரியானதும் சொல்லவும்வேண்டுமா?

கல்விமந்திரி ஐயா வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர். அவரின் தலைமையிலேயே வன்னிப் பாடசாலைகள் வளம்பெறுவதற்கு பதிலாக மக்குப் பத்திப்போகின்றது மாணவர்களின் கல்வி. வன்னிப் பகுதி பாடசாலைகள் பலவற்றிலே துறைசார்ந்த ஆசிரியர்களில்லை. சில பாடசாலைகளில் மிதமிஞ்சியிருக்கும் துறைசார்ந்த ஆசிரியர்களை அவர்கள் கடமையாற்றும் மாகாணத்துக்குள் இருக்கும் வேறு ஒரு வலயத்திற்குள் மாற்றீடுசெய்து வழங்கக்கூட மாகாணக் கல்வி அமைச்சு முன்வருவதில்லை என்று அறியமுடிகின்றது.

> **குற்றச்சாட்டுக்கள் உள்ளிருந்தே கிளம்புகின்றது. வடக்கு மாகாண சபையின் சுகாதார மந்திரி என்ன செய்கின்றார் என்பதுகூடப் புரியவில்லை. அவர் பற்றிய எந்தப் செய்திகளையும் காணவில்லை. விவசாய மந்திரி அவ்அவ்போது தலைகாட்டிவருகின்றார். பாதீனியம் அழிக்க முற்பட்ட இவர் இப்போது அதனை கைவிட்டுவிட்டாரா? வீதியோரங்களில்கூட பாதீனியம் வளர்ந்துநிற்கின்றது. மீன்பிடி அமைச்சர் பஸ்தரிப்பு நிலையங்களையாவது கட்டிக் கொடுத்துவருகின்றார். இவ்வருடமும் மாகாண சபை நிதியின் கணிசமான தொகை திரும்பலாம் எனவும் பேசப்படுகின்றது.**

கல்வி அமைச்சருடன் ஒத்துப்போகும் அதிபர்களின் பாடசாலைகளில் மிதமிஞ்சிய ஆசிரியவளம் குவிக்கப்பட்டிருப்பதனால் ஏனைய உயர்தர வகுப்பு பாடசாலைகள் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இன்றித் தவிக்கும்நிலையும் தொடர்கின்றது.

பாடசாலைக்கு ஆசிரிய வளம்போதாது தாருங்கள் என்றுகேட்டால் அவர் சொல்லும் பதில் பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் போய் படிக்கும்படி சொல்வதாகவும் கேள்வி.

வன்னிப் பகுதி கல்வியிலே பின்தங்கிய நிலையிலே உள்ளது. யாழ்ப்பாணத்து ஆசிரியர்களே வன்னிப் பகுதி பாடசாலைகளை நிரப்பிவருகின்றனர். ஆனாலும் அவர்கள் தங்கிநின்று கற்பித்தலை மேற்கொள்வதற்கு போதிய விடுதி வசதி இல்லை.

ஆனாலும் மந்திரி தனது தொகுதியான கிளிநொச்சிப் பகுதியில் பல பாடசாலைகளில் ஆசிரிய விடுதி அமைக்கப்பட்டுள்ள போதிலும் அவை பல மில்லியன்களை கொட்டி கட்டியபோதிலும் விடுதிகளை யாருமே பாவிப்பதில்லை. இருந்தும் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் சிலர் தங்கியுள்ளனர். தேவையான இடங்களில் விடுதிகள் கட்டப்படாமல் தேவையற்ற இடங்களில் கட்டி என்ன பயன் என்று ஆசிரிய சமூகம் கவலைகொள்கின்றது.

பாடசாலை விழாக்களில் கலந்து கொள்ளவும் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதும் நிகழ்வுகளுக்கு ஏற்ற மாதிரி இல்லாமல் பொருத்தமற்ற கருத்துக்களை முன்வைப்பதாகவும் கல்வி மந்திரிமீது குற்றச்சாட்டு உள்ளது.

வன்னியில் உள்ள ஒரு பின்தங்கிய கிராமப் பாடசாலைக்குப்போன செயலாளர் அப்பாடசாலையில் ஆசிரிய வளமின்மை பற்றி பெற்றோர் கருத்த சொன்னபோது, உயர்தர வகுப்புக்களுக்கு படிப்பிக்க ஆசிரியர்கள் இல்லை என்றால் ஊரிலை உள்ள படிச்ச பிள்ளைகளை பயன்படுத்துமாறு சொன்ன மனிசன் கிளிநொச்சிப் பகுதி பாடசாலைகளில் தொண்டர்களாக இருப்போரை உடனடியாக நீக்குபடி எச்சரிக்கை செய்தாராம். இப்படியான ஒருவர்தான் மாகாணக் கல்வி மந்திரியின் செயலாளர் இவர்கள் இருவரினாலும் கல்விக்கு சாவு மணியடிக்கப்படும் என்றும் கல்வியாளர்கள் நம்புகின்றனர். இதுதான் எம்மை நாம் ஆளும் சித்திரமா? இவர்களிடம் கல்வி மந்திரி சார்ந்திருக்கும் கட்சியிடம் முழு ஆட்சியும் போய்ச் சேர்ந்தால் வடக்கின் கதி அதோ கதிதான் என்றும் மக்கள் நம்புகின்றனர்.

தமிழர்களுக்கு தாங்களே தங்கள் மக்களின் நிர்வாகத்தை நிர்வகிக்க கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலா? இவர்களின் திறனற்ற நிர்வாகச் சீர்கேடு நடக்கின்றது. வடக்கின் கல்வியிலே பாரிய பின்னடைவுக்கு அமைச்சும் செயலாளருமே காரணகர்த்தாக்களாக விளங்குகின்றனர். இவர்கள் இருவரின் திறனற்ற நிர்வாகமே காரணம் என்று கூறப்படுகின்றது. மதிப்பீடுகளையும் புள்ளிவிபரங்களையும் சரியாக மதிப்பீடு செய்வதில்லை என்பதற்கான விபரம் ஒன்றை தருகின்றேன். அதாவது கிளிநொச்சிப் பகுதியில் கட்டட வசதி இல்லாத பாடசாலைகள் பெருமளவு மாணவர்களுடன் வசதிகளின்றி இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் பிள்ளைகள் இல்லாத ஊரில் பெரிய கட்டடங்களை கட்டி ஆடு, மாடுகள் படுத்துறங்கும் இடமாக மாறிவருகின்றது. பிள்ளைகள் படிக்க இடமில்லாமல் ஆடு, மாடு படுத்துறங்குவதற்கு கட்டடம் கட்டிக் கொடுக்க ஒரு அமைச்சும், செயலாளரும் தேவையா? எனும் கேள்வியும் பலமாக உள்ளது.

பட்டதாரியான அமைச்சர் கல்வி டிப்ளோமா செய்தவர், செயலாளர் நிர்வாக சேவையில் சித்திபெற்றவர், ஆக இருவரும் தத்தமது கல்வியை வைத்துக்கொண்டு மாணவர்களின் கல்வியை மண்ணாக்கப் பார்க்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, அதிபர், ஆசிரியர்களையும் இவர்கள் மனம்நோகடிக்கும் செயற்பாடுகளைச் செய்துவருகின்றனர். அண்மைக் காலத்தில் அமைச்சரும் செயலாளரும் இணைந்து அதிபர் இடமாற்றங்களை மேற்கொண்டிருந்தனர். தம்மை நேசிக்கும் அதிபர்களை தமக்கு இசைவான பாடசாலைகளுக்கு இடம் மாற்றியுள்ள அதேவேளை அதிபர்களின் பிறந்த வசிக்கும் ஊர், மற்றும் சாதிப் பிரச்சினை என்பனவற்றையும் கணக்கிலே எடுத்து அதிபர் இடமாற்றங்களைச் செய்துள்ளதாக அதிபர்கள் மனம் குமுறுகின்றனர்.

அதிபர், ஆசிரியர்களை மிரட்டியும் வெருட்டியும் முறைகேடான பதவி உயர்வுகளையும் இடமாற்றங்களையும் இருவரும் செய்துவருகின்றனர். வடக்கு மாகாண சபையினைப் பொறுத்தம்ட்டில் வடமாகாண அமைச்சுக்கள் வெளிப்படைத் தன்மையுடன் இயங்கவில்லை என்று வடமாகாண சபையின் அவைத்தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் உள்ளிருந்தே கிளம்புகின்றது. வடக்கு மாகாண சபையின் சுகாதார மந்திரி என்ன செய்கின்றார் என்பதுகூடப் புரியவில்லை. அவர் பற்றிய எந்தப் செய்திகளையும் காணவில்லை. விவசாய மந்திரி அவ்அவ்போது தலை காட்டிவருகின்றார். பாதீனியம் அழிக்க முற்பட்ட இவர் இப்போது அதனை கைவிட்டுவிட்டாரா? வீதியோரங்களில்கூட பாதீனியம் வளர்ந்துநிற்கின்றது. மீன்பிடி அமைச்சர் பஸ்தரிப்பு நிலையங்களை யாவது கட்டிக் கொடுத்துவருகின்றார். இவ்வருடமும் மாகாண சபை நிதியின் கணிசமான தொகை திரும்பலாம் எனவும் பேசப்படுகின்றது.

இதுதான் தமிழன் தமிழினை ஆளும் சித்திரம், இதுக்குத்தான் கடந்த 60 வருடம் போராடினோமா? என்றெல்லாம் கேட்கவேண்டும் போல உள்ளதாக மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனாலும் தமிழனை தலைநிமிர வைத்துவருவது கல்வி மட்டும்தான். இத்தகைய கல்வியை யார் சீரழிக்கமுற்பட்டாலும் அது மன்னிக்கவோ, மறைக்கவோ முடியாது. இதுதானா தமிழ் மக்கள் எதிர்பார்த்த சுயநிர்ணயம்? இது தானா இவர்கள் ஒவ்வொரு தேர்தல்களிலும் சொல்லிவரும் தமிழ்த்தேசியம், இவர்கள் இருவரும் திருத்த முன்வராவிடில் திருத்தவேண்டிய பெரும் பணி மக்களிடமே விடப்பட்டுள்ளன.




### கூந்தல் பிரச்சினைகளுக்கு...

தேக்கு மரத்தின் விதைகளை கொண்டு ஒரு சிறப்பான கூந்தல் தைலத்தை உருவாக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்- தேக்குமரத்தின் காய்ந்த காய்களை எடுத்துக்கொள்ள வேண்டும். அவற்றை நசுக்கி அதில் இருக்கும் விதைகளை நீக்கி எடுத்துக் கொள்ளவேண்டும்.



முடிந்தால் இந்த விதைகளை உடைத்தோ அல்லது முழுமையாகவோ பயன்படுத்தலாம். பின்னர் தேவையான அளவு தேங்காய் எண்ணெய் எடுத்துக் கொள்ளவேண்டும். அதனுடன் ஒரு 10 அல்லது 15 விதைகளை சேர்த்துக் கொள்ளவேண்டும். இதை நன்றாக காய்ச்சி எடுத்துக்கொள்ளவேண்டும். விதையின் நிறம் இந்த எண்ணெய்யுடன் சேர்ந்து ஒரு இளஞ்சிவப்பு நிறமாக மாறிவிடும்.

இதை பயன்படுத்துவதன்மூலம் தலையில் ஏற்படும் பொடுகு கட்டுப்படுத்துகிறது. இந்த விதையை அன்றாடம் பயன்படுத்தும் போது முற்றிலுமாக பொடுகு, பேன் ஆகியவற்றின் தொல்லைகளில் இருந்து விடுதலைபெறலாம். மேலும் முடி கொட்டுதல், இளநரை போன்ற பிரச்சினைகளுக்கும் இந்த தைலம் மிகச்சிறந்த ஒன்றாக வேலைசெய்கிறது. நுண்கிருமிகளை கட்டுப்படுத்தும் தன்மைகொண்டதாகவும் இதன் விதைகள் பயன்படுகிறது.



## வயதான ஆண்களை திருமணம் செய்யலாமா?

பெரும்பாலான திருமணம் ஒரே வயதுள்ளவருடன் நடப்பதை விட, தன்னைவிட சற்று வயது பெரியவர்களை செய்வதுதான் அதிகம். அதற்காக ஒரே வயதுள்ள ஆண்களை திருமணம்செய்து கொள்ளக்கூடாது என்பதில்லை. ஆனால் பெரும்பாலும் அது குறைவுதான்.

இவ்வாறு திருமணம் செய்யும்போது, பெண்ணைவிட ஆணின் வயது சற்று அதிகமாக இருந்தால், நிறைய நன்மைகள் உள்ளன. அதேசமயம் தீமைகளும் உள்ளன.

இது பெரும்பாலும் பெண்களுக்கு தான் பொருந்தும். ஏனெனில் ஆண்கள் யாரும் தன்னைவிட பெரியவரை திருமணம் செய்து கொள்வது இல்லை. அவ்வாறு செய்துகொண்டாலும், அது குறைவாகவே இருக்கும். ஆகவே எவரேனும் தன்னைவிட வயது பெரியவரை திருமணம் செய்வதைத் தவறு என்று கூறினால், அப்போது தாமாக யோசிக்கவேண்டியது அவசியமாகிறது. சொல்லப்போனால், இத்தகைய வயது இடைவெளியில் பெரும்பாலும் நன்மைகளே அதிகம் நிறைந்துள்ளது.

* தன்னைவிட பெரிய ஆண்களை திருமணம்செய்து கொண்டால், ஏதேனும் கஷ்டமான சூழ்நிலையோ அல்லது பிரச்சினையின்போது சரியாக முடிவெடுக்கத் தெரியவில்லையென்றால், அத்தகையவரை திருமணம்செய்து கொள்ளும்போது, ஈஸியாக சரிசெய்து விடலாம்.

ஏனெனில் அவர்களுக்கு அனுபவம் உள்ளது. எனவே எத்தகைய பிரச்சினைக்கு எப்படி நடக்கவேண்டும் என்று நன்கு தெரியும். ஆகவே இந்த வாழ்க்கைப் பாடத்தை அவரிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

* வயது அதிகம் உள்ளவரை திருமணம் செய்யும்போது, அவர்கள் வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைமையில் இருப்பார்கள். எனவே திருமணத்திற்குப் பின், வாழ்க்கையில் எந்த ஒரு பணப் பிரச்சினையும் இருக்காது. பின் எதிர்காலத்தில் வாழ்க்கை சிறப்பானதாக இருக்கும்.

**தீமைகள்:**

* வயது அதிகம் உள்ளவர்கள் எதையும் மிகவும் சீரியஸாக எடுத்துக் கொள்வார்கள். உதாரணமாக, சுட்டித்தனமாக ஏதாவது ஒரு செயலை செய்தால், அதை சீரியஸாக எடுத்துக்கொண்டு கோபப்பட்டு, கடுமையாக நடப்பார்கள். அதேசமயம் அவர்கள் சுட்டித்தனம் என்று நினைத்து ஏதேனும் செயலைச் செய்வது, நமக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கும். பின்னர் எலியும் பூனையுமாகத் தான் நடக்கநேரிடும்.

* வயது குறைவாக இருக்கும் பெண்கள் வயது அதிகம் உள்ளவரை திருமணம் செய்யும்போது, ஆண்களுக்கு ஒருவித நம்பிக்கையில்லாத கோபம் வரும். அது என்னவென்றால், வயது குறைவாக இருப்பதால், தன் மனைவி இளம் வயது ஆண்களிடம் நட்புறவுடன் பேசும்போது, கோபம்வந்து சண்டைபோடுவார்கள். ஆகவே எதுவானாலும், சரியான புரிதல் இருந்தால், எந்த ஒரு வாழ்க்கையும் ஆரோக்கியமாக நீண்ட நாட்கள் சந்தோஷமாக செல்லும். வேறு ஏதாவது நன்மைகள் மற்றும் தீமைகளை நீங்கள் உணர்ந்தால், அதை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

# இலங்கையின் இனப்பிரச்சினையும், அரசியல் தீர்வு யோசனைகளும்

### வெளியீடு 01

இன்றைய அரசியல் தேவையின் நிமிர்த்தம் வாரம்தோறும் இத்தொடர் வெளிவர இருக்கின்றது. மாறிமாறி ஒருவருக்கொருவர் குறைகளையும் வீர வசனங்களையும் பேசிப் பேசியே காலம் போகின்றதே தவிர தீர்வு யோசனைகள் பற்றி எவரும் சிந்திப்பாரில்லை. ஒரு ஜனநாயக நாட்டில் வாழும் மக்களிற்கு பாதை தெரியாத பயணங்களாக தமது அரசியல் வெளி மாறிவருகின்றன. என்பதற்காகவே இத்தொடர் வெளிவர இருக்கின்றது. கட்சிப் பக்கச்சார்புகள் அற்ற நிலையில் ஓர் ஊடகவியலாளன் எழுதும் அரசியல் பரப்பிது. தவறாது பாருங்கள். தேர்தல் தெரிவுகளை தெளிவாக்குங்கள். அரசியல்வாதிகளை அதனோரம் பயணிக்கவையுங்கள். நீங்கள் இடும் கட்டளையை உங்கள் ஏகபிரதிநிதிகள் நிறைவேற்றுவதே ஜனநாயகம்.

இலங்கையின் இனப்பிரச்சினையானது 1921ஆம் ஆண்டில் இருந்து ஏறத்தாள 80 வருடங்களிற்கு மேலாக நிலவிவரும் பிரச்சினை எனலாம். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக காலத்திற்குக் காலம் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. பல்வேறு அரசியல் யாப்புக்கள் காலத்திற்குக்காலம் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கும் அப்பால் பல்வேறு ஒப்பந்தங்கள், பல கட்ட சமாதானப் பேச்சுக்கள் எனப் பல அரங்கேறின. ஆனால் எதுவும் தீர்க்கமான, திருத்தமான ஓர் இணக்கப்பாட்டினை இதுவரை இலங்கையில் ஏற்படுத்தவில்லை. அவ்வாறானால் எப்படிப்பட்ட அரசியல் யோசனை இவ் இனப்பிரச்சினையைத் தீர்க்க சாதகமான பக்கங்களை உருவாக்கும் என்பதை நோக்க முதலில் நடந்துமுடிந்த தீர்வு முயற்சிகள் எவை...? அது ஏன் தோற்றுப்போனது என்பது தொடர்பாக ஆழமாக அலசவேண்டும்.

1931ஆம் ஆண்டின் டொனமூர் அரசியல் யாப்பு, 1947ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் யாப்பு, பண்டா-செல்வா ஒப்பந்தம்(1957), டட்லி-செல்வா ஒப்பந்தம்(1965), மாவட்ட அபிவிருத்திச்சபைகள்(1981), இலங்கை இந்திய ஒப்பந்தமும், அதன் வழிவந்த 13ஆவது திருத்தச்சட்டமும்(1987),பொது ஜன ஐக்கிய முன்னணியரசின் தீர்வு யோசனைகள்(1997) போன்றன இம் முயற்சிக்கான சில உதாரணங்களாகும்.

இவ்வாறு பல முயற்சிகள் எடுக்கப்பட்டும்கூட எதுவும் நிரந்தர தீர்வின் திசைமுகத்தை தொடவில்லை. தற்காலிக தீர்வுகளாகவும், குழப்பத்தின் கருவூலங்களாகவும் இருந்து அத்தற்காலிக தீர்வுகளே பின்னர் பேரழிவுகளிற்கும் காரணமாகக்கூட இருந்திருக்கின்றன. இக்குழப்பங்களையும் தோல்விக்கான காரணங்களையும் சீர்தூக்கிப் பார்க்காமையே தீர்விற்கான திசைமுகம் தெரியாதிருப்பதற்கு அடிப்படைக்காரணமாகக்கூட அமையலாம். ஆகவே அதுதொடர்பாக முதலில் இத்தொடரில் ஆராய்வோம். ஆராய இருக்கும் பகுதிகளின் அறிமுகம்.

- இலங்கைத் தமிழர்களின் பூர்வீகமும் குடியமர்வும்.
- இலங்கையின் நவீன அரசியலின் ஆரம்பமும் ஈழத்தமிழரும்.
- 1921 - 1949 வரை என்ன நடந்தது?
- 1949 - 1965 வரை என்ன நடந்தது?
- 1968 பிந்திய காலகட்டம்.
- பொதுஜன ஐக்கிய முன்னணியரசின் தீர்வு யோசனைகள்.
- இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசு அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்று செய்வதற்குமானதொரு சட்டமூலம்.
- சிறீலங்கா ஜனநாயக சோசலிஸ குடியரசு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையில் அமுலான போர்நிறுத்த ஒப்பந்தம்.
- இனப்பிரச்சினைத் தீர்வுகளும் தமிழ் மக்களின் நிலைப்பாடுகளும்.
- தமிழர் அல்லாத ஏனைய இனங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்.
- இனப்பிரச்சினைக்கான தீர்வு அதிகாரப் பங்கீடு விடயங்களில் சர்வதேச அனுபவம்.
- தற்கால இணக்கப்பாடும் அதன் பயன்பாட்டின்மையும். போன்ற விடயங்கள் இத்தொடரில் ஆராயப்பட உள்ளன. நடந்துமுடிந்த உண்மைகள் நடக்க இருக்கும் அரசியல் பயிருக்கு உரமூட்டவேண்டும். அதுவே நிரந்தரமான நிலையான தீர்வின் திசைகளை காட்டும் என்பதே இத்தொடரின் ஆதங்கமாகும்.

**– மேனன் –**



# பாப்பா முரசு



பரமண்ணா

## "விளையும் பயிரின் முளை!"

### வாரம் ஒரு திருக்குறள்



**அறிவுடைமை**

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பா லுய்ப்ப தறிவு**

மனம் போகும் வழியெல்லாம் போக விடாமல் தீய வழிகளைத் தள்ளிவிட்டு, நல்வழியைத் தேர்வு செய்வதே அறிவுடைமையாகும்.

குறள் : 421

"சேகரனுக்கு எதிலும் அதிக மான ஈடுபாடு இருக்கிறதா..." என டாக்டர் கேட்டார்.

"அப்படி ஒன்றும் இல்லை டாக்டர். ஆனா அவனுக்குச் சிறிய வயதில் இருந்தே நிறையப் புத்தகங்கள் வாசிப்பதில் மிகுந்த ஆவல். அதிலும் விஞ்ஞானம் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட நூல்களௌண்டால் அவனுக்கு உயிர் டாக்டர். இல்லாமலும் தனிய அந்த நூல்களை மட்டும்தான் படிப்பதில் ஆர்வம் செலுத்துவான்..."

சேகரனின் தந்தை சோமசுந்தரம் இவ்வாறு கூறியதும், அதனைக் கேட்ட டாக்டருக்கு உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது.

"சேகரனின் போக்கெல் லாம் வீட்டில் எப்படி...?" மேலும் ஒரு கேள்வியை டாக்டர் கேட்டு வைத்தார்.

"வீட்டில இருக்கேக்கை சதா எதையாவது எடுத்து வைத்துப் படித்துக் கொண்டிருப்பான். இல்லாவிட்டால் எல்லாப் புத்தகங்களையும் விரித்து வைத்து கொண்டு இருந்து தன்னுள் புலம்பிக்கொள்வான்... இப்படியே அவனுக்குப் பொழுதும் போயிடும். மற்றும்படி சாப்பாட்டிலோ, உடுத்திருக்கும் உடை களிலோ எந்த அக்கறையும் இல்லாமல் இருப்பதைப் பார்த்தால் சுத்தவிசாரணை போலைத்தான் இருக்கும் டாக்டர்..."

சேகரனின் தாய் அன்னம் தன்னுடைய உள்ளக்கிடக்கைகளை கொட்டித் தீர்த்தாள்.


"சரி கொஞ்சக் காலத்துக்கு சேகரனை அவனுடைய போக்குக்கே விட்டுப்பாருங்க. அதனால பெரிய நன்மை உங்களுக்கு மட்டுமில்லை. இந்த நாட்டுக்கும் ஏற்படலாம். இது என்னுடைய அனுபவ மொழி இல்லாமல் சேகரன் உங்களிடம் என்ன வேண்டி நிக்கிறானோ அதை எல்லாம் செய்து கொடுக்கவும் வேண்டும்..."

டாக்டர் கூறியதைக் காதுற்ற சேகரனுக்கு ஆனந்தம் தோன்றியதைக் கூறவும் வேண்டுமா? ஆனால் அவனுடைய தாயும், தந்தையும் டாக்டரின் கூற்றைக் கேட்டு வியந்து போனதை அவனும் கவனிக்கத் தவறவில்லை. அதை டாக்டரும் உணர்ந்தவராக மேலும் இவற்றைக் கூறி வைத்தார்.

"நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிப்போட்டன்... இதுக்கு மேலை நீங்க கேட்டுநடந்தால் சரி..." டாக்டர் தன்னுடைய முடிவைச் சொன்னார். இவ்வளவும் அவர்களை விசாரித்து அறிந்து கொண்டதில் டாக்டரின் முடிவு அதுவாகத்தான் அமைந்தது. டாக்டரின் கூற்றை ஏற்கனவே கேட்டு மகிழ்ந்திருந்த சேகரனுக்கு இப்பொழுது நிம்மதியாக இருந்தது. ஆனால் இனி மேல் பெற்றோரின் முடிவு என்னவாக அமையும்.

வெகுநேரம் அமைதியாக இருந்து சிந்தித்த சோம சுந்தரம் அன்னம் தம்பதி யினருக்கு டாக்டரின் கூற்றும் ஓரளவு நியாய மாகவே பட்டது. அதனால் சேகரன் தப்பிக்கொண்டான்.


டாக்டர் வீட்டில் இருந்து விடை பெற்றுக் கிளம்புவதற்கு முன்னால் சேகரனைத் தனியாக அழைத்து எதுவெல்லாமோ உரையாடி டாக்டர் அவனைத் தட்டிக் கொடுத்து வழியனுப்பி வைத்தார்.



(தொடரும்)

# அறிவுத் தகவல்கள்


**மிகமிக ஆரோக்கியத்தைத் தரும் பழம் கிவி.**



**பழமையான நகரங்கள் நிறைந்த நாடு சிரியா ஆகும்.**



**சுற்றுப்புற சூழ்நிலையால் அதிகம் மாசு காணப்படும் முதல் நாடு மெக்ஸிகோ.**




**இசைக்கருவிகளில் ராணி என வர்ணிக்கப்படுவது வயலின்.**



**கம்பரின் மகன் பெயர் அம்பிகாபதி**



**தொலைபேசியை இடது காதில் வைத்துப் பேசுங்கள்!**



**ஒட்டகச்சிவிங்கிக்கு குரல் கிடையாது.**



**கேரளாவில் ஆண்களைவிட பெண்கள் அதிகம்.**



# அதிரடி ஐயாத்துரை



● அவுஸ்ரேலியாவில டெஸ்ட் மட்ச் விளையாடச் சென்ற கூட்டமைப்பு மந்திரத்தாருக்கு புலம்பெயர் தமிழர்கள் வீசின பவுன்சர் பந்துகளில சரியான காயமாம். மனிசியோட சிட்னியில தீபாவளி கொண்டாட நினைச்ச மந்திரத்தார்பாடு ஒரே திண்டாட்டம் தான் பாருங்கோ. அவங்களில சிலர் செந்தமிழிலையும் போட்டுப் புடிச்சங்களாம். இப்ப மந்திரத்தாருக்கு கொழும்புதான் பாதுகாப்பான இடம். அங்கை இருந்து பார்லிமென்ட்டுக்குப் போறதுதான் நல்லது. வெளிநாட்டுப் பயணத்தை இனி நினைச்சும் பார்க்கேலாதெண்டு கூட்டமைப்புக்குள்ள குசுகுசுப்பு வருதுங்க.

● டண்டனக்கா னக்கா டண்டனக்கா... வடமாகாணசபையின்ர அரசியல் பழிவாங்கல் மாகாணக் கல்வியமைச்சில தொடங்கீட்டுதடா டோய்... தீவகத்தின்ர கல்விக்குப் பொறுப்பான பெரிய அதிகாரியாய் வீணைக் கட்சி ஆதரவாளர் எண்டு தூக்கிட்டாங்கள். மனுசனைக்கொண்டே மடுமாதாட்ட விட்டுட்டாங்கள். வலிகாமத்தில இருந்து குற்றச் சாட்டில தென்மராட்சிக்கு இடம் மாறிய சிவமான அதிகாரி கூட்டமைப்பின்ர காலைக் கையப் பிடிச்சு தீவகத்துக்குப் பாய்ஞ்சிட்டார். தீவகம் என்ன மக்கோணாவா? எண்டு கல்வி புலத்தில இருந்து கிசுகிசுப்பு வருகுது.

● இந்த முறை கனகாலத்துக்குப் பிறகு தமிழ்ப் பிரதேசங்களில கறுப்புத் தீபாவளி கண்டியளோ! ஏழாம் திகதி இந்தா இராஜினாமாச் செய்யிறம். உண்ணாவிரதம் இருக்கிறம். சிறையை உடைப்பம் எண்டெல்லாம் பம்மாத்துவிட்ட நம்மட வெள்ளை வேட்டி தலைமைகள் ஒழிச்சிட்டினம். அதில தேவாரத் தலைவர் இந்தியாவில குடும்பத்தோடு தீபாவளி கொண்டாடப் போயிட்டார். இங்க மற்ற எம்.பிமார் ஹர்த்தால். கறுப்பு தினம் எண்டு கூத்தாடிக் கொண்டிருக்கினம். வழமைபோல அரசுத் தலைமை 'நோ' சொல்லிட்டுதாம். உது ஏற்கனவே தெரிஞ்ச விசயம்தானே எண்டு மக்கள் சப்புக்கொட்டினம்.

● 22 எண்ட நம்பர் ஒரு அன்லக்கி நம்பர் பாருங்கோ. ஏற்கனவே 22 மண்டுகங்கள் இருந்து பார்லிமெண்டில ஒண்டும் பண்ணமுடியேல்ல. இப்ப 22 பேர்கூடி வடக்கின் விக்கிநாயகனைத் துலைக்கிறதுக்கு நம்மட மொனிட்டர் ஞானத்தார் போடுற பிளான் எல்லாம் பெயிலியர் பாருங்கோ. வடக்கைத் தீர்மானிக்கிறதும் கொழும்புதான் பாருங்க. என்ன நான் சொல்லுறது புரியுதா?

● யாழ்ப்பாணத்தின் பெரிய ஏஜென்ட் அலுவலகத்தில ஒரு சில பெரிய அதிகாரிகள் மாலையானவுடன் மப்பும் மந்தாரமுமாக நிக்கினமாம். இதில பகிடி என்னவெண்டால் பெரிய ஏஜெண்ட் பத்திரிகையில பார்களை மூடவேணுமெண்டு சொல்லுறார். சப் ஏஜெண்ட்மார் மூடவிடுவினமே.

● தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையிறது போல இருக்கு நம்மட தமிழ் அரசியல். வீணைக்கட்சித் தேவர் ஒருபுறமும். கூத்தாடும் அரசுரர்கள் மறுபுறமும் அரசியல் நடத்தினம். தேவருடைய் திட்டம் தமிழருக்கு அமுதம் எடுத்துக்கொடுப்பது. கூத்தாடிகளின் திட்டம் நஞ்சு கொடுப்பது. தமிழா! இதுவா உன்நிலை.

● நல்லாட்சியில் ஒரு யானை அமைச்சர் அவுட்டுங்க... இப்ப மந்திரி சபைக் கூட்டத்தில இரண்டு கட்சி. அதில பகிடி என்னண்டால் இலங்கை ராசாவின்ர ஒரு குறூப்பும் மகாந்திரியின்ர ஒரு குறூப்பும் மந்திரி சபையையே ஒரு குட்டிப் பார்லிமென்ட் ஆக்கிடாங்கள். பலமான வார்த்தைப் பிரயோகங்களும் ஆங்காங்கே பாயுதுங்க. குரக்கன் சால்வை பின்புறமிருந்து எல்லாத்தையும் ஆட்டுது எண்டு இலங்கை ராசா புலம்பலோ புலம்பல். இந்தப் பார்லிமெண்ட் தப்புமாங்கோ!

**இந்த வாரப் பொன்மொழி**

"செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது!"

# வாராந்த செய்திக்கொத்து



## கேரளா மக்களைவிட தமிழ் மக்களுக்கு பெருசாம்- நடிகை இனியா யாழில் முழக்கம்



கேரளா மக்களைவிட தமிழ்நாட்டு மக்கள் பெரிய மனது படைத்தவர்களென தென்னிந்திய திரைப்பட நடிகை இனியா யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள தனியாருக்கு சொந்தமான புடைவைக் கடையொன்றை திறந்துவைப்பதற்கு இனியா யாழ்ப்பாணத்திற்கு கடந்த வாரம் வந்திருந்தார்.

## பட்டையைக் கிளப்புகின்றது யாழ்ப்பாணத்துப் பொம்பிளைகள்



மேளம் வாசிப்பதில் பட்டையைக் கிளப்புகின்றது யாழ்ப்பாணத்துப் பொம்பிளைகள். போட்டிக்கு அடித்து தூள்கிளப்பும் காட்சி. இன்று ஆண்களுக்கு நிகர் சமமாக வளர்ந்துவரும் பெண்கள் பல சாதனைகளுக்கும் சொந்தக்காரர் ஆகின்றனர். அந்த வகையில் யாழில் இந்தப் பெண்களின் முன்னகர்வு பலருக்கு முன்னுதாரணம் ஆவதுடன் சமூக வளர்ச்சியின் நல்உதாரணமாகும்.

## யாழில் 35 கிலோ அரிசியில் நடந்த சாதனை!



அழகாக வடிவமைக் கப்பட்ட முப்பரிமாண கோலம். யாழ்ப்பாணம் தொழில்நுட்ப கல்லூரியில் காட்சிப்படுத்தப்பட்டது. சுமார் 35Kg அரிசியைப் பயன்படுத்தி செய்யப்பட்ட 7m நீளம் 3m அகலம் 3D கோலம் உடைய கோலம் இது.

## சில மதுபான சாலைகள் மூடப்படும் யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



யாழ். மாவட்டத்தில் சட்டவிரோதமான முறை யிலும், பாடசாலை கள், ஆலயங்களுக்கு அண்மையில் இயங்கும் மதுபானசாலைகளை நிரந்தரமாக மூடுவதற்கு அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

## உல்லாசத்துக்கு ஆசைப்பட்டு கள்ளக்காதலனை ஏவி கணவரை கொன்ற வில்லிசை பாடகி




வடசேரி கட்டையன் விளையில் உள்ள பாழடைந்த கிணற்றுக்குள் லிங்கராஜா பிணமாக மிதந்தார். லிங்கராஜாவின் மனைவி பிரேமாவுக்கும், பரமார்த் தலிங்கபுரத்தைச் சேர்ந்த சங்கர் (29) என்பவருக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததும், இதற்கு லிங்கராஜா இடையூறாக இருந்ததால் சங்கர் அவரை கொலைசெய்து கிணற்றில்வீசியதும் தெரியவந்தது. இதையடுத்து பிரேமா, சங்கர் ஆகியோரையும், சங்கருக்கு உதவியாக இருந்த அவரது நண்பர் வேல்குமாரையும்(25) பொலிசார் கைதுசெய்தனர்.

## வட - கிழக்கில் தமிழே நிர்வாக மொழி! இல்லாவிடின் நிர்வாகம் முடக்கம்...! நீதிவான் சிறீநிதி அதிரடி!



இனிவரும் நாட்களில் தமிழில் முதல் தகவல் அறிக்கை சமர்ப்பிக்காவிட்டால் காவல்துறையின் அறிக்கை களினை ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனத் தான் அறிவித்துள்ளதாக தெரிவித்தார். சாவகச்சேரி நீதிவான் சிறீநிதி சந்திரசேகரன்.

## வடக்கு அமைச்சர்கள் சிலரை மாற்றுமாறுவது உண்மையா? முதலமைச்சர் சீ.வி



வடமாகாண அமைச்சர்கள் சிலரை மாற்றுமாறு சிலர் கோரிக்கைகள் விடுத்திருப்பது உண்மை. ஆனால், நேரடியாக தன்னிடம் எந்தவிதமான கோரிக்கைகளும் விடுக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.


அமைச்சரவையில் தனிப்பட்ட பிரச்சினைகள் இருந்தால், அமைச்சர்கள் ஊழலில் ஈடுபட்டுள்ளார்கள் அல்லது அமைச்சர்கள்மீது ஏதாவது குற்றங்கள் இருப்பின் அதனை தன்னிடம் தெரியப்படுத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.


## திலக் மாரப்பன பணி நீக்கப்படுவாரா?



சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பன பணி நீக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவ தாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அரசியல் ரீதியாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய அவன்ட் கார்ட் சம்பவம் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றில் திலக் மாரப்பன கருத்து வெளியிட்டிருந்தார்.

## வடக்கு முதல்வரை நீக்கும் திட்டம் இல்லை... அவருடன் நான் பேச இருக்கின்றேன் ! எதிர்க்கட்சித் தலைவர்






கடந்த பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றபொழுது முதலமைச்சர் கூறிய சில கூற்றுக்கள் மற்றும் அவரின் சில நடவடிக்கைகள் சம்பந்தமாக சில கேள்விகள் எழுப்பப்பட்டது உண்மை.

அதுதொடர்பாக அவரிடம் நாங்கள் இன்னும் பேச வில்லை. பேச இருக்கின்றோம். எனினும், கட்சியிலிருந்து அவரை நீக்குவதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டதாக யாரும் கூறியிருந்தால் அது தவறு என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவ ருமான சம்பந்தன் தெரிவித்துள்ளார். லங்காசிறி 24 செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

## தீபாவளியின் நல்லெண்ணமாக தமிழக மீனவர்கள் 126பேர் விடுதலை!



இலங்கையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 126 தமிழக மீனவர்களும் கடந்த திங்கட்கிழமையன்று தீபாவளியை முன்னிட்டு விடுவிக்கப்பட்டு உள்ளனர்.

## ஒருபோதும் கருணை காட்டமாட்டேன்! ஜனாதிபதி திட்டவட்டம்



ஊழல், மோசடிக் காரர்கள் மற்றும் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடும் எவருக்கும் நான் கருணை காட்டமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

## குற்றச்செயல்கள் மோசடிகளை மூடிமறைப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்: ராஜித



குற்றச்செயல்கள் மோசடிகளை மூடிமறைக்க முயற்சிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அமைச்சரவைக் கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்படும் என அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

## அரசியல் கைதிகளை விரைவாக விடுவிக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்!



நீண்டகாலமாக . தடுத்து வைக்கப்பட்டு உள்ள அரசியல் கைதி களில் 62 பேருக்கு முதற்கட்டமாக பிணை வழங்குவதற்கும் ஏனையவர்கள் தொடர்பில் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கவும். அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்ற நிலையில் அதனை நிராகரித்துள்ள அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

## இந்துசமய அபிவிருத்தி மன்றத்தின் 19ஆவது ஆண்டு நிறைவு விழா! யோகேஸ்வரன் பங்கேற்பு

மட்டக்களப்பு பாலமீன்மடு திராய்மடு இந்து சமய அபிவிருத்தி மன்றத்தின் 19ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ப்ரிசளிப்பு நிகழ்வும் பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.




# சலரோகம் எனும் நீரிழிவு நோய்

## அதற்கான காரணிகளும் சிகிச்சைகளும்

வெளியீடு - யாழ். மருத்துவபீட மாணவர்கள்

**நீரிழிவு நோயின் அறிகுறிகள்:**

சிறுநீர் அதிகளவில் வெளியேறும். சிறுநீருக்குரிய நிறம், நிறை, எடை, மணம் போன்றவற்றுள் நிறம் தண்ணீரைப்போலும், நிறை அளவுக்கு அதிகமாகவும், எடை கனத்தும், மணம் தேன் போன்றும் காணப்படும். சிறுநீரானது, தெளிந்த நீர் போன்று அடிக்கடி வெளியேறும். வெளியே சிறிய சிறுநீர்த்துளிகள் சற்று உலர்ந்தவுடன் பிசுபிசுத்துக் காணப்படும். உடல் வலிமை நாளுக்குநாள் குறைந்தும், நாவறட்சி அதிகமாகவும் காணப்படும்.

**நோய்க்கான அறிகுறிகள்:**

உடல் மெலிவடைந்தும், தோலில் நெய்ப்பசையற்று வறண்டு சுருங்கி வெளுத்த மஞ்சள் நிறத்தையும் அடையும். நாவறட்சி, அதிக நீர் வேட்டை, அதிகமாக பசியெடுத்தும், உணவு சாப்பிட்ட சற்று நேரத்திற்குள் மீண்டும் பசியெடுப்பது போன்ற அறிகுறிகள் இருக்கும்.

இந்நோய் முதிர்ந்து தனக்கு துணையாகப் பலவகையான கேடுகளையும் உண்டாக்கும். உடல் சத்தை உருக்கிச் சீனியாய் நீர்வழியே வெளியேற்றும்.

சொறி, சிரங்கு, கட்டி முதலியவை-களை உருவாக்கி பல கேடுகளை உண்டாக்கும். பித்த நாடி விரைந்து நடக்குமாயின் நீரிழிவு நோய் வரலாம்.

**வகை - 1:**
**நீரிழிவு நோயின் குணாதிசயங்கள்**


பொதுவாக குழந்தைகளுக்கு ஏற்படுகிறது அடிக்கடி தண்ணீர் தாகம் ஏற்படும், சிறுநீர் கழித்தல், எடை குறைதல் போன்ற பிரச்சினைகள் உண்டாகும். இதுபொதுவாக பரம்பரை நோய் அல்ல இந்நோய் பரம்பரையில் இருப்பின் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சீனியின் அளவை குறைக்க இன்சுலின் தேவைப்படுகிறது. உண்ணும் உணவு, உடற்பயிற்சி, இன்சிலின் அளவு ஆகியவற்றில் சிறிது மாற்றம் இருப்பின் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு குறிப்பிடும்வகையில் மாறுபடும்.

**வகை - 2: நீரிழிவு நோய்**

Adult onset diabetes - முதுவயது நீரிழிவு நோய் அல்லது - Non insulin dependant diabetes mellitus (NIDDM) இன்சுலின் (செலுத்தத்) தேவையில்லாத நீரிழிவு நோய் இதை இன்சுலின் சார்பற்ற நீரிழிவு நோய் எனப்படும். பொதுவாக 40 வயதைக் கடந்தவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு. இவர்களுக்கு இன்சுலின் சுரக்கும், ஆனால் தேவையான அளவு சுரக்காது அல்லது அதன் செயலாற்றும் தன்மை குறையும். நீரிழிவு நோயால் பாதிக்கப் பட்டவர்களில் 90 - 95 சதவிகிதம் இவ்வகையைச் சார்ந்தவர்கள். தற்சமய ஆய்வின்படி, இளைஞர்களும் பாதிக்கப்படுகிறார்கள். தற்போதைய வாழ்க்கை முறையும், உடல் உழைப்பைச்சாரா வேலைகளை செய்வதும் ஒரு காரணம்.

இது படிப்படியாக முற்றி தீராத நோயாக மாறும் ஒரு நோயாகும். குறிப்பிடத்தக்க மோசமான சிக்கல்களை உண்டாக்கும். குறிப்பாக இருதயநோய், சிறுநீரக நோய், மற்றும் கண் தெடர்பான, கை, கால் நரம்பு, இரத்தக் குழாய் பாதிப்புகள் ஏற்படலாம் மற்றும் அறுவைச்சிகிச்சைமூலம் கால், விரல்களை நீக்கும் நிலையும் ஏற்படலாம். இதற்கு நிரந்தர தீர்வு இல்லை என்றாலும், சிலர் ஆரம்ப கட்டத்திலேயே நன்கு கவனம் செலுத்தி, தங்கள் உடலின் எடையைக் குறைத்து (பட்டினி இருந்து எடையைக் குறைப்பது முறையல்ல. சரியான உணவின்மூலம் சீராக எடைக் குறைப்பு), உணவில் அதிக கவனம் செலுத்தி சீனியின் அளவை கட்டுப் பாட்டில் வைத்துக்கொள்வதால் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ்கிறார்கள். பலருக்கு சில மருந்துகளும், மற்றும் பலருக்கு இன்சுலினும் தங்களின் உடல் சிக்கலில் இருந்து காத்துக்கொள்ள தேவைப்படுகிறது.

## நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறிகள்




**வகை - 2 :**
**நீரிழிவு நோயின் குணாதிசயங்கள்**

பொதுவாக பெரியவர்களும், சில இளைஞர்களும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். அடிக்கடி தண்ணீர்த்தாகம் ஏற்படும் பொதுவாக இது பரம்பரை நோய் பெரும்பாலும் இதனால் பாதிக்கப்படுபவர்கள் உடல் எடை அதிகமாகவும், உடல்பருமனாகவும் இருப்பார்கள். இரத்தத்தின் சீனி அளவை, உணவு கட்டுப்பாடு, உடற்பயிற்சி, மருந்து மற்றும் இன்சுலின்மூலம் கட்டுப்பாட்டில் வைக்கலாம்.

**வகை - 3 :**
**ஜெஸ்டேஷனல் நீரிழிவு நோய்:**

மூன்றாவது வகையாக கர்ப்ப கால நீரழிவு நோய் (gestational diabetes). கருவுற்ற தாய்மார்களில் 3-5 சதவிகிதம் இவ்வகை நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகிறார்கள். பிரசவத்திற்குப் பிறகு பெரும்பாலும் இது தானாக சரியாகிவிடும். இன்சிலின் உற்பத்தியாகும் அளவு சற்றுக் குறைவதால் இப்பிரச்சினை ஏற்படுகிறது. இதை உணவு கட்டுப்பாட்டால் சரிசெய்யலாம். பலருக்கு இன்சுலின் தேவைப்படும். குழந்தை பாதிக்கப்படும் என்பதால், மருந்துகளை இவர்களுக்கு கொடுக்கமாட்டார்கள்.

பிறக்கும் குழந்தைகள் பொதுவாக மற்ற குழந்தைகளைவிட சற்று பெரியதாக இருக்கும். பிறக்கும் குழந்தைக்கு இரத்தத்தில் சீனியின் அளவு சற்று குறைவாக இருக்கலாம். இவர்களில் 40 சதவிகிதம் பேருக்கு அவர்கள் முதுமை அடையும்போது டைப் II நீரிழிவு நோயால் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே இவர்கள் பிரசவத்திற்குப் பிறகு வருடம் ஒரு முறை டாக்டரிடம் பரிசோதனைசெய்து கொள்வது நல்லது.

சீனி அதிகம் சாப்பிடுவதால் நீரிழிவு நோய் வருமா? நீரிழிவு நோய் என்றதும், ஒருவர் அதிகம் நீரிழிவு சாப்பிட்டால் அவருக்கு நீரிழிவு நோய்வருமா என்கிற கேள்வி பலரின் மனதிலும் எழுவது இயற்கை. உடல் ஆரோக்கியமாக இருக்கும் சராசரி மனிதர் ஒருவர் அன்றாட வாழ்க்கையில் சாப்பிடும் நீரிழிவு அல்லது இனிப்பின் அளவுக்கும் அவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கும் நேரடி தொடர்பில்லை என்கிறார்.

அதேசமயம், அவரது பெற்றோர் இருவருக்கும் நீரிழிவு நோய் இருந்து, அவர் உடற்பயிற்சி செய்யாதவராகவும் இருந்து, அவருடைய உடல் பருமனும் அதிகமாக இருக்கும் பட்சத்தில், அவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கான மரபு காரணிகளும், சுற்றுப்புறக் காரணிகளும் அதிகபட்சமாக இருக்கும் பின்னணியில், ஒருவர் அதிகமாக சீனி சாப்பிட்டால், அது அவரது உடல் எடையை அதிகரிக்கச்செய்து, அதன் மூலம் நீரிழிவு நோய்வருவதை ஊக்குவிக்கும் காரணியாக இந்தக் கூடுதல் சீனி அமைவதற்கான சாத்தியம் இருக்கிறது.

உடல் ஆரோக்கியமாக இருக்கும் சராசரி மனிதர் ஒருவர் அன்றாட வாழ்க்கையில் சாப்பிடும் சீனி அல்லது இனிப்பின் அளவுக்கும் அவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கும் நேரடி தொடர்பில்லை. அதேசமயம், ஒருவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கான மரபு காரணிகளும், சுற்றுப்புறக்காரணிகளும் ஏற்கெனவே அதிகமாக இருக்கும் பின்னணியில், அவர் கூடுதலாக சீனி சாப்பிட்டால், அதனால் அவரது உடல் எடை அதிகரித்து, அதன்மூலம் நீரிழிவு நோய்வருவதற்கான சாத்தியங்களும் அதிகரிக்கும்.

அடுத்ததாக, நீரிழிவு நோய் ஒருவருக்கு வந்திருக்கிறதா, இல்லையா? என்பதை தெரிந்து கொள்வதற்கு பொதுவான அறிகுறிகள் சில இருக்கின்றன. அதிக தாகம், அதிக பசி, அதிக சோர்வு, எடை குறைதல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், ஆறாத புண்கள் ஆகிய அறிகுறிகள் நீரிழிவு நோய்வந்திருப்பதை குறிப்புணர்த்துவதாக கருதப்படுகின்றன.

இப்படிப்பட்ட அறிகுறிகள் ஒருவருக்கு இருந்தால், அவர்கள் அவசியம் நீரிழிவு நோய் இருக்கிறதா என்பதை கண்டறியும் இரத்தப் பரிசோதனையை செய்துகொள்வது மிகவும் அவசியம். அதேசமயம் இத்தகைய அறிகுறிகள் நீரிழிவு நோய் பாதிப்புக்கு உள்ளானவர்கள் அனைவருக்கும் தெரிவதில்லை. நீரிழிவு நோய் தாக்கியவர்களில் சுமார் ஐம்பது சதவீதம் பேருக்கு இந்த அறிகுறிகள் வெளியில் தெரியாமலே இருக்கும் என்பதுதான் நீரிழிவு நோயில் இருக்கும் மிகப்பெரிய மருத்துவ அவலம்.

இப்படியான அறிகுறிகள் அற்ற நீரிழிவு நோயாளிகளுக்கு நீரிழிவு நோயின் பாதிப்புகள் வெளியில் தெரியும்போது, அவர்களில் பலருக்கு பாதிப்புகள் கடுமையாக இருக்கும். இதை போக்கவேண்டுமானால், நீரிழிவுநோயை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடிப்பது அவசியமாகிறது.

இதன் ஒருபகுதியாக, பெற்றோருக்கு நீரிழிவுநோய் இருந்தால் அவர்களின் பிள்ளைகளுக்கு 25 வயதாகும்போது அவர்கள் கண்டிப்பாக நீரிழிவுநோய் இருக்கிறதா என்று பரிசோதித்துக் கொள்வது அவசியம். அதுவும் தவிர. பொதுவாக தங்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியங்கள் இருக்கிறதா என்பதை யார் வேண்டுமானாலும் அறிந்துகொள்வதற்கு ஒரு எளிய வழிமுறை இருக்கிறது.

(தொடரும்)

# விளக்கு மட்டுமா சிவப்பு?




## சுலோசனா பரிணயம்

இந்துக் குடும்பத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் தானதருமம் செய்யக் கூடாது. சொத்துக்களை அப்படியே வைத்திருந்தால்தான் பெண்களை நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்கமுடியும் இல்லையா சேர்!

நாங்கள் சிறுகுழந்தைகளாக இருந்ததால் எங்கள் எதிர்காலத்தைப் பற்றி எங்கள் தந்தை கவலைப்படவே இல்லை. பட்டுப்பாவாடையும். சட்டையுமாக எங்களை அலங்கரித்துப் பார்த்தாரே தவிர பாக்கிப் பணத்தை எல்லாம் தர்மம்செய்வதிலேயே செலவழித்துவிட்டார்.

என் தாய், அப்பா சொல்லைத் தட்டி நடப்பதில்லை.

சமயங்களில் மெதுவாக, "பெண்களெல்லாம் வளர்ந்துகொண்டு வருகின்றன. இருப்பதை மிச்சம்பிடித்தால் தானே திருமணத்திற்கு ஆகும்?" என்று அவள் ஞாபகப்படுத்தினால். "தர்மம் தலை காக்கும்" நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே என்பார்.


இரவு பன்னிரண்டு மணிக்கு இராப் பிச்சைக்காரன் வந்து தெருவிலே சத்தம் போட்டாலும், அப்போது திறக்கிற முதல் கதவு எங்கள் வீட்டுக் கதவாகத்தான் இருக்கும்.

"தர்மவான் தர்மவான்" என்று ஊர் சொல்லிற்றே தவிர, உயர்ந்திருந்த எங்கள் குடும்பம் என் முதல் சகோதரிக்குத் திருமண வயது வந்தபோதே நடுத்தரக் குடும்பமாகிவிட்டது. ஆனால் பெருங்காயம் இருந்த பாத்திரம்போல், வாசனை மட்டும் இருந்தது.

என்னையும் என் சகோதரர்கள் இருவரையும் பக்கத்து ஊர் உயர் நிலைப்பள்ளி வரையிலே படிக்க வைத்தாரே தவிர என் மூத்தசகோதரிகள் இருவரும் ஆரம்பப் பள்ளியைத் தாண்டவில்லை. அவர்களுக்குப் படிப்பும் வரவில்லை என்பதனால் வீட்டோடு இருக்கச் சொல்லிவிட்டாள் என் தாய்.

என் மூத்தசகோதரி சுலோசனாவுக்குக் கொஞ்சம் மாறுகண் உண்டு. ஆனாலும் திருத்தமாக இருப்பாள்.

இரண்டாவது சகோதரி சாவித்திரி நல்ல அழகு. ஆனால் ஒரு பத்திரிகையைக்கூட ஒழுங்காகப் படிக்கத் தெரியாது.



அவர்கள் இருவருக்கும் திருமண வயதுவந்த நேரத்தில், எனக்குப் பன்னிரண்டு வயது.

சுலோசனா அக்காவுக்குக் கல்யாணம் பேசவேண்டும் என்று என் தாய் துடித்தாள்.

'பெண் குதிர் மாதிரி வளர்ந்து விட்டாள். இன்னும் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்தால் எப்படி?' என்று ஊரார் கேட்கும்போதெல்லாம் என் தாய் மனம் படாதபாடுபடும்.

பட்டணத்திலே பக்கத்து வீட்டுக்காரர் யார் என்பதுகூட நமக்குத் தெரியாது. ஆனால் பட்டிக்காட்டில், உள்வீட்டில் என்ன நடக்கிறது என்பதுகூட ஊர் முழுக்கத் தெரிந்துவிடும்.

இத்தனைக்கும் எங்கள் குடும்பச் சொத்து ஒன்றும் அடியோடு நாசமாகிவிடவில்லை.

ஏதோ கொஞ்சம் மிச்சம் இருந்த நேரம்தான் என்றாலும் ஊரிலே வேண்டாதவர்கள் ஏதேதோ பேசத் தொடங்கினார்கள்.

சேர்... நான் ஓரளவுக்குப் படித்திருக்கிறேன். நம்நாட்டு ஜனங்கள் விஷயம் உங்களுக்குத் தெரியாதா?"

நன்றாக வாழ்ந்தால், "இவனைத் தெரியாதா?" என்பார்கள். நலங்கெட்டுப் போனால், "இவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்" என்பார்கள்.

என் தந்தை செய்துள்ள தர்மத்திற்கு யாரும் அப்படிப் பேசக்கூடாது. என்றாலும். காந்தியடிகளுக்கே விரோதிகள் இருந்த நாட்டில் எங்கள் குடும்பத்திற்கு விரோதிகள் இருக்கமாட்டார்களா?

"இவன் வீட்டில் சம்பந்தம் செய்தால் எள் முனைகூடத் தேறாது" என்றார்கள் சொந்தக்காரர்களில் சிலபேர்.

"இருக்கும்போது வாரி இறைத்தான். இப்போது கட்டிய புடைவையோடு பெண்ணை அனுப்பப் பார்க்கிறான்" என்றார்கள் சிலபேர். இதெல்லாம் என் அப்பா காதுக்குப் போகாது.

நமது கிராமங்களில் பெண்கள்தானே சிறந்த பேச்சாளர்கள். அவர்கள் சபைகளில் அரங்கேறும் தீர்மானங்களெல்லாம் என் அம்மாவுக்கு அவ்வவ்போது வந்து சேரும்.

அவளோ "நாலு பேரறியச் சிரித்தால் நாயகனுக்கு விரோதம். நாலு பேர் பார்க்க அழுதால் நம் கௌரவத்திற்கே விரோதம்" என்று தனியாகப் படுத்து அழுவாள்.

"என் தலைமாட்டிலே இரண்டு குத்துவிளக்கு எரிவதற்கு முன்னால், உனது மணமேடையிலே ஒரு குத்து விளக்கு எரியாதா? என்று, சுலோசனா அக்காவைக் கேட்டுக் கேட்டு அழுவாள்.

உறவினர் வீட்டுத் திருமணங்களுக்குப் போகும்போதுகூட என் தாயின் தோளுக்குப் பின்னால் முதுகைப்பிடித்தபடி மறைந்தே செல்வாள் என் சகோதரி.

ஊரிலே நல்லவர்களும் இருக்கிறார்களல்லவா? அவர்கள் 'குனிந்த தலை நிமிராத கோளை' என்றுதான் என் அக்காவைச் சொல்வார்கள்.

அவர்களில் சிலரது வீட்டில் மாப்பிள்ளைகள் இல்லை. சிலரிடமோ இந்த நல்ல வார்த்தையைத் தவிர வேறு கருணை இல்லை.

எங்கள் சொந்தக்காரர்கள் எல்லோருமே பணக்காரர்கள். பணக்கார வீட்டில் மூதேவி பிறந்தாலும் மேளதாளங்களோடு படியேறமுடியும். இல்லாதவீட்டிலே ஸ்ரீதேவி பிறந்தாலும் கல்லாய்க் கிடந்துதான் கண்ணீர்விட வேண்டும்.

ஒரு காதலோ, கண்றாவியோ என் அக்காவுக்குத் தெரியாது. தாய் தகப்பன் ஒரு நொண்டி முடத்துக்குக் கட்டி வைத்தாலும் கழுத்தை நீட்டத் தயாராயிருந்தாள்.

எங்கள் சாதியில் நொண்டி ஐம்பது பவுண் நகை கேட்பான். குருடன் நூறு பவுண் சீர்வரிசை கேட்பான்.

என் தாயார் அழுத கண்ணீரைச் சரியாக சேர்த்து வைத்திருந்தால் எங்களிடம் மிஞ்சிய பத்துக் காணி நிலத்திற்குத் தண்ணீர் இறைக்கவேண்டியதில்லை.

(விளக்கு எரியும்)

---

**வாரமொரு சிந்தனை**

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

# இளைஞர்களே சிந்தியுங்கள்

இன்றைய இளைஞர்களே! உனக்குத் தேவையான கல்வி எது என்று நிர்ணயம் செய்! தற்சார்பான கல்வியைப் பெறு! வேலையைத் தேடாதே! வேலையை உருவாக்கு! கைவருத்தி உழைப்பவர் தெய்வம் என்று நம்பு! புதிய வரலாறு படைத்திடுக! வரலாற்றுப் போக்கோடு ஓடிவிடலாம் என்று நினைக்காதே! நீ வரலாற்றைப் படித்து சாதனை செய்! உன்னுடைய காலம் இந்த நாட்டினுடைய வரலாற்றில் பொன்னேடாக அமைக்கவேண்டும்.

மனிதன் படைப்பாளி! மனிதன் காலந்தோறும் இப்புவிக்கோளின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருப்பவன். மனிதனை அளவுகோலாகக் கொண்டே இந்த உலகம் மதிப்பிடப்படுகிறது. மனிதப் படைப்பின் நோக்கத்தை நிறைவேற்ற, மனிதனுக்கு அகவியாக அமைவது அறிவு!

"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது திருக்குறள்.

மனிதகுலம் தோன்றிய நாள் தொட்டு அறிவைத் தேடும் முயற்சி நடைபெற்றுவருகிறது. மனித குலத்தினர் அனைவரும் அறிவுபெற்று விளங்கவேண்டும் என்பது நியதி. இத்திசையில் மனிதகுலம் எடுத்த முயற்சிகள் பற்பல. ஆயினும் அறிவு பெற்றோர் கோடியில் ஒருவரே!

இன்று நாம் அறிவுடைமை பற்றிக் கொண்டிருக்கும் கருத்து பிழையானது. தகவல்கள் நிறைய வைத்திருப்பவர்கள், நிறையப் படித்தவர்கள், பட்டம் பெற்றிருப்பவர்கள், இவர்கள் எல்லாம் அறிஞர்கள் என்று பிழையாகக் கருதிக் கொண்டிருக்கிறோம். இவர்களில் அறிஞர்கள் இருக்கலாம். தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்.

இன்றைய உலகம் அறிவியல் உலகம் என்கிறார்கள். கூர்ந்து நோக்கில், உயர்தர அறிவியல் வளரவில்லை. அருவருக்கத்தக்க, நிர்வாணமான சுயநலம் வளர்ந்து வருகிறது.

வீட்டிலிருந்து, உலகத்தின் பெருவீதிகள் வரை எங்கும் பண மதிப்பீட்டுச் சமுதாய அமைப்பு! ஆதிக்கப்போட்டிகள்! மற்றவர் துன்பம் பொருத பண்பே அறிவுடைமை என்று கூறுகின்றது. திருக்குறள்.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின் நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை"

என்பது திருக்குறள். இத்தகு அறிவைப் பெறும் கல்வி வழங்கப் பெறுகிறதா? இன்று நமது கல்வி உலகம் எங்கு போய்க் கொண்டிருக்கிறது? பட்டதாரிகளை உருவாக்குவதில் கல்வி உலகம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால், படைப்பாளிகளை உருவாக்குவதில் பெற்ற வெற்றி மிகமிகக் குறைவு! கல்வியே அறிவுடைமையல்ல. கற்றவர்கள் எல்லாம் அறிவு உடையவர்களும் அல்லர். கல்வியும் கேள்வியும் அறிவுபெறுவதற்குரிய வாயில்களே ஆகும்.

இளைஞர்கள் நீங்கள் தெரிவுசெய்யும் கல்வி "நம்பிக்கை"யைத் தரக்கூடியதாக அமையவேண்டும். எதிர்காலத்தில் உங்களை அறிவுடையோர் பட்டியலில் கொண்டு சேர்க்க உதவும் கல்வியைத் தெரிவுசெய்யுங்கள். அரச உத்தியோகம் என்பதை இலட்சியமாகக் கொள்ளாதீர்கள். எதிர்காலத்தில் தனியார் துறையும், சுய தொழிலும்தான் உயர்வைத் தரும். சமூகத்திற்குப் பயன்படக்கூடிய முறையில் உங்கள் வாழ்வை நிர்ணயிக்கக் கூடிய கல்வியைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். இளைஞர்களில் பலர் பிழையான தெரிவுகள் காரணமாக கல்வியை, வாழ்க்கையை ஏன்? தங்களையே இழந்து தவிப்பதை தெருக்களில் காண்கிறோம்.

கல்விக்கு இதயம் தேவை. சோவியத் கல்வியாளன் சுகோம்லின்ஸ்கி "குழந்தைகளுக்கு இதயத்தை கொடுங்கள்" என்று எழுதினான். கல்வி இதயத்தோடு சம்பந்தமுடையது என்பது அறிந்து நல்ல கல்வியைத் தெரிவு செய்யுங்கள்.

(04 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# மத்தியில் முத்தியது மாகாணத்தில் தீ பத்தியது மக்களின் நிலை என்ன?



ஆனால், தலைகீழான நிலைமையே யதார்த்தமாக இருந்தது. மற்றைய மாகாணங்கள் மொத்தத் தேசிய உற்பத்தியில் பெரும் சதவீதப் பங்களிப்பு ஆற்றிவருவதுடன் தமது மாகாண மக்களின் அபிவிருத்தியிலும் அளப்பெரிய பங்களிப்பு செய்து வருகின்றது. வேலைவாய்ப்புகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியுமின்றி வடமாகாணம் தொடர்ச்சியாக பாதிக்கப் பட்டு வந்ததே தவிர பொருளாதார வளர்ச்சியை உரிய வகையில் அடையவில்லை.

இது பற்றி வடமாகாண முதல்வர் கருத்து வெளியிடும் போது. வடக்கிற்கு திட்டம் ஒன்றை மேற்கொள்ளும்போது எமக்கும் அது தொடர்பில் தெரியப்படுத்துவதினால் அதன் பலன்களை முழுமையாக மக்களுக்கு தெரிவிக்கமுடியும். நல்லிணக்கம் என்பதை எம்முடன் கலந்துபேசாது வெளியிலிருந்து கொண்டுவந்து திணிக்கமுடியாது. எமக்குத் தேவையான விடயங்களில் நல்லிணக்கத்தைக் காட்டவேண்டும். என அவர் சுட்டிக்காட்டுகின்றார் இதேவேளை, இதுதொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் வடக்கு அரசும் மத்திய அரசும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளமுடியும் என்ற விடயத்தை வலியுறுத்தியிருந்தார். (அவருக்குத் தெரியாது எங்கள் முதலமைச்சரும் பிரதமரும் கோபமென்று)

இந்நிலையில் உண்மையான கள நிலவரங்களை பார்க்கும்போது இன்றும் வடமாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையில் ஒரு புரிந்துணர்வு இல்லாத நிலை மையை இதற்கு அடிப்படைக் காரணம். ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பிரதேசங்களை கட்டியெழுப்புவதில் மத்திய அரசாங்கமும் வடமாகாண அரசும் புரிந்துணர்வுடனும், ஒத்துழைப்புடனும் செயற்படவேண்டியது மிகவும் அவசியமாகும். அப்படியானால் இந்தப் பிரச்சினைக்கு யார் தீர்வு காண்பது...?

எந்தவொரு விடயத்தையும் பேச்சுவார்த்தை நடத்துவதன்மூலம் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை அனைவர் மத்தியிலும் காணப்படுகின்ற நிலையில் அந்த சூத்திரத்தை உரியமுறையில் பயன்படுத்தி புரிந்துணர்வு இன்மை, நம்பிக்கையின்மை ஆகியவற்றை அகற்றிக்கொள்வது அவசியமாகும். அதன்மூலமே யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களை விரைவாக அபிவிருத்தி செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடல்களை மேற்கொள்ள முடியும். அதனைவிடுத்து தொடர்ச்சியாக புரிந்துணர்வு இன்மை மற்றும் நம்பிக்கை இன்மை என்பவை நீடிக்குமானால் அது பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்பதாகவே அமையும்.

விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை கட்டியெழுப்புவதற்காக இலங்கையில் உதவி வழங்கும் மாநாட்டை நடத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளுவதும் அது தொடர்பில் ஜப்பான் அரசாங்கத்துட்ன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றமையும் வரவேற்கத்தக்க விடயங்களாகும். அடுத்த வருடம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் இந்த உதவி வழங்கும் மாநாட்டின் ஊடாக முழுமையான பயன்பெறப்பட்டு பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவேண்டும். இது அரங்கேறினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு சிறிதளவேனும் நிவாரணம் கிடைக்கும்.

ஆனால் தற்போது மத்திய அரசுக்குள் முரண்பாடுகள் முற்றிய நிலையில் உள்ளது. இது பிரதான இருகட்சிகளின் கூட்டு அரசாங்கம். முரண்பாடு சிறிதளவு வந்தால்கூட அபிவிருத்தி அரசியல் சிந்தனைகளை முற்றாக முடக்கிவிடும்.

அரசாங்கத்துக்குள் நிலவிய முரண்பாடுகள் பகிரங்க மோதலாக வெடித்துள்ளது. அவன்கார்ட் மிதக்கும் ஆயுதக் களஞ்சிய விவகாரம், தொடர்பாக சிறிலங்காவின் கூட்டு அரசாங்கத்துக்குள் நிலவிய முரண்பாடுகள் பகிரங்க மோதலாக வெடித்துள்ளது.

ஜனவரி மாதம் நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த பிரதான காரணமானது இந்த நாட்டின் ஊழல் காரர்களை தண்டிக்கவேண்டும் என்பதாகும். மக்களின் சொத்துக்களை கொள்ளையடித்து சுகபோகமாக வாழும் ஆட்சியை வீழ்த்தி உரிய குற்றவாளிகளை தண்டிக்கவேண்டும் என்பதற்காகவேயாகும்.

அந்த ஒரு நோக்கத்திற்காகவே சிவில் அமைப்பினரும், மக்களும் தேசிய அரசுடன் கைகோர்த்தனர். ஆனால் எதற்காக இந்த ஆட்சியை அமைக்கப்பட்டதோ அந்த காரியம் மறக்கடிக்கப்பட்டு ஊழல்காரர்களையும் மோசடிக்காரர்களையும் காப்பாற்றும் நிலைக்கே இந்த அரசாங்கமும் தள்ளப்பட்டுள்ளப்பட்டுள்ளது. என்பதை அதன் அமைச்சர்களே சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரகசியங் களை மகிந்தவிடம் கூறி பணம் சம்பாதித்தனர். அப்போதும் கட்சியை காட்டிக்கொடுத்து மோசடிகளை செய்த நபர்கள் இன்று இந்த அமைச்சரவை யிலும் உள்ளனர். அமைச்சுப் பதவி- களை யும் பொறுப்புகளையும் வைத்துக் கொண்டு தம்மை நல்லவர்கள் போல் வெளிக்காட்டி வருகின்றனர். என தேசிய அரசின் அமைச்சர்களையே அவ் அரசில் உள்ள அமைச்சர்களை விமர்சிக்குமளவிற்கு முரண்பாடு முற்றிவிட்டது.

அதிபர் தேர்தல் முடிந்த இரண்டாவது நாள், ஜனவரி 10ஆம் திகதி அவன்கார்ட் நிறுவனத்துடன் ஒருசிலர் உடன்படிக்கை களை செய்துள்ளனர். அரசாங்கத்தில் இருந்துகொண்டு இந்த ஊழலை மூடி மறைக்க இவர்கள் பாரிய நிதிக் தொகை யை வாங்கியுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் மக்கள் மத்திய அரசை நம்புவதா?..மாகாண அரசை நம்புவதா? எனும் ஏக்கங்களும் ஏமாற்றங்களும் தற்போது மலிந்து விட்டன. எது எப்படியிருப்பினும் பாதிக்கப்படப்போவது அப்பாவிப் பொது மக்களே.

---

(08 ஆம் பக்கம் தொடர்ச்சி...)



## ஜெனீவாத் தீர்மானங்களை அமுலாக்குவதற்காக சிவில் சமூகத்திற்கு அறிவூட்டல்

உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை என்பது ஒவ்வொரு தனி நபருக் கானதும் ஒட்டுமொத்த சமூகத்திற்கானது மாகும். அதற்கு ஏற்பாடாகத்தான் இரண்டு வகையான பொறிமுறைகள் உள்ளடக்கப் பட்டுள்ளன. ஒன்று காணாமல்போனோருக்கு நடந்த கதி பற்றி அறிவதற்கான பொறி முறை. மற்றையது உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறை. உண்மை யைக் கண்டறிவதற்கான மன்றத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வந்து சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் நம்பிக்கையாகவும் தமது கருத்துக்களைச் சொல்வதற்கான ஒரு சந்தர்ப்பமும் தேவை.

இந்த உண்மைகளை எல்லோரும் அறிந்துகொள்வதற்கான ஏற்பாடாகத்தான் இந்தப் பொறிமுறை உள்ளது. ஆனால், அனுபவத்தின் அடிப்படையில் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க இதுவரை இலங்கையில் 3 ஆணைக்குழுக்களுக்கு மேல் அமைத்தாகிவிட்டது.

அதற்கும் மேலதிகமாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் செயற்பட்டது. ஆனால், இவற்றிலெல்லாம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்பதையே கடந்த காலங்கள் உணர்த்தி நிற்கின்றன.

முதலில் முன் அனுமானங்கள் இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களின் குரல்களை செவி மடுத்துக் கேட்பதற்கான ஒரு தளம் தேவை.

நடந்த சம்பவங்களை சூழ்நிலைகளை யும் பற்றி உள்ளூர் மக்களின் பரிபாஷை யில் நன்கு புரிந்துகொள்ளக்கூடியவர்கள் கட்டாயமாக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

இந்த ஆணைக்குழுவில் பால்நிலை சமத்துவம் மிக முக்கியம். ஏனென்றால் ஆயுத முரண்பாடுகளின்போது அதிகமதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களும் சிறுவர் களுமாக இருப்பதால் பெண்களின் நிலைமைகள் பற்றிக் காதுகொடுத்துக் கேட்கவேண்டும்.

குற்றமிழைக்காத அரசியல் பின்னணி கொண்ட நபர்களே உண்மையைக் கண்டறியும் குழுவில் இடம்பெற்றிருக்கவும் வேண்டும். அந்தக் குழுவுக்கு அதிகாரமும் இருக்கவேண்டும். எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய ஆணைக்குழுவாக இது இருக்கவேண்டும்.

ஆணைக்குழுவின் காரியாலயங்கள் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் இருந்து செயற்படவேண்டும். இந்த ஆணைக்குழு உள்ளூர் நீதிமன்றத்திற்கு சவால்விடுக்கின்ற ஒன்றாக அமைந்து விடக்கூடாது.

அதேவேளை புதிய ஆணைக்குழு குற்றவாளிகள் ஒழிந்துகொள்கின்ற இடமாகவும் அமைந்துவிடக்கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் தங்களது பாதிப்பின் தன்மையை வலுப்படுத்துவதற்கான ஆவணங்களைத் தயார் செய்தலும் பொறிமுறைக்குள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களும் அவர்களுடைய பாதிப்புக் கதைகளும்தான் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவில் மையப் புள்ளிகளாக இருக்கக்கூடிய விடயங்கள். சிலவேளைகளில் உண்மையாக மிக- மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒருவர் தனது கனவில் தோன்றிய விடயங்களைக்கூட தனக்கிருக்கின்ற ஒரேயொரு ஆதாரமாகச் சமர்ப்பிப்பார். ஏனென்றால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அவரிடமுள்ள விடயங்கள் முக்கியமானவை. ஆணைக்குழு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் துயரங்கள் குணப்படுத்தல் குறித்து கவனமெடுக்கும்.

ஆணைக்குழு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமாக இருந்தால் அந்த ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் காலத்தையும் சிவில் சமூகம் கூறவேண்டும். இந்தளவு மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதி கொண்ட ஒரு ஆணைக்குழுவை நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதை சிவில் சமூகம் சொல்லவேண்டும்.

பாதிக்கப்பட்டவருக்கும் அவர்சார்ந்த சமூகத்திற்கும் தனக்கு நடந்த அநீதி பற்றி அறிந்து கொள்ளும் உரிமை உண்டு. வழமையான நீதிமன்றம் குற்றவாளியையும், அவரது குற்றத்தையும், பற்றியதாக மாத்திரமே இருக்கும்.

அதனால், அந்த நீதிமன்றம் எத்தனை பேரைத் தண்டிக்கப்போகின்றது என்பதும் குறுகிய அளவுடையதுதான். ஆயிரம் இரண்டாயிரம் மூவாயிரம் பேரையா யுத்தக் குற்றத்துக்காகத் தண்டிக்கப் போகின்றது? ஒரேயடியாக பல்லாயிரக்கணக்கானோரைத் தண்டிக்கும் ஏற்பாடுகள் நீதிமன்றத்தில் இருக்கப்போவதில்லை.

ஆகவே, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு இதனைவிட ஒரு பரந்துபட்ட நோக்கத்தைக் கொண்டதாக இருக்கும். பயமின்றிக் குற்றமிழைக்கலாம் என்கின்ற ஒரு கலாசாரத்தின் விளைவால் ஏற்பட்ட துயரங்களைத்தான் இலங்கையர்களாகிய நாம் சுமந்துநிற்கின்றோம். மிகவும் காத்திர மான முக்கியமான தகவல்களை வழங்கக் கூடிய குற்றமிழைத்தவர்கள் சிலர் இருப்பார் கள். அவர்கள் இந்த ஆணைக்குழுவுக்கு வந்து உண்மையைச் சொல்வதற்கு எந்த விதமான ஏற்பாடுகள் இருக்கின்றன என்பது பற்றியும் சிந்திக்கவேண்டும்.

அப்படிப்பட்ட ஒருவரை எப்படிக் கையாள்வது, அவருக்கு மன்னிப்பா, குறைந்தளவான தண்டனையா? அல்லது அவருக்கு வேறேதும் வசதிகளை வழங்க வேண்டுமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். வழமையாக உண்மை நீதியைப் பற்றி மாத்திரம் கதைத்துவிட்டு பரிகாரம் காண்பது பற்றிப்பேசாமல் விட்டுவிடுவோம்.

பரிகாரம் என்பது நஷ்டஈட்டை மட்டும் கருதாது. பரிகாரம் என்பது முழுமையான ஒரு புனர்வாழ்வாகவே இருக்கவேண்டும். இழப்பீட்டுக்கு மேலதிகமாக உளநலன் சார்ந்ததாகவும் இந்த பரிகாரம் அமைய வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கான பரிகாரம் என்பது பாதிக்கப்பட்டவர்களைத் திருப்திப்படுத்துவதான ஏற்பாடுகள் என சர்வதேச சட்டங்கள் கூறுகின்றன.

குற்றமழைத்தவர்கள் அவர்கள் எதிர் தரப்பினராக இருந்தாலும் அவர்கள் மன்னிப்புக் கோரவேண்டும். பாதிக்கப் பட்டவர்கள் தாங்கள் எதிர்கொண்ட துயரங்களை நினைவுகூர்ந்து குணமடை வதற்கான ஏற்பாடுகள் இருக்கவேண்டும்.


பாலியல் வன்முறைக்குள்ளான பெண்கள் இருப்பார்களாக இருந்தால் அவர்களுக்கான ஒரு புனர்வாழ்வு மையத்தை உருவாக்கி செயற்படுத்த வேண்டும். ஆனால் முன் அனுமானத்தின் அடிப்படையில் இந்தப் பரிகாரங்கள் அமையக்கூடாது.

இதனைக் கருத்திற்கொண்டுதான் பரிகாரத்துக்கான ஒரு அலுவலகத்தைப் பற்றியும் அரசாங்கம் சிந்திக்கின்றது.

பாரபட்சமின்மை, சீரிய முறையில் நடைபெறல், வளங்கள், சர்வதேச பங்குபற்றல், தலையீடுகளற்ற சுதந்திரமான வையாக, பொறிமுறைகள் ஒன்றோடொன்று ஒத்துழைப்பு வழங்கக்கூடியதாக, 4 பொறிமுறைகள் சமூக நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவை இலங்கையின் அரசில் தீர்வாக இருக்காது, காணி உரிமை பெற்றுக் கொள்வதாகவும் இருக்காது. மொழிப் பிரச்சினைக்கான தீர்வாகவும் இருக்காது.

ஏனைய நீதித்துறைகட்கு அறிவூட்டுவதாக இருக்கவேண்டும். மதப் பாரபட்சம், கல்வி அடிப்படை பார்க்கப்படாது. பொதுவான சமூகநீதிக்கு எவ்வாறு இதனைப் பாவிக்கவேண்டும் என்பதே இந்த செயலமர்வுகளில் வலியுறுத்தப்படுகின்றன.



# தமிழரசுக் கட்சியினரின்

## முதலமைச்சருடனான இணக்க அரசியல் எப்போது?

மைத்திரி ரணில் தலைமையிலான ஆட்சி அமைந்து பத்து மாதங்கள் ஆகின்றன. நல்லாட்சிக்கான அரசாங்கம் என்றே அழைக்கப்படுகிறது.

முன்னைய ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கமும் நடத்தி வந்த தவறான பாதையிலான சர்வாதிகாரம் முடிவிற்கு வந்தமை நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மையான விடயமாகும்.

ஆனால் அந்த இடத்திற்கு வந்துள்ள மைத்திரி ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கம் எனப்படுவது அடிப்படைப் பிரச்சினையான பொருளாதாரப் பிரச்சினைக்கும், பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்கும் எத்தகைய தீர்வுகளை முன்வைக்கப் போகின்றது என்பதே எழுந்து நிற்கும் கேள்விகளாகும்.

பொருளாதாரப் பிரச்சினைக்குரிய அளவுகோலாக முன்வைக்கப்படும் வரவு, செலவுத் திட்டத்தைக் காணலாம். ஆனால் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வினை எதனை அளவு கோலாகக் கொண்டு காண்பது என்பது எவருக்கும் புரியவில்லை.

புதிய அரசியலமைப்புப் பற்றிச் சொல்லப்படுகிறதே தவிர திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படவில்லை. அதனால் தேசிய இனப்பிரச்சினைக்குரிய தீர்வு அவ்வாறான புதிய அரசியலமைப்பில் எவ்வாறான இடத்தில் உரியவாறு முன்வைக்கப்படுமா என்பது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதாகும்.

ஏனெனில் ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் ஆட்சி அதிகார பீடத்திற்குப் புதியவர்கள் அல்லர். அல்லது இதுவரையான பட்டறிவின்மூலம் புதிய சிந்தனைத் தடத்தில் வழிநடக்கத் தங்களைத் தகவமைத்து நிற்பார்களா என்பதும் கேள்விக்குரியதாகும்.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜயப்பானுக்கு அரசு முறைப் பயணத்தை மேற்கொண்டு நான்கு நாட்கள் தங்கியிருந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார்.

அங்கு யப்பானியப் பாராளுமன்றத்தில் உரையாற்றவும் செய்தார். அவ்வுரையின் போது தங்களது அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுபற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அப்படி ஒரு பேச்சுவார்த்தை பற்றிய தகவல்களோ, செய்திகளோ வந்ததில்லை. இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்நிலைத் தலைவர்களான இரா.சம்பந்தன் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் என்போருடன் அரசாங்க உயர்மட்டத் தலைவர்கள் உள்ளார்ந்த நெருக்கத்தின் அடிப்படையில் ஏதாவது பேசி இருக்கக்கூடும்.

இது பற்றி ஏனைய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ, ஏனையோருக்கோ தெரிந்ததாகவும் அறியமுடியவில்லை. அவ்வாறு தெரிந்திருப்பதற்கு நியாயமும் இல்லை.

காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தேர்தல்களில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் வாக்குப்பெட்டிகளை நிரப்பும் அரசியலை முன்னெடுத்துப் பதவிகளைப் பெறுவதற்கு மட்டுமே அன்றி தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமைகளுக்கோ அன்றி அபிலாஷைகளுக்கோ அல்ல என்பதே அடிப்படை உண்மைநிலையாகும்.

எனவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பற்றி மீண்டும் மீண்டும் அரசியல் அலசல் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதிய ஜனாதிபதித் தேர்தல்வரை எதிர்ப்பு அரசியல் எனக்கூறி ஆங்காங்கே சில நடவடிக்கைகளைத் தனியாகவும் ஏனைய எதிர்ப்பு சக்திகளுடனும் முன்னெடுத்து வந்த த.தே.கூட்டமைப்பானது புதிய ஆட்சியின் வரவோடு இணக்க அரசியல் எனக்கூறி ஐக்கிய தேசியக் கட்சியுடனும் மைத்திரி ரணில் ஆகியோருடனும் கைகோர்த்து நெருக்கமாகிக் கொண்டனர்.

கடந்த பொதுத் தேர்தலில் பெயரளவில் சமஷ்டி என உச்சரித்துக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இணக்க அரசியலுக்கும் தமது இதயங்களுக்கு நெருக்கமான ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்துடன் நிபந்தனை இன்றி ஒத்துழைக்கவும் தமிழ் மக்களிடம் ஆணை கேட்டனர்.

போராட்டங்களாலும் யுத்தத்தினாலும் இழப்புக்களையும் தாங்கமுடியாத சோகங்களையும் தாங்கிநின்ற வடக்கு, கிழக்கின் தமிழ் மக்கள் ஒரு தற்காலிக ஆறுதல் என்றவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பெருமளவு வாக்குகளை வழங்கி பதினாறு உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைத்தனர்.

இவ் ஆணையானது தமது இணக்க அரசியலுக்கு கிடைத்த அங்கீகாரம் எனக் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் தெற்கிலே இணக்க அரசியலில் வெகுஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இவ் இணக்க அரசியலால் வடக்கு, கிழக்கு மக்கள் பெற்றுக்கொண்டவை குறிப்பிடத்தக்கவை என்று கூறிவிட முடியாது. ஆனால், சில மேலெழுந்தவாரியான செயற்பாடுகளுக்கு அப்பால் மக்கள் எதிர்நோக்கிவந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படவில்லை.

இவை பற்றி கூட்டமைப்பினர் எவ்வித எதிர்ப்புக் குரலையும் நடவடிக்கை ரீதியில் முன்னெடுப்பதும் இல்லை. மீள்குடியேற்றம், இராணுவப் பிடியில் உள்ள நிலங்கள் மீட்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனோர் பற்றிய தகவல் பெறுதல், வடபுலத்து மீனவர்களின் பிரச்சினை மற்றும் தொழிலாளர்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள், பெண்கள், சிறுவர்கள் எதிர்கொண்டு நிற்கும் அவலங்கள் போன்றவற்றுக்கு இவர்களது இணக்க அரசியலால் எத்தகைய வேலைத் திட்டங்களையோ அல்லது கோரிக்கைகளையோ அரசாங்கத்திடம் முன்வைக்கவில்லை என்பது பரவலான அதிருப்தியாகப் பேசப்படுகிறது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான அதிருப்தி தெரிவிப்போர் மத்தியில் ஒரு விடயம் சுட்டிக்காட்டப்படுகிறது.

அதாவது மைத்திரி ரணில் தலைமையிலான அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் பதவியும் பெற்று மிக நெருக்கமான இணக்க அரசியல் நடத்தி வரும் சம்பந்தன், மாவை, சுமந்திரன் ஆகியோரால் ஏன் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருடன் இணக்கப்பாட்டுடன் செயற்படமுடியவில்லை என்ற ஆதங்கம் வெளிப்படுத்தப்பட்டுவருகிறது.

இன்றைய முதலமைச்சரை அன்றைய முதலமைச்சர் வேட்பாளராக வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு அழைத்துவந்து நிறுத்தியவர்கள் தமிழரசுக் கட்சியின் தலைவர்களான சம்பந்தனும் மாவை சேனாதிராசாவும், எம்.ஏ.சுமந்திரனுமாவர்.

அன்று சி.வி.விக்னேஸ்வரன் பற்றிக் கூறும்போது அவரது நேர்மை, ஆற்றல், ஆளுமை, தோற்றப்பொலிவு, நாவன்மை, மக்கள்மீதான பற்றுறுதி என நீட்டி வாசித்துக்கொண்ட சம்பந்தன் இப்போது முதலமைச்சரை ஏறெடுத்துப் பார்ப்பதைக் கூட விரும்பாது இருந்துவருவதைக் காணமுடிகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியேற்ற பின்பு முதல் தடவையாக யாழ்ப்பாணம் சென்ற சம்பந்தன், அவ்வேளை யாழ்ப்பாணத்தில் இருந்த முதலமைச்சரை சந்தித்துப் பேசாது மிகுந்த வக்கிரத்துடன் அங்கிருந்து திரும்பிய நிகழ்வு மோதலின் உச்சத்தை எடுத்துக் காட்டியிருக்கிறது.

மூத்த அரசியல்வாதியான சம்பந்தன் இவ்வாறு நடந்துகொண்டமை கடும் விமர்சனத்தை தமிழ்த் தேசிய வாதிகள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இது தெற்கே இணக்க அரசியலும் வடக்கே முதலமைச்சர்மீதான எதிர்ப்பு அரசியலும் என்பதை வெளிப்படுத்துவதாகவே காணப்படுகிறது. ஏற்கனவே வடக்கின் முதலமைச்சருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் முறுகல் நிலை ஏற்பட்டு நேரில் சந்தித்தவேளையிலும் பேச்சல் பறச்சல் அற்ற முறிவு நிலை ஏற்பட்டுவிட்டது.

பிரித்து ஆள்வதில் பிரித்தானிய கொலனியவாதிகள் மட்டுமன்றி பேரினவாதிகளும் திறமையானவர்கள் என்பது தென்னிலங்கையின் ஆளும்வர்க்க அரசியலில் நீடித்துவந்த விடயமாகும்.

வடக்கில் முதலமைச்சர் அதிகப்படியான வாக்குகள் பெற்று பதவியேற்றுக்கொண்ட பின் தன்னளவில் தனது நம்பிக்கைகளின் அடிப்படையில் நேர்மை என்பதையும் மனச்சாட்சி என்பதையும் பேணிக்கொள்ள வேண்டும் என்பதில் மும்மூரம் காட்டினார்.

முதலமைச்சர்மீது வைத்திருந்த உயர்ந்த நல்லெண்ணம் சுன்னாகம் கழிவு எண்ணெய் கிணறுகளில் கலந்த விடயத்தில் அவர் முன்வைத்த கருத்துக்களால் சிதைவடைந்து கொண்டது.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஒரு நிலைப்பட்ட கொள்கை, கோட்போடு கிடையாது. வெறுமனே தமிழ்த் தேசியம் என்பதன் ஊடாகத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் பதவி அரசியலாக மட்டுமே நீடித்துச்செல்கிறது.

மக்கள் சேவை என்பது மிக அருந்தலாகவே இடம்பெறுகிறது. அதே வேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளில் தமிழரசுக் கட்சியினரின் மேலாதிக்கப் போக்கே உள்முரண்பாடுகளின் ஊற்று மூலமாகக் காணப்படுகிறது.

தாங்கள் தங்களவில் எடுக்கும் முடிவு-களை ஏனைய இணைவுக் கட்சிகள் கேள்வி நியாயமின்றி ஏற்கவேண்டும் எனத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வற்புறுத்தும் நிலை காணப்படுகிறது.

இதனால் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஒரு புறமாகவும் முதலமைச்சர் உட்பட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண-சபை உறுப்பினர்கள் மறுபுறமாகவும் காணப்படுகின்றனர்.

மூன்று மாதங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா முதலமைச்சருடன் இணக்கச் செயற்பாட்டை ஏற்படுத்தப்போவதாகக் கூறிக் கொண்டார்.

ஆனால் அதற்கான எந்த முயற்சியும் மாவையாரின் பக்கத்தில் இருந்து எடுக்கப்படவில்லை என்பதை முதலமைச்சரின் ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அப்படி மாவையார் நெஞ்சுக்கு நேர்மையாகக்கூறி இருப்பின் தானே நேரில்சென்று முதலமைச்சருடன் பேசியிருக்கலாம். அல்லது தமது தலைவர் சம்பந்தன் வந்தபோது அவரைப் பேச வைத்திருக்கலாம்.

அவ்வாறான முயற்சிகள் எதையும் . முன்னெடுக்காது தெற்கிலே கரங்களை இணைத்து இணக்க அரசியலுக்காகத் தமிழரசுக் கட்சித் தலைமையும் அவர்களுக்குச் சார்பானவர்களும் நடந்துகொள்கிறார்கள். மாகாண சபையில் முப்பது உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு நான்கு அமைச்சர்களுடனும் தவிசாளர்,

முதலமைச்சர் மற்றும் ஏனையவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் வடபுலத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து ஒரு பொதுக் கலந்துரையாடலுக்கு ஏன் வரக்கூடாது என்ற கேள்வியை வடபுலத்தின் கணிசமானோர் எழுப்புகின்றனர்.

இன்று தமிழ்த் தேசியத்தைத் தாரகமந்திரமாகக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள நான்கு கட்சிகளாயினும் சரி அவற்றுக்கு அப்பாலான தமிழர் தரப்புக் கட்சிகளாயினும் அடிப்படையில் தமது கொள்கை, கோட்பாட்டு நிலையில் மாற்றம் கொண்டுவரவேண்டும்.

இவர்கள் எல்லோரும் முன்னெடுக்கும் தமிழ்த் தேசியம் என்பதனுள் ஜனநாயகமோ, சமத்துவமோ கிடையாது. ஆதிக்கம்மிக்க வர்க்க, சாதிய ஆணாதிக்கப் பெண்ணடிமைச் சிந்தனைகளே மிகக் கெட்டியாக இருந்து வருகின்றன.

அவை பற்றிய சமூக, விஞ்ஞான அடிப்படையிலான புதிய மதிப்பீடு முன்னெடுக்கப்படாதுவிடின் வெறும் செக்கிழுத்த பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியதுதான்.

எனவே, தமிழ்த் தேசியம் என்பது முற்போக்குத் தேசிய ஜனநாயகம் என்ற தடத்திற்கு மடைமாற்றம் பெறுவது காலத்தின் தேவையாகும். அதுவே யதார்த்தத்தோடு இணைந்த தூரநோக்கு அரசியலாகவும் தமிழ் மக்களின் விடுதலையாகவும் அமையமுடியும்.

# வாரமொரு காரம்

## அழுத்தத்தின் மத்தியில் வெறுப்படையும் மாணவர்களின் தற்கால கல்வி நடைமுறைகள்



கல்வியென்பது தற்கால மாணவ சமூகத்தின் மத்தியில் பெருஞ்சுமை யாகத் திணிக்கப்பட்டுள்ளது. சிறு பருவத்தில் இருந்து உயர்கல்விவரை எதிர்பார்ப்புகள் அதிகரித்தமையால் பிள்ளைகளிற்கான அழுத்தங்களும் அத்துமீறிப் போகின்றன.

சரியோ, தப்போ அந்தப் பாரத்தை சுமந்துதான் ஆகவேண்டும் எனும் இக்கட்டுக்களெல்லாம் தலை தூக்கியுள்ளன. உதாரணமாக புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளியைப் பெறவிட்டால் எதிர் பார்க்கும் பாடசாலை அனுமதிகள் கிடைக்காது போகும்நிலை உருவாகியுள்ளது. எதிர்பார்ப்பிற்கு அப்பால் பாடசாலைகளைத் தெரிவு செய்ய மனம் இடம்கொடுக்காத நிலையும் மறுபுறத்தில் வக்கிரமடைந்து வருகின்றது. எமக்குள் நாமே எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் பலமாக உருவாக்கிவிட்டு அதேநேரம் பிள்ளையைப் பயணிக்கவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். அது தப்பு. அவ்வாறான ஓர் இறுக்கமான சூழலில் திறன் விருத்தியைக் கட்டியெழுப்ப முடியாது. நாமெல்லாம் பிள்ளையை இறுக்கிப்பிடித்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைத்துவிட்டால் வென்றுவிட்டோம் என மார்தட்டுகின்றோம். ஆனால் பதைருவங்களில் பிள்ளைசார்ந்த ரீதியில் தோற்றுப்போவது எமக்குத் தெரிவதில்லை.

புள்ளிவிபர ரீதியாக இன்று பெரும் பிரச்சினை ஒன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வியில் இருந்து இடைநிலைக்கு வரும் போது(தரம்-06) இடைவிலகல்கள் பாரிய அளவு ஏற்படுகின்றன. இடைநிலையில் இருந்து உயர் நிலைக்கு வரும்போது(தரம்-12) அதைவிட பாரிய அளவில் இடைவிலகல்கள் அதிகரிக்கின்றன. மொத்த மாணவர் சனத்தொகையில் 5 வீதமானவர்கள் மாத்திரமே பல்கலைக்கழகங்களிற்குச் செல்கின்றனர் என்றால் மீதித் 95வீதமான மாணவர்களின் நிலையென்ன? இதில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர் பலர் உள்ளனர் என ஆய்வுகள் கூறுகின்றன. இது ஒருபுறமிருக்க, உயர்கல்விக்குத் தெரிவாகி அதாவது க.பொ.த உயர்தரத்தில் திறமைச்சித்தி பெற்று உயர்கல்வியைத் தொடர் வோரும்கூட கல்விச் சுமையைத் தாங்கமுடியாமல் இரண்டாம் மூன்றாம் வருடங்களில் இடை விலகுகின்றனராம். குறித்த வயதுப் பிரிவிற்குரியது, ஆற்றல் கல்வி முதுமைக்குரிய ஆற்றல் என வகுக்கப்பட்ட கலைத்திட்டம் ஏன் ஒரு சிலருக்கு மாத்திரம் சுமையாக இருக்கின்றது...? அதே வயதுப் பிரிவைச் சேர்ந்த, அதே உயர்தரப் பெறுபேற்றைப் பெற்று உள்ளேவந்த மற்றைய மாணவர் களால் அரங்கேற்ற முடிந்த உயர்கல்வியை ஏன் ஒரு சிலரால் அரங்கேற்ற முடியாமல் உள்ளது? தரம் 5 இல் அடுத்த வீட்டுடன் ஒப்பிட்டு தாய் தந்த அழுத்தமே இதற்கு அடிப்படைக் காரணம் கற்றல் தேடல்களை இரசனையுடனும் வாஞ்சையுடனும் தேடவில்லை. இதுவே இதற்கு அடிப்படைக் காரணம். பரீட்சைக்காக மாத்திரம் திணிக்கப்பட்டுள்ளது. எல்லைக்கப்பால் ஈடுபாடற்ற கல்வி தாக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது.

ஆகவே இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு தனிமனித வேறுபாடுகளை உணர்ந்து சுயமாகக் கற்றலில் ஈடுபாடு வரவைக்கும் நுட்பங்களை அறிந்துகொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளை அடுத்த பிள்ளைகளோடு ஒப்பிடாதீர்கள். தொடர்ச்சியாக பிரத்தியேக வகுப்புக் களிற்கு விட்டு கல்வியை வெறுக்க வைக்காதீர்கள். உயர்கல்வி தான் அவனின் வாழ்க்கையைத் தீர்மானிக் கும் உங்களின் வாழ்க்கை வெற்றியை நியாயப்படுத்த சிறுவயதில் பிள்ளைகளை உருட்டிப்பிரட்டாதீர்கள். அப்படியானால் பிள்ளையை சேதப் படுத்தாமல் கற்பிப்பது எப்படி என்று கேட்கின்றீர்களா...? உள்ளே சென்று வாரமொரு வாழ்வியற் சிந்தனையைப் புரட்டிப்பாருங்கள். பிள்ளை சேதப்படுத்தாமல் கற்றலில் ஈடுபட வழி சொல்கின்றோம். இந்த வாரமொரு காரத்தில் முன்வைத்த பிரச்சினைக்கு வாரமொரு வாழ்வியற் சிந்தனை பதில் சொல்கின்றது.

- வெண்கட்டியன்

# இந்தவாரம் உங்கள் பலன்

(12.11.2015 தொடக்கம் 18.11.2015 வரை)

### மேடம்

மற்றவர்களை நம்பி பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். விளையாட்டு துறைசார்ந்தவர் களுக்குப் பரிசு மற்றும் பாராட்டுதல்கள் கிடைக் கும். உற்றார் உறவினர்களின் திடீர்வரவால் மனம் மகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த பணஉதவிகள் கிடைக்கும். யாத்திரையின்போது வாகனங்களில் மிகுந்த கவனமுடன் பயணம்செய்து வரவும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். வீட்டைத் திருத்திக் கட்டி அலங்காரம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துவீர்கள். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்வாங்குவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

உடல்நிலையில் கண், காதுகளில் கவனமுடன் இருந்துவரவும். சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் பெரியவர்களின் உதவியால் நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். பொதுநலத் தொண்டுகளில் ஈடுபடுவோர்கள் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. குடும்பத்தில் மனஅமைதியுடன் சந்தோசம் நிலவும் காலமாகும். பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படுவதுடன் பொருட்செலவுகளும் ஏற்படலாம். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பெண்களால் தென்திசையில் இருந்து நல்ல செய்திகளுடன் பொருள்வரவுகள் உண்டாலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. சகோதர சகோதரகளின் திருமணம்போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். நாட்பட்ட பழைய வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ளது. வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவந்துசேரும் காலமாகும். வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. சகோதர சகோதரர்களின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள்.

### கடகம்

உறவினர்களின் வரவுகளால் எதிர்பாராத பணச்செலவுகள் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் கல்விபயிலும் இடங்களில் சிற்றில சச்சரவுகள் வர இருப்பதால் மிகுந்த கவ - னமுடன் கல்விபயிலுதல் சிறந்ததாகும். ரேஸ் லோட்டரிமூலமாக பணம் கிடைக்கலாம் எனக்கருதி ஏமாற்றம் அடையவேண்டாம். பெண்களால் வட திசையில் இருந்து பொருள்வரவுகள் உண்டாகும். நாட்பட்ட அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சம்பந்தம் இல்லாத நபர்களின் உதவியால் வெற்றிபெறுவீர்கள். பொருளாதாரத்தில் இது நாள்வரை இருந்துவந்த நெருக்கடிகள் மாறி பணப் புழக்கம் நன்றாக இருக்கும்.

### சிங்கம்

வெளிநாட்டு விசயங்களில் எதிர்பார்த்த நபர்களிடம் இருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனக்கசப்புகளும் அவர்களால் பணி இடமாற்றமும் ஏற்படலாம். செய்தொழிலில் பங்காளிகளுடன் இருந்த மனச்சஞ்சலங்கள் தீர்ந்து நிம்மதி அடைவீர்கள். ஆலயத்தொண்டுகளிலும், பொதுநலச் சேவைகளிலும் பிரியமுடன் ஈடுபட்டு நற்பெயர் எடுப்பீர்கள். சகோதர சகோதரிகளுடன் வீண் மனச்சஞ்சலங்களும் பிரச்சினைகளும் உருவாகும். புதிய வீடு நிலம் வாங்குவதற்காக வங்கிகள்மூலமாக எதிர்பார்த்து இருந்த உதவித் தொகைகள் கிடைக்கும். தாய்வழிமாமன்மூலம் சில பிரச்சினைகள் வந்துசேரும்.

### கன்னி

வெளிநாடுகள் சென்றுவருதல்போன்ற விசயங்களில் கவனம் தேவை. பழைய வீடு மற்றும் வாகனங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உடல்நிலையில் சுரம் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதை கள் வந்துபோகலாம். ஆலய வழிபாடுகளுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன்மூலம் மனநிம்மதி அடைவீர்கள். உடம்பில் தலைவலி, முதுகுவலி போன்ற உபாதைகள் வந்துபோகலாம். கணவன் - மனைவி உறவுகளில் இன்னும் சற்று பிரச்சினைகள் வந்துபோகலாம். உத்தியோகம் இல்லாத படித்த இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கக்கூடிய காலமாகும்.

### துலாம்

பொருளாதாரம் சற்று சுமாராகவே இருப்பதால் புதிய கடன்களை வாங்க முயற்சி செய்வீர்கள். நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். வங்கிகளின்மூலம் எதிர்பார்த்து இருந்த பணம் கை வந்துசேரும். காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தந்தை மகன் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்த பிரச்சினைகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றிபெறலாம். பங்காளிகளுடன் செய்தொழில் விசயங்களில் சற்றுப் பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.

### விருச்சிகம்

குடும்பச்சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் இன்னும் சிறிது காலம் நீடிக்கும். புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். வெகு காலமாக எதிர்பார்த்து இருந்த வங்கி உதவித் தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பழைய இரும்புகள், இயந்திரம், இரசாயனம் போன்ற தொழிற்சாலைகளில் பணிசெய்வோர்கள் இவற்றை வாங்குவோர் அழுகல் சம்பந்தமான மீன், முட்டை, இறைச்சி போன்ற உணவுப்பொருள் வியாபாரிகள், அணு ஆராய்ச்சி துறை சார்ந்தவர்கள் ஆகியோர்கள் நற்பலன் அடைவீர்கள். புதிய வீடு வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் இன்னும் சிறிது கால தாமதம் ஏற்படலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிக கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும் காலமாகும். கணவன் - மனைவி உறவுகளுக்குள் சிறிய பிரச்சனைகளுக்காக வீண் மனக்கசப்புகள் வந்துசேரும். மாமன்வழியின்மூலமாக எதிர்பாராத சில ஆதாயங்கள் அடைவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களுடன் நல்ல மதிப்பெண்களையும் பெறுவார்கள். சமுதாய நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் பெயர், புகழ் ஏற்பட்டு அதனால் மனமகிழ்ச்சி அடையும் காலமாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் வெகுவாகக் குறைவதன் மூலம் மருத்துவச் செலவுகள் குறைய வாய்ப்பு உள்ளது.

### மகரம்

தீராத நாட்பட்ட நோய்கள்தீர புதிய முயற்சிகளை மேற்கொள்ளுவீர்கள். மாணவர்க ளுக்கு கல்விபயிலும் இடங்களில் அவப் பெயர்கள் வரவிருப்பதால் எச்சரிக்கையுடன் கல்வி பயிலுதல் நல்லது. வீடு மற்றும் தொழிற்சாலைகளைப் புதிய இடங்களுக்கு மாற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எடுத்துக் கொண்ட முயற்சிகள் நிறைவேறும். நண்பர்களால் பொருள் நஷ்டமும் மனச்சஞ்சலமும் ஏற்படலாம். புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். உடம்பில் கண், காது களில் சிற்சில உபாதைகள் வந்துபோகும். நாட்பட்ட சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் மிகு எச்சரிக்கையுடன் இருக்கவும்.

### கும்பம்

தந்தையின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் சற்றுக் குறையும். கணவன் - மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். தாயின் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். வெகுதூரப் பயணங்களால் எதிர்பார்த்த காரியங்கள் நிறை வேறும் காலமாகும். நீண்டகாலமாக வராமல் இருந்த கடன்கொடுத்த பணம் பொருட்கள் திரும்பக் கைக்கு வந்துசேரும். பங்காளிகளுடன் சேர்ந்து நடத்தும் கூட்டுத் தொழிலில் காரணமற்ற பிரச்சினைகள் உருவாக இருப்பதால் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். வீட்டைத் திருத்திக்கட்டுவதில் கவனம் செலுத்துவீர்கள். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கோண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

### மீனம்

காதல் விசயத்தில் மிகுந்த எச்சரிக்கை யுடன் இருப்பது நன்றாகும். தந்தைவழிப் பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரும். உடம்பில் வாயு வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். கணவன் - மனைவி உறவுகளில் காரணமற்ற வீண் பிரச்சினைகள் உருவாகி மனக்கசப்புகள் ஏற்படலாம். புதிய கடன்களைவாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். வட்டித்தொழில் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது நீண்டதூரப் பயணங்களின்மூலம் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்றுவருவார்கள். நண்பர்கள் உறவினர்களின் வீட்டுச்சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள்.




## கறி வாங்கினால் காதலி இலவசம்

தனிமையில் வாடுகின்ற ஆண்களை கவர்கின்ற நோக்கத்தில் ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ள கறிக் குழம்புக் கலவை பைக்கற் அதீத பிரசித்தி அடைந்துள்ளது. "கறிவாங்கினால் காதலி இலவசம்" என்கிற பிரசார உத்தியே இதற்கு காரணம் ஆகும். ஜப்பானிய ஆண்கள் சமைத்துக் கொடுக்கின்ற காதலிக்காக பெரிதும் ஏங்குகின்றார்கள். இந்நிலையில் கறிக் குழம்புக் கலவைப் பைக்கற்றுகளுக்குள் கவர்ச்சி மொடல் ஒருவரின் சமையல் குறிப்பு அடங்கிய டி.வி.டியும் வைத்து விற்கப்படுகின்றது.

டி.வி.டியில் தோன்றுகின்ற கவர்ச்சி மொடல் உங்கள் காதலிபோல நடிப்பார். அதேநேரம் கறியை சமைக்கின்ற முறையையும் சொல்லித்தருவார். எனவே உங்களுக்கு சமைக்கக் கறி கிடைக்கின்ற அதேநேரம் சமைத்துத் தருகின்ற காதலியும் கிடைக்கின்றார் அல்லவா?

## கடல் தொழிலுக்கு உதவும் குதிரைகள்

பெல்ஜியத்தில் கடல் தொழிலுக்கு குதிரைகள் பேருதவி யாக உள்ளன. குறிப்பாக இறால் பிழப்புக்கு துணை செய்கின்றன. கடலில் குறைந்த அலைகள் வீசுகின்றபோது கடல் தொழிலாளர்கள் குதிரைகளில் சவாரி சென்று வலைவீசி இறால் பிழக்கின்றார்கள். வலைகளை வலிந்து இழுக்க குதிரைகள் பயன்படுகின்றன.



## எருமைக்கும் முதலைக்கும் பிறந்த விலங்கு

தாய்லாந்தில் நீர் எருமைக்கும், முதலைக்கும் இடம்பெற்ற கலவியில் அதிசய மான இராட்சத விலங்கு ஒன்று பிறந்து உள்ளது. இது பாதி எருமை போலவும், பாதி முதலை போலவும் தோற்றத்தில் காணப்பட்டது. பிறந்து மூன்று மணித்தியாலங்களில் இவ் விலங்கு இறந்துவிட்டது. இவ் விலங்கின் பிறப்பு அதிர்ஷ்டத்தின் அடையாளம் என்று சொல்லி மகிழ்கின்றார் நீர் எருமையின் சொந்தக்காரர். அதேபோல இவ்விலங்கை நல்லடக்கம் செய்து சமாதித் தெய்வமாக ஊர் மக்கள் கும்பிடுகின்றார்கள்.






## மீட்புப் பணியாளர்களின் நம்பிக்கை

பாகிஸ்தானின் லாகூர் நகரத்தில் 4 மாடிகள் கொண்ட தொழிற்சாலை ஒன்று கடந்த வாரம் இடிந்து தரைமட்டமானதில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு, ஏராளமானோர் காயப்பட்டனர். ஆயினும் இடிபாடுகளுக்குள் சிக்கி இருப்பவர்களை காப்பாற்றுகின்ற பகீரத முயற்சியில் மீட்புப் பணியாளர்கள் நம்பிக்கையுடன் ஈடுபட்டார்கள்.


## பிரமாண்ட நத்தார் மரம்



நத்தாரை முன்னிட்டு அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரம் கடந்த வாரம் நடத்தப்பட்டது. இது 78 அடி உயரமும், 47 அடி விட்டமும், 10 தொன் எடையும் கொண்டது.

## திறந்த புத்தகத்தின் தோற்றத்தில் கதிரைகள்



துருக்கியின் தலைநகர் இஸ்தன்பூலில் உள்ள வீதிகள், பஸ்தரிப்பு நிலையங்கள், பூங்காக்கள் போன்றவற்றில் அமைக்கப்பட்டு உள்ள ஆசனங்கள் திறந்த புத்தகத்தின் தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் இந்நாட்டு முன்னணி அறிஞர்களின் பொன்மொழிகள் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு உள்ளன. வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கின்ற உத்தியாக மாத்திரம் அன்றி மக்களை கலையம்சங்களை நோக்கி ஈர்க்கின்ற வித்தையாகவும் இம்முன்னெடுப்பு முடுக்கி விடப்பட்டுள்ளது.

தொகுப்பு: இந்திரன்